


ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
தை
2020
265ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல**
**மற்றைய தேற்றா தவர்.**

**பொருள் :** களவைத் தவிர வேறொன்றையும் அறியாதவர் அளவு கடந்த தீமைகளைச் செய்து அப்பொழுதே கேடுவர்.

(289)

**கள்வார்க்குத் தள்ளும் உயர்நிலை கள்ளார்க்குத்**
**தள்ளாது புத்தே ளுலகு.**

**பொருள் :** களவிலே பழகினவர்க்கு உடம்பும் தவறிப்போம்; களவிலே பழகாதவர்க்குத் தேவருலகம் தவறாது கிடைக்கும்.

(290)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### இலங்கையானே

**கலிவிருத்தம்**



எனக்கினி யான்பிறர் யாவர்க்கு மினியான்
தனக்கொப் பிலாதான் தத்துவா தீதன்
சினக்குங் கரியுரி திருமேனி போர்த்தான்
வனப்புறுஞ் சோலைசூ ழிலங்கை மன்னுமே. 11

எங்கு முள்ளவன் எல்லாம் வல்லவன்
மங்கையோர் பாகன் மான்மழுக் கையினன்
பங்கயன் மால்பறந் திடந்துங் காணான்
கொங்கவிழ் காவிலங்கை கோயில்கொண் டானே. 12


என்னை யென்னா லெனக்கறி வித்தவன்
அன்னை தன்னினு மன்புமிக் குள்ளவன்
தன்னை யெவரு மறியாத் தலைமையன்
தென்னைசே ரிலங்கை தேடியாண் டானே. 13

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 265



2020 **பொருளடக்கம்** தை


| | | |
|---|---|---|
| குரு நிந்தை | கு. சிவபாலராஜா | 01 - 05 |
| ஈழத்து உரையாசிரியர்... | அ. சிவானந்தநாதன் | 06 - 08 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 09 - 12 |
| கல்கி அவதாரச் சிறப்பு | திருமதி ப. நடராசா | 13 - 17 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 18 - 20 |
| நாரத முனிவரும் கொடிய... | பூ.க. இராசரத்தினம் | 21 - 22 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 23 - 27 |
| புராண படனம் என்பது... | கே.எஸ். சிவஞானராஜா | 28 - 30 |
| மனிதன் தாவர போசணியே! | செ. கந்தசத்தியதாசன் | 31 - 35 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 36 - 37 |
| தீப வழிபாடு | திருமதி பொ. திலகவதி | 38 - 39 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 40 - 41 |
| சுவாமி விபுலானந்த அடிகளார் | திருமதி ச. புனிதவதி | 42 - 43 |
| தீட்சையும் ஞான முத்தியும் | திருமதி சி. சறோஜினிதேவி | 44 |
| விழாக்கள் இரண்டு | வல்வையூர் அப்பாண்ணா | 45 - 60 |
| துளசி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 61 - 62 |
| கோபுர தரிசனம் கோடி... | ப. கோபாலகிருஷ்ண ஐயர் | 63 - 66 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 67 - 71 |
| ஆராலும் வெல்ல முடியாத... | கே.எஸ். ராஜா | 72 - 73 |
| சமுதாயப் பணிகள் | தொகுப்பு | 74 - 79 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 80 - 81 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 82 - 84 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)
சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை
தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406
அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



"KALAA POOSHA
K.S.SIVAGNANA
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

சிவமயம்

குருபாதம்


நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*

*இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள்*

*வழங்கிய*

# ஆசிச் செய்தி



1998ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மாதமொரு மலராக - தொடர்ச்சியாக வெளிவந்து இன்று 265ஆவது மலராக "ஞானச்சுடர்" வெளியாகும் இத் தருணத்தில் இந்த ஆசிச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யுத்த சூழல் - அதன் காரணமான காகிதத் தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களினால் ஏற்பட்ட நெருக்கடியான கட்டங்களைத் தாண்டி தூய சமய சஞ்சிகையாக "ஞானச்சுடர்" வெளிவருவது செல்வச்சந்நிதி வேலவனின் திருவருளே.

"ஞானச்சுடர்" மலரானது இன்னும் பல்லாண்டு காலம் மலர்ந்து - பிரகாசித்துச் சமயப் பணியாற்றிட நாம் அனைவரும் எப்போதும் உறுதுணையாக நிற்போம்.

"வாழ்க ஞானச்சுடர்"

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவைப் போஷகர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.*

# வல்வை சிவன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளிவரும் ஞானச்சுடரானது 23ஆவது அகவையில் கால் பதிப்பதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

சமய விழுமியங்களைக் கொண்ட இதழாகவும், மக்களை ஆன்மீக செயற்பாட்டில் ஈடுபட வைக்கும் இதழாகவும் தொடர்ந்து வெளி வருகின்றது. உண்பதற்கு அறுசுவையுடன் கூடிய உணவையும், மக்கள் சமய விழுமிய மரபுகளை அறிந்துகொள்வதற்குரிய அறிவுக் களஞ்சியமாக ஞானச்சுடரினையும் வெளிக் கொணரும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரையும் பாராட்டுகின்றேன்.

இத்தகைய செயற்பாடுகள் தொடரவும் சுவாமிகள் நீண்ட ஆயுளுடன் வாழவும் ஆற்றங்கரை வேலவனைப் பிரார்த்தித்து நல் ஆசிகளையும் வாழ்த்துக் களையும் தெரிவிக்கின்றேன்.

"லோகா சமஸ்த சுகினோ பவந்து"

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவைப் போஷகர்
கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
*சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்*
பிரதமகுரு:
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்.
வல்வெட்டித்துறை.

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச் செய்தி



ஞானச்சுடர் தைமாத இதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

எத்தனை இடர்பாடுகள், கஷ்டங்கள் வரினும் ஞானச்சுடர் மலர் மாதம்தோறும் தவறாது மலரும். இதற்கு மூலகாரணம் அந்த ஆற்றங்கரையானின் திருவருளும் ஆச்சிரம முதல்வர் திரு செ. மோகனதாஸ் சுவாமிகளின் ஆற்றுப்படுத்தலுமேயாகும்.

எனவே இம்மலர் மலர்ந்து பாரெங்கும் வாடா மலராக நறுமணம் வீசவும் ஆச்சிரமப் பணிகள் செவ்வனே நடைபெறவும் எனது நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"வாழ்க வளமுடன்"
"வாழ்க பல்லாண்டு"
சுபம் - மங்களம்.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவைப் போஷகர்
***சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்*** J.P
இந்துமத குருபீடாதிபதி
பிரதமகுரு:
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதிமுதல்வரும் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை

உலகம் போற்றும் எமது சமயப் பெருமக்களை நம்மவர்கள் உணர்ந்துகொள்ள ஆற்றுப்படுத்தும் மலராக ஞானச்சுடர் தொடர்ந்து வெளிவருகின்றது.



சந்நிதியெம் பெருமானுடைய திருவருள் - மயில்வாகனனார் குருவருள் - ஆச்சிரமத்தின் மீதான இறையருள் - ஆர்வலர்களது நிறையருள் எனப் பல காரணிகள் ஒருங்கே சங்கமிப்பதால் இந்த வெற்றி சாத்தியமாகின்றது.

ஞானச்சுடர் வெறுமனே ஓர் ஆன்மீக இதழாக மாத்திரம் தன்னை வெளிக்காட்டவில்லை. தன்னுடன் இணைந்த வாசகர் களையும் எழுத்தாளர்களையும் தன்னுடன் அரவணைத்து வளர்த் துச் செல்லும் உயர் தொண்டையும் ஆற்றி வருகின்றது.

இன்று பக்தி என்ற போர்வைக்குள் பல்வேறு செயல்கள் அரங்கேறுகின்றன. சமயம் என்பது ஆன்மாவின் உய்விற்கான தேடலைக் காட்டும் வழி என்று யாரும் நினைப்பதில்லை. வருவாய் ஈட்டிக்கொள்ளும் உபாயமாகவே பெரும்பான்மையோர் கைக்கொள்கின்றனர். தக்கது எது? தகாதது எது? என்று சமயத்தின்பால் வழிப்படுவோருக்குச் சொல்ல வேண்டிய தேவை குருமாருக்கு உண்டு. இங்கு குரு என்பது தனியே கிரியைகளை மேற்கொள்ளும் குருக்கள்மாரை மாத்திரம் குறிக்கவில்லை. உபதேசச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சகலரையும் இப்பதம் குறித்து நிற்கின்றது. சொல்லவல்ல கருத்துக்களை எழுத்து வடிவில் வழங்குவது பலருக்கும் நீண்டகால நோக்குடன் பயன் விளைவிக்கக்கூடியதாக இருக்கும். இது பலரும் அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மையாகும். ஞானச்சுடர் குருவின் நிலையில் நின்று எமக்கு அறிவூட்டி ஆற்றுப்படுத்துகின்றது.

ஞானச்சுடரை நாடும் ஆர்வலர்கள் பல வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் உடனுக்குடன் ஞானச்சுடரைப் பெற்றுக்கொள்ள தக்கவகையில் மின்னிதழாக ஞானச்சுடரைப் பிரசுரிக்க வேண்டும். கைப்பேசியில் வாசிக்கும் பழக்கம் இன்று எம் இளையோர் மத்தியில் செல்வாக்குப் பெற்று வருகின்ற நிலையில் அதற்கேற்ப வகையிலும் ஞானச்சுடர் வெளியீடு அமைதல் நலம். காலத்திற்கேற்ற தேவையான மாறுதல்களை நாம் கண்டேயாக வேண்டும்.


சிவத்தமிழ் வித்தகர் அமரர் சிவ. மகாலிங்கம் ஐயாவின் கலாசாலை மாணவன் என்ற முகவரியுடன் 1998இல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் கால்பதித்த எனக்கு ஆச்சிரம சுவாமிகளின் அன்பும் ஆற்றங்கரையானின் அருளும் என்னை வழிப்படுத்தி வளப்படுத்தின.

ஞானச்சுடரால் வளம்பெற்றோர் வரிசை இன்று நீண்டு வருகின்றது. வரிசையில் ஆரம்பப் புள்ளியில் நிற்பவன் என்ற வகையில் எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் பகிர்வதில் உவகையுறுகின்றேன்.

எமது மண்ணின் பக்தி அடையாளமாக ஞானச்சுடர் தொடர்ந்து இலங்கிடச் சந்நிதியெம் பெருமானுடைய திருவருளுக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

# எல்லாம் அவன் செயல்

சந்நிதியான் ஆச்சிரம மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" 22 அகவையைப் பூர்த்தியாக்கி, அகவை 23இல் காலடி பதிக்கும் இவ்வரிய நன்னாளில் ஆச்சிரமம் சார்ந்த எனது அவதானங்களையும் அனுபவங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.



சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் அடிக்கடி உதிர்க்கும் வார்த்தைகள் "எல்லாம் அவன் செயல்" சந்நிதி வேலவன் என்னைப் பணிக்கின்றான். நான் ஒரு கருவியாக இருந்து இக்கருமங்களை ஆற்றுகின்றேன்" என்னே! தன்னடக்கம், என்னே! தெய்வ நம்பிக்கை, என்னே! சரணாகதி. எங்கு ஒருவருக்கு மனம், வாக்கு, காயம் ஒரு நிலைப்பட்ட திரிகரண சுத்திநிலை ஏற்படுகிறதோ, தெய்வ நம்பிக்கை சரணாகதி நிலை அடைகிறதோ அந்த உயிர்களில் முருகனின் அருளொளி வீசுகிறது.

ஆச்சிரம முதல்வரின் திரிகரண சுத்தியும் நேர்கொண்ட பார்வையும் தற்துணிவும் உயிர்கள்பால் கொண்ட காருண்யமும், ஆச்சிரமப் பணிகள், சேவைகள் எட்டுத்திக்கும் எவ்வித விக்னமும் இன்றி இடையறாது இடம்பெறக் காரணமாகின்றன. ஆச்சிரமப் பணிகளை நாம் வேறாகப் பட்டியலிட வேண்டுமா? நாளும் பொழுதும் கண்ணெதிரே நாம் காணும் ஆச்சிரமத்தின் சேவைகளும் பணிகளும் சிந்தனைக்கு எட்டாதவை. ஆனாலும் நிஜத்தில் நிறைவேறுபவை. இவற்றிற்கு துணை நிற்பது தெய்வ அனுக்கிரகமன்றி வேறென்ன.

இராமர் அணை கட்ட, வானரப்படையுடன் ஒரு சிறு அணில் உதவி செய்தது போன்று ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளுக்கெல்லாம் சிரத்தையோடு இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும், அடியவர்களாகிய நாமும் பூவோடு சேர்ந்த நாராக மணக்க வரம் பெற்றோம். மனதார நன்றி கூறுகின்றோம்.

அவுஸ்திரேலியா நாட்டின் விக்ரோரியா மாகாணத்திலே மிக அண்மைக் காலத்திலே ஏற்பட்ட காட்டுத் தீ பற்றியும் ஏற்பட்ட பல மனித உயிரிழப்பு பல்லாயிரக்கணக்கான அப்பிராணிக் காட்டு விலங்குகள் பலகோடி பொருள் அழிவு பற்றியும் நாம் அனைவரும் அறிந்து கவலையடைந்தோம். தீயணைப்புப் படையினர் பலர் தம் உயிர்களையும் ஈந்தும் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஈற்றில் மழை பொழிந்து தீ கட்டுக்குள் வந்தது. நாம் இயற்கையைச் சீண்ட இயற்கை சமநிலை குலைந்து பஞ்சபூதங்கள் எமை விழுங்க நாமே காரணங்களாகின்றோம். பாதுகாப்பான பூமியை எமது எதிர்கால சந்ததிக்கு விட்டுச்செல்ல மாசற்ற மனம், மாசற்ற நிலம், மாசற்ற நீர்நிலை, மாசற்ற காற்று, மாசற்ற ஆகாயம் என்ற தொனிப் பொருளில் இயற்கை சமநிலை பேணும் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆச்சிரம அடியார்கள், அயலவர்கள், ஆர்வல மட்டத்தில் ஆச்சிரமமும் தன்னாலான முயற்சிகள் செய்யும் என பணிவுடன் எதிர்பார்க்கின்றேன்.

**திரு சி. பத்மநாதன்**
இளைப்பாறிய பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி, யாழ் பிராந்தியம்.

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

மார்கழி மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும் தன்னாலான ஆதரவை நல்கி வருபவருமான குப்பிளான் கிராம சேவையாளரும், சமயவாதியுமாகிய திரு சோ. பரமநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

வருடா வருடம் மார்கழி மாத மலருக்குரிய வெளியீட்டுரையை செய்து வருவதன் காரணமாக ஞானச்சுடரின் வளர்ச்சியை உற்றுநோக்கும்போது எனக்கே பிரமிப்பாக இருக்கின்றது. ஒரு மலரை வெளியிடுவதென்பதே கல்லில் நார் உரிப்பதுபோல் மிகவும் சிரமமான காரியம். ஆனால் இம்மலர் கடந்த 22 வருடங்களாக தொடர்ந்து வெளிவருவதென்பது சந்நிதி வேலவனது பேரருள் என்றே கூறவேண்டும்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல பணிகளுக்கும் ஒரு கட்டமைப் புடன் கூடிய பேரவை இருப்பதுபோல் எல்லாக் கிராம மட்டங்களிலும் இருக்குமானால் நாட்டில் சமய வளர்ச்சி மேலோங்கும் என்பது திண்ணம். அந்தந்தக் கிராமத்தைச் சேர்ந்தோர் தன்னலம் கருதாது முன்நின்று உழைப்போமானால் நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்பலாம் என்று கூறித் தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

264ஆவது மலராக வெளிவந்த மார்கழி மாத ஞானச்சுடரின் மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளரும் சிவபூமி நிறுவனத்தோடு இணைந்து பணியாற் றுபவரும், சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளுக்கெல்லாம் தங்களாலான ஆதரவை அளித்துவரும் குடும்பத்தைச் சார்ந்த திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் ஒரு ஆன்மீக வாதியாகவும் ஆசிரியத் தொழிலில் பலவித பதவிகளை மேற்கொண்டு உயர்ந்த காரணத்தால் தற்காலச் சூழலில் நாட்டில் இடம்பெற்று வருகின்ற கலாசாரச் சீர்கேட்டின் தன்மைகளையும் இன்றைய இளம் சமுதாயத்தின் ஒழுக்க விதி மீறல்கள் பற்றியும் சபையில் வீற்றிருந்த அடியார்களுக்கு குறிப்பாக பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறினார். பெற்றோர் தத்தம் கடமைகளிலிருந்து விலகிச் செல்லும் போக்கில் இருப்பதால் இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முடியாதுள்ளது. பெற்றோராகிய நாம் அனைவரும் ஒன்றித்துப் பயணித்தால் இதிலிருந்து மீளலாம் என்று கூறியதுடன் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஞானச்சுடர் பேருதவி புரிகிறது என்றும் கூறினார்.

இம்மாத மலரில் இடம்பெற்ற ஆக்கங்கள் அனைத்திலும் இளம் சமுதாயத்தைப் பற்றிய இவ்வகைக் கருத்துக்கள் பிரதிபலிக்கின்றது என்றதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி எடுத்துக்கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

ஞானச்சுடர் தனது 22 வயதினைப் பூர்த்தி செய்து 23ஆவது வயதில் காலடி பதிக்கிறது. 23 வயது என்பது அழகு மிளிரும் கட்டிளம் பருவம். அந்தப் பருவத்திற்கு ஏற்றபடியாக கட்டுரைகளும் கவிதைகளும் தரம் உயர்ந்திருப்பதை வாசகர்களாகிய உங்கள் கடிதங்கள்மூலமாகப் பார்த்தும் - தொலைபேசி அழைப்புக்கள் மூலமாகக் கேட்டும் நம் உள்ளம் பூரிப்படைகின்றது.

நிறைவு மட்டுமல்ல, குறைகளும் அந்தந்த வேளைகளில் சுட்டிக்காட்டப்படுவதும் - முடிந்தவரை நாம் அதனை நிவர்த்திப்பதும் அடிக்கடி நிகழ்வன.

காலம் தாழ்த்தி கட்டுரைகளையும் - கவிதைகளையும் பிரசுரிக்கின்றீர்கள் என ஒரு கவிதையாளரின் விமர்சனத்தையும் நாம் ஒளிவு மறைவின்றி இம்மலரில் பிரசுரித்துள்ளோம்.

"ஞானச்சுடரின்" ஆரம்ப காலங்களில் கட்டுரைகள் - கவிதைகள் பெறுவதற்காக ஆச்சிரம சுவாமிகள் அவரவர் வீடுகளுக்குச் சென்று பல மணிநேரம் காத்திருந்து கட்டுரைகள் பெற்றுவந்து பிரசுரித்த காலத்தினை சுவாமிகள் இன்றும் நினைவு கூருகிறார்.

ஆனால் இன்று தினம் தினம் கவிதைகளும் - கட்டுரைகளும் நேரிலும், தபால் மூலமும் வந்து சேருவதை சீர்செய்து பட்டியலிட்டுப் பாதுகாத்து பிரசுரத்திற்கு அனுப்புவதே பெரும் பணியாகவுள்ளது. இதைவிட E.Mail மூலம் கட்டுரைகளை அனுப்பும் புதியபாணி அண்மைக் காலமாக வளர்ந்திருக்கிறது.

எல்லா ஆச்சிரமப் பணிகள் மத்தியிலும் மாதாந்தம் பிரசுரிக்க வேண்டியவைகளைத் தெரிவு செய்து, அச்சேற்றி முடிந்தவரை பிழைகளின்றித் திருத்தி, உரியவேளையில் உங்கள் கரங்களில் ஞானச்சுடரினை ஒப்படைப்பதை நாம் ஒரு தவமாகவே செய்து வருகிறோம். இத்தகைய அவசர அரங்கேற்றலில் ஆக்கங்கள் கால தாமதமாவது தவிர்க்கமுடியாதுள்ளது.

அனுபவமுள்ள கட்டுரையாளர்களின் ஆக்கங்கள் அவற்றின் சிறப்புக் கருதி அடிக்கடி பிரசுரமானாலும், புதிய எழுத்தாளர்களதும், கவிதையாளர்களதும் ஆக்கங்களை அறிமுகம் செய்து - ஊக்கப்படுத்தி - மேலும் மேலும் எழுதத் தூண்டிவரும் நன் முயற்சியினையும் நாம் மேற்கொண்டிருப்பது நீங்கள் அறியாததல்ல.

இன்னும்... இன்னும் அறிமுக எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்காகக் காத்திருக்கிறோம்.

"ஞானச்சுடர்" வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்து ஆலோசனைகள் கூறி - வழிநடத்தி- வாழ்த்தி நிற்கும் அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

இடுப்ர சங்கி யாம லுலைய நந்த கோடி
யெரியில் வெந்தி டாத கரிநி ரம்ப வேணும்
இதுபழைய கவுரி பாஷாண வுண்டை
யிடுசகல வேதி பூநாக செம்பின்
ஈய மானதொ ரிரதமு மெண்பல
மேழு கோடியு மிரவு சிவந்திடும்
யமுனை நீர்கொடு குகைபதி னாயிர
மிறுக வேசமை நிலவறை யூடுவை
எழுபதொ டெண்பது வண்டியி லேபத
ரிடுகொடு வந்து சொரிந்து குவாலிடு
யாமொழி படரச வாதந் தந்தன
நீசிவ குருவுப காரங் கண்டிரு
இரதமொ டுருகிய சருகு பித்தளை
யிவையிவை குகைதொறு மிடை நறுக்கிவை
எற்ற வந்தி ராது பொய்க்காளல
வெட்டி ரண்டு மாறு தப்பாதுகொள்
எழுப தக்ரோணி புடமுள செங்களம்
ரணமு கத்தானை படையொடு வந்திரு
ஈழம்வெகு கோடி யாமீந்திட
வேழுநிலை மாட நீமேய்ந்துகொள்
இபத்திர ளுரித்தன பருத்தன துருத்திக
ளிலக்கற வுனக்கரு கடுக்கிவை சடக்கென
யாவும் வாய்ப்பது சத்ய முனக்கிவை
யேழு நாட்டரு மெத்த வினைத்தனம்.

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்**

திரு சி. பத்மநாதன்
திரு வ. சண்முகநாதமுதலி
திரு க. சுசீந்திரன்
திரு ந. நாகேஸ்வரன்
திரு இ. யோகராசா
திரு தி. சிவகுமாரன்
திரு க. சண்முகலிங்கம்
திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை
திரு பி. கிருஸ்ணானந்தன்
திரு க. ஞானசீலன்
திரு த. சிவகுமார்
திரு பொ. தங்கராசா
திரு எஸ். இராஜேந்திரம்
திரு க. ஞானச்சந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திரு க. அமிர்தலிங்கம்
திரு து. பாலேந்திரா
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
திருமதி சு. விஜயகுமார்
திரு K. சிவப்பிரகாசம்
செல்வி விமலா கந்தையா
திருமதி கீர்த்திகா சிவதீபன்
திரு த. தவேந்திரராஜா
திரு க.து. ஜெகநாதன்
திருமதி சுகந்தி தயாபரன்

25

**மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள்**

திரு கு. கோடீஸ்வரன்
திரு சி. நித்தியானந்தன்
திருமதி வி. பிரியகாந்தினி
திருமதி T. பிரதீபா
திரு ம. மாலவன்
திரு பொ. தேவநேசன்
திரு ப. உதயனன்
திருமதி சு. சிந்துஜா
திரு S. ஸ்ரீரங்கநாதன்
திரு த. ஸ்ரீதரன்

10

## மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி உத்தியோகத்தர்கள்

திரு ப. பார்த்தீபன்
திருமதி செ. ஞானேஸ்வரி
திருமதி பி. ஜனனி
திருமதி இ. பத்மகலா
திருமதி தி. வானதி
திருமதி க. செல்வமலர்
செல்வி மு. ஹேமப்பிரியா
திரு ஞா. யுகதாஸ்
திருமதி பி. சிந்துளா
திருமதி த. லோஜினி
திருமதி ஜெ. பகீரதி
திருமதி ப. சுதர்சினி
திரு கு. குலசீலன்
திரு ந. சஞ்சீவ்
திரு கோ. அஜந்தன்
திருமதி க. புவனகுமாரி
திருமதி தி. நித்தியா
திருமதி சு. பிரசாந்தினி
திருமதி பி. சிவசொரூபி
திருமதி பி. நீரஜா

20

## மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள்

திரு க. விஜயகுமார்
திருமதி ப. ரம்யா
திருமதி S. லாவண்யா
திருமதி ஜெ. சயந்தினி
திரு G. ஜெயகணேசன்
திரு ச. கெங்காதரன்
திருமதி உ. சுபாஜினி
திருமதி ஜெ. நேமினா
திருமதி S. லக்ஷாந்தி
திருமதி S. உஷாந்திகா
திருமதி I. தம்சிகா
திரு T. அனுசன்

12

**மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்**

07

திருமதி சு. யாழினி
திருமதி சு. வனஜா
திருமதி கி. மனஸ்வினி
திருமதி உ. குகன்யா
திருமதி கா. மீரா
திருமதி ப. ஜசிகா
செல்வி இ. ஜமுனாவாணி

**மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள்**

05

திரு சி. பகீரதன்
திருமதி இ. சுமணா
திருமதி ச. கிருபாளினி
திருமதி சை. சுமித்திரா
திருமதி S. அனுஷா

**மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள்**

17

திரு சி. மோகனச்செல்வன்
திருமதி தி. புஷாலினி
திரு ம. சுவிற்சன்
திருமதி பு. சாருலதா
திருமதி ச. சுகிர்தகுமாரி
திரு இ. ஜெயகாந்தன்
செல்வி ச. ஹம்சா
திருமதி க. நந்திக்குமார்
திரு த. தனரஞ்சன்
திரு சி. பிரதீபன்
செல்வி இ. கீர்த்திகா
திருமதி சு. அஜந்தன்
திரு தே. இரஜீவன்
திரு த. ஜெயபிரதாப்
திருமதி ல. நிஷங்கா
செல்வி த. கோபிகீதா
திரு ச. ஜனாங்கணன்

**மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள்**

திருமதி உ. தனுஷ்யா
திரு ம. லம்போதரன்
திரு ப. புவிராஜ்
திருமதி M. ஜிந்துஜா
திருமதி R. சரணியா
திரு ப. சுமன்
திருமதி K. சசிகலா
திருமதி ஹெ. இசைவாணி
திரு நிஷாந்தன்
திருமதி அ. சுகன்யா
திரு இ. சந்திரகோபன்
திரு ச. சுஜன்
திருமதி க. மலர்மதி

**மக்கள் வங்கி காங்கேசந்துறை உத்தியோகத்தர்**

திரு செ. சரத்சந்தர்
திரு R. ஆனந்தராஜா
செல்வி லி. மயூரி
திரு S. சிவகுமார்

**மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள்**

திரு A. பிரான்ஸிஸ்
திருமதி சி. தமயந்தி
செல்வி நா. கிருஷிகா
திரு மு. தேவேந்திரன்
திருமதி ஐ. அனோஜா
திருமதி A. மதுஷா

**மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள்**

திருமதி S. பானுஜா
திருமதி K. யாழினி
செல்வி நா. நிலோசனா
திருமதி பி. ஜனனி
திருமதி த. லக்ஷி
திரு தா. தவராசா
திரு அ. கோகுலரூபன்

**மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள்**

06

திருமதி P. கிருபாளினி
திருமதி சு. மாதங்கி
செல்வி R. சசிதா
செல்வி த. லக்கிமாலா
திருமதி S. வித்தியா
திரு G. லதீகரன்

**மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள்**

07

திரு P. சஞ்சீவ்
திரு செ. உமாசங்கர்
திருமதி கே. உதயசாந்தி
திரு இ. வாகீசன்
திருமதி வி. நிர்மலா
திருமதி கி. பிரசாந்தினி
திரு ஆ. பரணன்

**மக்கள் வங்கி நெல்லியடி உத்தியோகத்தர்கள்**

04

திரு தெ. ஹர்சன்
திரு சி. மனோராஜ்
திருமதி P. யாழினி
திருமதி அ. மீரா

**மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள்**

12

திரு ச. சர்வானந்தன்
திரு வி. ஜெயமோகன்
திரு க. கமலக்ஷன்
திருமதி ஜெ. நிமாலினி
திருமதி த. சுகந்தி
திருமதி த. சங்கீதா
திரு வி. கஜதீபன்
செல்வி சு. அருணா
திருமதி A.M. கானப்பிரியா
திருமதி உ. சுபாசினி
திரு வி. சிவபாலன்
திரு S. கிருபாகரன்

**மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள்**

திருமதி ம. அகிலா
திரு என். கோபி
திரு T. லிங்கராஜ்

**மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள்**

திரு அ. ஐங்கரன்
திரு க. மதிவதனன்
திரு ம. பிறேம்குமார்
திரு எஸ். துஷாந்தன்
திருமதி கு. வையெந்தி
திரு N. சுபாகரன்
திருமதி கி. கைலாசினி

**மக்கள் வங்கி வவுனியா பிரதேச தலைமை அலுவலக உத்தியோகத்தர்**

செல்வி வ. கனகசபை

**செல்வி சரண்யா சத்தியநாதன்**
(கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி கலைச்செல்வி தயாளன்**
(திருகோணமலை)
**திரு S. திருநாவுக்கரசு**
(அச்செழு, நீர்வேலி)
**திரு E. செல்வேஸ்வரன்**
(பாட்டா பாதணி முகவர், திருமலை)
**திரு த. கணேசமூர்த்தி**
(இளை. நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**திரு பொ. பாலசிங்கம்**
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**செல்வி ஹரினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**திரு பா. இராசேந்திரம்**
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
**திரு செ. மதியாபரணம்**
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
**திரு நீ. சுப்பிரமணியன்**
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**
(நாவலடி, உடுப்பிட்டி)
**திரு வே. இரத்தினசிங்கம்**
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
**திரு சி. கணேசலிங்கம்**
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
**உரிமையாளர்**
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
**செல்வன் செ. ஷஷ்டிகன்**
(மானிப்பாய்)
**செல்வன் செ. சர்வஜன்**
(மானிப்பாய்)

**உரிமையாளர்**
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு வல்லிபுரம் சிவகுமாரன்**
(சங்கானை)
**உரிமையாளர்**
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
**திரு இ. இராசநாயகம்**
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
**திரு ஆ. சுந்தரலிங்கம்**
(இளை. பிரதம அஞ்சல் அதிபர்)
**திரு நா. கந்தப்பு**
(தோப்பு, அச்சுவேலி)
**திரு க. தர்மலிங்கம் J.P.**
(நீர்வேலி)
**திரு மு. தர்மலிங்கம்**
(சிங்கார்ராசா வாசா, உடுப்பிட்டி)
**உரிமையாளர்**
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
**திரு ஜெ. இராஜகோபால்**
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
**திரு சேனாதிராசா சற்குணராசா**
(பண்டத்தரிப்பு)
**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
**திரு க. இராஜதுரை**
(நீர்வேலி)
**திரு த. சிவசுப்பிரமணியம்**
(லீலா வெதுப்பகம், சங்கானை)
**செல்வி ஆகித்தியா சயந்தன்**
(யாழ்ப்பாணம்)
**செல்வன் ப. ஆரணன்**
(கொக்குவில்)
**செல்வி கு. சோதிநாயகி**
(யாழ்ப்பாணம்)
**செல்வன் தி. திருநாத்**
(சுதுமலை)

166
53
219



**திரு சிவஞானம் கிருபாகரன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திரு மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)

**செல்வி நா. ஜெயராணி**
(இளை. அதிபர், சங்கானை)

**திரு இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)

**திரு J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)

**திரு இ. சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம்)

**திரு இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)

**திரு கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)

**திரு ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**திரு க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)

**திரு ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)

**திருமதி வ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)

**திரு க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)

**திரு R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)


**திரு சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)

**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**திரு வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

# குரு நிந்தை

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –



குருவைப் பழித்தல் குரு நிந்தையாகும். வந்திப்பது அவரை வணங்குதலாகும். குரு, லிங்க, சங்கமம் என்பன சிவபெருமானின் வடிவங்களேயாம். குருவாய் வடிவந் தாங்கி வருபவரும், லிங்க வடிவாய் திருக்கோயில்களில் காணப்படும் வடிவங்களும், சங்கமர்கள் எனப்படும் சிவனடியார்களாய் வடிவந்தாங்கி வருபவரும் சிவபெருமான் ஒருவரேயாவார். நந்தியெம்பெருமானே திருமூல நாயனார்க்கு குருவாய் வந்து சிவாகமங்களின் உண்மைகளை எடுத்தோதி, திருமந்திர மாலையை உலகறியச் செய்துள்ளார். எனவே, குருவாக உள்ளோர் எவராயினும் அவர் சிவனே எனக் கருதி வழிபட்டு, நல்லறிவு பெற்று, அவரை ஆசானாக ஏற்றுக்கொண்டு, அவர் போதித்த வழி நமது நடைமுறைகளைப் பின்பற்றி நடப்பது நம் எல்லோரதும் கடமையும் ஆகும். இவ்வாறு கூறியவற்றால் குருவே சிவன் என்பதை உணரலாம். அவ்வாறான குருவை நிந்தித்தல் என்பதன் கொடிய விளைவுகளைப் பற்றித் திருமூல நாயனார் ஐந்து திருமந்திரங்களால் பின்வருமாறு அருளிச் செய்துள்ளார்.

கயவர்கள் எனப்பட்டோர் கீழ்மக்களேயாவர். இவர்கள் உலக நெறிப்படி ஒழுகாமல், மனம் போன போக்கில் தவறான செயல் செய்பவர்களாக வாழ்வர். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. இக் கயவர் எனப்பட்டோர் தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையர்களைக்கூட பேணி நடக்கமாட்டார்கள். மேலும் அவர்கள் - கயவர்கள் - தமது பெற்றோரை மட்டுமன்றி, ஏனைய பெரியார்களையும் பேணி நடக்க மாட்டார்கள். மேலும் அவர்கள் தமது உறவினர்களாக உள்ளோரையும், அவர்களது மனம் வேதனையடையும் சொற்களைக் கூறி, அவர்களை வேதனைப்படுத்தி இகழ்ச்சியடையவும் செய்வர். தாய் தந்தையரையும், உடன் பிறந்தார் முதலிய சுற்றத்தாரையும் தக்கபடி பேணுமாறு நமது கற்றறிந்த

சான்றோர் கூறியுள்ளனர். அதன்படியே நடத்தல் ஒரு நெறியாகக் கூறப்பட்டுள்ளது. அந்நெறி நில்லாருக்கு நல்ல பலன்கள் யாவும் கிடைக்கும் என்பதும் இங்கு குறிப்பெச்சமாகவுள்ளது. அந்நெறி நிற்போரைத் தவிர வேறு யார்தான் இப் பலன்களைப் பெறும் தகுதியுடையவர்கள் என்பது இங்கு கூறப்பட்டுள்ளது. பலன்கள் என்பது ஞானம் பெறுதலைக் குறிக்கும்.

பெற்றிருந்தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந்தாரை உளைவன சொல்லுவர்
கற்றிருந்தார் வழி உற்றிருந்தா ரவர்
பெற்றிருந் தாரன்றி யார் பெறும் பேறே.

-திருமந்திரம் 530.

குருவைச் சார்ந்து நிற்போரோ நற்பலன் பெறுவர் என்பதும் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. "கற்று வல்ல சான்றோர்" என்பது இங்கு கற்றிருந்தார் எனப்பட்டது. தாய், தந்தை, தமையன்மார், மாதுலன் (மாமன்மார்) முதலிய மூத்த உறவினர்கள், "குரவர்" எனப்பட்டுள்ளனர். இக் குரவர் உறவுகளை நிந்தித்தல் கூடாது. அவர்களை இங்கு "கற்றறிந்தார்"- கற்றிருந்தார் எனக் கூறியுள்ளார். அவ்வாசிரியர்களும் குரவர்களே. அவ்வாசிரியர்களை முப்பிரிவினராக வகுத்துள் ளனர். அவை, எழுத்தறிவிற்பவர், நூற்பொருள் உணர்த்துவோர், தொழில் கற்பிப்போர் ஆகிய முத்திறத்தார் ஆவர்.

"பெற்றிருந்தாரையும் பேணார் கயவர்கள்" என்பதை, ஞானம் பெற்றவர்களையும் கயவர் பேணமாட்டார் எனவும் கருத்துக் கொண்டனர். வேறு சில உரைகாரர்கள் என்பதையும் இங்கே குறிப்பிடுதல் வேண்டும்.

இவ்வதிகாரத்தில் இரண்டாவது திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள கருத்தாவது; "குரு நிந்தை செய்தவர் பொருளும் ஆவியும் (உயிர்) கெடும் - என்பது இதற்குச் சாட்சியாக சதா சிவத்தின்மீது (சதாநந்தி) ஆணையிட்டுக் கூறியுள்ளார். அவ்வாறு பொருளும், உயிரும் அழியும் நிலை எப்போது தோன்றுமெனில், அது பின்வரும் நிந்தனைகளைச் செய்திருந்தால் தோன்றும் எனக் கூறியுள்ளார். அவையாவன; கற்புடைய பெண்கள், சிவனடியார்கள், தத்துவ ஞானம் உடையவர்கள் ஆகியோரது மனம் வருந்தும்படி அவரவர் நெறிநின்று ஒழுகும்போது, அந்நெறிக்கு அழிவு செய்தவரது செல்வமும், உயிரும் (வாழ்நாள்) ஓராண்டு காலத்தினுள் அழிந்தொழிந்து போகும். இந்த விடயங்கள் எங்கள் நந்தியெம்பெருமான் மேல் ஆணையிட்டுச் சொல்லப்பட்டுள்ள உண்மையாகும். இத் திருமந்திரத்தில் சொல்லப்பட்டுள்ள பத்தினிகள், இறை பக்தர்கள், மற்றும் தத்துவம் அறிந்த ஞானிகள் ஆகிய மூவரும் முன்பு கூறியதைப்போல், நேரே குரவர் அல்லராயினும், தமது ஒழுக்கத்தால் உலகை நல்நெறி நிற்கச் செய்யும் பணி யினைச் செய்பவர். ஆதலால், இவர்களைக் குரவர் எனக் கருதி அவர்களுக்குத் தீங்கு செய் தால் அது உலகிற்குத் தீங்கு செய்வதாய் அமையும். அதனால் விளையும் தீமையும் அதிக மாகும்.

எனவே இந்த இரண்டு திருமந்திரங்களின் மூலம் உபதேச குரவர்களையன்றிப் பிற வகைக் குரவர்களையும் இகழ்தல் அல்லது நிந்தித்தல் கூடாது. இத் திருமந்திரம் வருமாறு.

*பொருளை இழந்தவனுக்கு மிஞ்சியிருப்பது அனுபவம் மட்டுமே.*

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே.

-திருமந்திரம் 532.

இன்னொரு திருமந்திரத்தின் கருத்து பின்வருமாறு உள்ளது. மந்திரங்களுள் ஓர் எழுத்து மொழியான பிரணவ மந்திரத்தை (ஓம்) உபதேசித்தவர் ஒரு முக்கிய குருவாவார். அவர் மனம் நோகத் தீமைகள் செய்யக்கூடாது. அவ்வாறு மந்திரத்தை உபதேசித்த குருவை நிந்திப்பவர், இம் மண்ணுலகில் இழிந்த பிறப்பாகிய நாயாகப் பிறப்பார். அதுவும், நூறுமுறை அவர் நாயாகப் பிறவியெடுப்பார். நாய் ஒரு பிராணி. ஆனால் நாயை எல்லோரும் இகழ்ந்து ஒதுக்கும் பிறப்பாகக் கருதுவர். அதுவும் ஒருமுறை நாயாகப் பிறந்து துன்பங்களை அனுபவிக்க வேண்டும். அதன் பிறகு நாய்ப் பிறவி மனிதப் பிறவியாகப் பிறந்தாலும்கூட, அந்த மனிதர்களிலும் கீழ் மக்களாகிய புலையராகப் பிறத்தல் நேரிடும். புலையராய்ப் பிறக்கின், இம்மை, மறுமைகளில் யாதொரு பயனையும் எய்தாது வீணாக வாழ்ந்து விட்டுப் பின்னர் இறந்து கழிந்து போவர். எனவே ஒரு பிறப்பில் குருவை இகழ்ந்தவர் பல பிறப்புக்களிலும் பலரால் இகழப்படும் நிலையை அடைவர், என்பதும் கூறப்பட்டுள்ளது. மந்திரம் உரைத்தவரை (பிரணவ மந்திரம்) சிறப்புற நோக்கிய நாயனார் அவர்களை "மாதவர்" என இங்கு வர்ணித்துள்ளமை அவர் முக்கியத்துவத்தை உணர்த்தவேயாம். எனவே மந்திரம் போதித்த கிரியா குருவை நிந்தித்தல் கூடாது. இக் குருமாரே திருக்கோயில்களில் மந்திரம் சொல்லும் குருவாவார்.

மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

-திருமந்திரம் 533.

இக் கருத்தினையே மேலும் விளக்கும் இன்னொரு திருமந்திரம் "மகேசுர நிந்தை கூடாமை" என்னும் அதிகாரத்தில் பின்வருமாறு அருளிச் செய்யப்பட்டுள்ளது.

ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே.

-திருமந்திரம் 528.

சிவனடியாரது உள்ளம் சிறிய அளவில்தானும் நோகுமாயின் அதற்குக் காரணமாயிருந்த மண்ணுலக நாடும் அதன் சிறப்புக்களும் அழிந்துவிடும். அது மட்டுமன்றி, விண்ணுலக வேந்தன் ஆட்சி பீடத்துடன், மண்ணுலக மன்னவனின் ஆட்சி பீடமும் அழிந்தொழியும் என்பது உண்மையே. ஏனெனில் இக் கட்டளையானது எங்கள் நந்தியெம்பெருமான்மேல் ஆணையாகக் கூறப்பட்டுள்ள ஓர் உண்மையாகும். இதனால், சிவனடியாரது மனம் நோகாமல் நடப்பது நாடாளும் அரசரின் முதற் கடமையாகும். இக் கருத்துக்களை மேலும் வலுச்சேர்க்கவென

*வெற்றியின் இரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதுதான்.*

இன்னொரு திருமந்திரத்தையும் இங்கே குறிப்பிட்டுக் கூறுதல் பொருத்தமாகும். அம் மந்திரம் வருமாறு.

ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றும் திருவேடத்தாரையும்
காவலன் காப்பவன் காவாது ஒழிவனேல்
மேவும் மறுமைக்கும் மீளா நரகமே.

-இராச தோடம்- திருமந்திரம் 243.

பசுக்களையும் பெண்களையும் துறவறத்தாரையும் (அறநெறி நிற்பவர்) தேவரும் வணங்கத்தக்க உண்மையான வேடத்தையுடையவரையும் (சிவனடியார்) பிறர் நலியாமல் மன்னன் காத்தல் வேண்டும். அம் மன்னன் அவ்வாறு செய்யாது ஒழிவனேல் மறுமையில் தீராத நரகத்தையடைவான்.

மதுரையில் சம்பந்தர் பெருமான் உடன் வாதில் தோற்ற சமணரை நின்றசீர் நெடுமாறன் கழுவில் ஏற்றிய கதை இங்கு கூறுதல் பொருத்தமானது. இதை சம்பந்தப் பெருமானார் தடுக்கவில்லை. ஏனெனில் முன்பே சம்பந்தர் எழுந்தருளியிருந்த திருமடத்திற்கு சமணர் தீயிட்டு எரித்தமையால் சமணரைக் கழுவேற்றுதலை அவர் தடுக்கவில்லை. வேந்தன் செய்கையை பெருமானார் விலக்காமல் விட்டது அறம் சார்ந்த செயலே. சிலர் அச் செயலை மறம் சார்ந்த செயலென பிழைபடக் கூறியுள்ளனர்.

அடுத்து வருவது, ஞான குருவை நினைப்பது; நிந்தித்தல் பெரிதும் தீமை தரும். எனவே அது விலக்கப்படுதல் வேண்டும் என்னும் பொருள்படவரும் திருமந்திரத்தை நோக்குவோம்.

சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங் கெட்டுப் பஞ்சமு மாமே.

-திருமந்திரம் 535.

எமக்கெல்லாம் ஞானநெறியை உணர்த்தும் ஞான குருவின் திருமுன்பில் எவராவது பொய் பேசினால் அல்லது கடும் சொல், பயனில சொல், குறளை முதலிய தீய சொற்களால் பேசினால் அதன் பழியாக உலகில் நன்னெறியாகிய நன்மார்க்கம் அழியும். அதனால் மெய்யுணர்வும் இல்லாதொழியும். தொன்று தொட்டு வரும் உலகியல் துறைகளும் மெய்நெறித் துறைகளும் மக்களால் மறக்கப்படும். பல சமயங்களும் இதனால் கெடும். அவற்றால் நாட்டில் பஞ்சம் உண்டாகும். ஆன்ம வளர்ச்சியும் தடைப்படும். "பன்மார்க்கம்" என்பது பல சமய மார்க்கங்களைக் குறிக்கவே கூறப்பட்டுள்ளது. இத் திருமந்திரத்தால் குருவின் திருமுன்பில் அவரை இகழ்தல் பெரிதும் தீமை உண்டாக்கும் செயல் எனக் கூறப்பட்டுள்ளது.

பின்வரும் திருமந்திரம் கூறும் கருத்துக்களை நோக்குவோம்.

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதி போன்றும்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான் போன்றுங் கன்மிஞா னிக்கொப்பே. -திருமந்திரம் 536.

*எதிர்ப்பே மனிதனை அறிவாளியாக ஆக்குகிறது.*

இத் திருமந்திரத்தின் கருத்தாவது; எமது கைக்குக் கிடைத்துள்ள அரிய பெரிய விலையுயர்ந்த ஒரு மாணிக்கக்கல்லை வீசி எறிந்துவிட்டு, வெய்யிலில் கிடந்து வெப்பத்தினால் மினுக்கேறி மின்னும் வெறும் கல்லினை (பரல்) மாணிக்கக் கல்லிற்குப் பதிலாக, அதை எடுத்துக்கொள்வது போலச் செயல் செய்யும் ஒருவனின் செயலைப் பின் வருமாறு ஒப்பிட்டு எடுத்துரைக்க முடியும். அதாவது; ஒருவனது கையில், இனிய உணவுகளாகிய நெய்மிக்க பால், தயிர், இளநீர் போன்றன இருக்கவும், அவன் அவற்றை உண்ணாமல், சாதாரண உணவாகிய பிட்டினை, அதுவும் முயன்று பெற்று உண்ணும் செயலை ஒப்பிட்டுக் கூறமுடியும். இவை இரு செயல்களிலும் எது உயர்ந்தது என்பதைச் சிந்தித்தால், முடிவு தெளிவாகத் தெரியும்.

சில உரையாசிரியர்கள் இத் திருமந்திர இறுதி வரிகளுக்கு, பிட்டுக்குப் பதிலாக மனிதனைக் கொல்லும் நச்சுப் பழமாகிய எட்டிப் பழத்தினை முயன்று பெற்று உண்ணுதலாகிய செயலை உவமை கூறியுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஞானிக்குப் பதிலாகக் கன்மமே முத்தி தரும் என்னும் கொள்கை வழியுடையோரைக் குருவாக ஏற்றல் பற்றியும், அது தவறு என்றும் கூறப்பட்டுள்ளது. கன்மமே முத்தி தரும் வழியுடையோர் "கன்மி" எனப்பட்டுள்ளனர். இவர்களைக் "கர்ம காண்டிகள்" எனவும் அழைப்பர்.

பிட்டுச் சாப்பிட்டால் பிழைத்துக் கொள்ளலாம். அது இங்கு ஒப்பீட்டளவில் பால், தயிர், இளநீர் முதலியவற்றைவிட தரத்தில் குறைந்த உணவாகலாம். ஆனால் எட்டிப் பழத்தைச் சாப்பிட்டால் மனிதனை அது கொன்றுவிடும் தன்மையது. இவ் இரண்டினதும் வேற்றுமை, ஞானகுருவுக்கும், ஏனைய குருவுக்கும் உள்ள வேற்றுமைகளைக் கருத்திற் கொண்டே அவ்வாறு அருளிச்செய்துள்ளார் நாயனார்.

இத் திருமந்திரத்தால் உண்மையான குரவரின் (குரு) பெருமையை நாம் அறியாமல் வாழ்வதும் ஓர் குற்றமாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இதன்மூலம் உண்மைக் குரவரது பெருமையானது எத்துணையளவு என்பதையும் அறிந்துகொண்டோம். எனவே குருவை வழிபடுவோம் அல்லது வணங்குவோம் ஆகுக. குருவை வந்தியாதொழியினும் நிந்தித்தல் ஒழிவோம்.

## உம்மென்றிருக்காதே

எப்போதுமே நீ உற்சாகத்துடன் இரு. உற்சாகமாக இருப்பவன் ஆன்மீக வாழ்வு வாழத் தகுதியுள்ளவன். ஒருவனுக்கு முகம் வாட வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கவேண்டும். அதுதான் வியாதி. இது தவிர, பிற துன்பங்களின் காரணமாக வாடிய முகத்துடன் இருக்காதே. உனக்குத் துன்பம் வர என்ன காரணம்? நீ செய்த பாவங்கள்தான். பாவங்களைச் செய்து, துன்பங்களை நீயாக வரவழைத்துக் கொண்டு, வாடிய முகத்துடன் இருக்க என்ன உரிமை இருக்கிறது? ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சொல்கிறேன். கேள். உன் முகத்தில் இருள் சூழ்ந்திருந்தால், அன்றைய தினம் நீ வெளியே போகாமல் உன் அறையின் கதவை மூடிக்கொண்டு உள்ளேயே இரு. இந்த நோயைச் சுமந்துகொண்டு வெளியே போவதற்கு உனக்கு உரிமையே கிடையாது.

- சுவாமி விவேகானந்தர் -

*பல அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞனாவாய்.*

# ஈழத்து உரையாசிரியர் சு. அருளம்பலவனாரின் ஆராய்ச்சியுரை

– **திரு அ. சிவானந்தநாதன்** அவர்கள் –

(திருவாசக ஆராய்ச்சியுரை நூலின் உரையாசிரியரான யாழ்ப்பாணம் - காரைநகர் சு. அருளம்பலவனார் 20.05.1966இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரது மகன் அ. சிவானந்தநாதன் அவர்கள் "ஈழத்து உரையாசிரியர் சு. அருளம்பலவனாரின் ஆராய்ச்சியுரை" எனும் தலைப்பிட்டு தினக்குரல் பத்திரிகையில் 04.07.2010ல் பிரசுரமான கட்டுரை இங்கு மீள் பிரசுரமாகிறது)

தமிழ்ப் பேரறிஞராகிய தந்தையார் அருளம்பலவனார் 1966ஆம் ஆண்டு மே மாதம் வெள்ளிக்கிழமை அதிகாலையில் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். அன்னார் இறைவன் திருவடியைச் சேர்வதற்கு முன்பு அவன் அருளால் திருவாசகம் முழுவதற்கும் உரையெழுதும் பாக்கியத்தைப் பெற்றவர்.

இவ்வுரை "திருவாசக ஆராய்ச்சியுரை" என்ற நாமத்தைப் பெற்றுள்ளது. திருவாசகம் முழுவதற்கும் உரைவகுத்த தமிழ்ப் பேரறிஞர்கள் மிகச் சிலரே. இவ்வரிசையில் ஈழத்துப் பெரியார் சங்கநூற் செல்வர். பண்டிதமணி சு. அருளம்பலவனாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெரியார் தாம் எழுதிய திருவாசக ஆராய்ச்சியுரையை முழுமையான நூல் வடிவில் பார்க்கும் பாக்கியத்தைப் பெறவில்லை. இதுவும் ஈசனின் செயலாகும். அதே வேளையில் அவன் அருளால் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகத்தில் மெய்யுணர்தல், அறிவுறுத்தல், சுட்டறுத்தல், ஆத்மசுத்தி, கைம்மாறு கொடுத்தல், அனுபோக சுத்தி வரையுள்ள பகுதியை யாழ்ப்பாண ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் பதிப்பிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர். 1966ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் படுக்கையில் இருந்து கொண்டு அநுபோக சுத்தி அச்சுப்பிரதியை திருத்தம் செய்து ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் அச்சிடும்படி அனுப்பி வைத்தார். இதுவே, இவரின் இறுதிப் பணியாகத் திகழ்வதாயிற்று. மறுநாள் விடியற்காலை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூன்று மணியளவில் தன் உயிர் பிரிந்து இறைவன் திருவடியைச் சேர்ந்தார்.

தமிழ்ப் பேரறிஞர் அருளம்பலவனாரின் எதிர்பாராத மறைவு தமிழ் உலகிற்கு மிகப் பெரிய பேரிழப்பாகும். இவரின் மறைவின் பின்னர் அவர் எழுதிய கையெழுத்துப் பிரதிகளைத் தம் உயிரிலும் மேலாகப் போற்றிப் பேணிப் பாதுகாத்து அவர் அச்சிட்ட பணியை மீளத் தொடர்ந்து நிறைவேற்றிய மகிமை இவரின் அகத்துணைவியாரைச் சாரும். அருளம்பலவனாரின் அகத் துணைவியார் விஜயசவுந்தரம்மாள் ஆசிரியைப் பணியைத் தெய்வீகப் பணியாகக்கொண்டு செயலாற்றிய தோடு, திருவாசகப் பாடல்களை முழுமையாக மனனம் செய்த செயலும் வியப்பிற்குரியதாகும். "திருவாசகத்தை நன்கு பாராயணம் செய்து முழுவதும் மனனம் செய்த பெருமைக்கு தக்க

*சொர்க்கத்தில் அடிமையாய் இருப்பதைவிட நரகத்தில் அரசனாய் இரு.*

நற்செயல் பல உடையவர் அவர் என்பதை அறிந்து நாம் வியந்தோம்" என்பது காஞ்சிபுர சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருள்வாக்காகும். எனவே, அம்மையார் பல இடர்களின் மத்தியில் தமது கைப்பொருள் கொண்டு திருவாசக ஆராய்ச்சி உரையின் முதல் பாகத்தை வெளியிட்ட செயல் என்றும் பாராட்டத்தக்க பணியாகும். இந்நூலில் சிவபுராணம் முதல் நீத்தல் விண் ணப்பம் வரையும் உள்ள பகுதி அடங்கியுள் ளது. இவ் வெளியீட்டு விழா காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபக மண்டபத்தில் சித்தாந்த கலைச் செல்வரும் புலவருமாகிய க. வச்சிரவேலு முதலியார் தலைமையில் ஆண்டு 1967 ஜுன் 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

தன் கணவர் எழுதிய ஏனைய பகுதி களையும் வெளியிடுவதில் ஆர்வம் கொண்டு இவ்வம்மையார் விளங்கியமையால் திருவாசக ஆராய்ச்சியுரை (இரண்டாம் பாகம்) 1973ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதி நூல் வடி வில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நூலின் வெளியீட்டு விழா பம்பலப்பிட்டி சரஸ் வதி மண்டபத்தில் அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு வழக்கறிஞர் ரங்கநாதன் தலைமை வகித்தமை குறிப்பிடத் தக்கது. இவ்விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ் உபவேந்தர் க. கைலாசபதி ஆகியோர் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றியுள்ளார்கள். இவ் வெளியீட்டு விழா கொழும்பு ஈழத்துத் திருமுறை மன்றத் தின் ஆதரவில் நடைபெற்றது. எனவே, அருளம்பலவனார் தமது திருவாசக ஆராய்ச்சி உரையை நூல் வடிவில் பார்க்கும் பாக்கியத் தைப் பெறவில்லை என்பது உண்மை. அதே வேளையில் அவரின் எண்ணக் கருத்தினை நிறைவு செய்து திருவாசக ஆராய்ச்சியுரையை முழுமையாக சைவ உலகிற்கு தந்த சிறப்புப் பணி அம்மையாருக்கு என்றும் உண்டு. எனவே விஜயசௌந்தர அம்மாளின் இச் சமயப்பணி உண்மையில் தெய்வீகப் பணி ஆகும். அம்மையார் காலத்தினால் செய்த இப்பணி ஞாலத்திலும் மிகப்பெரிதாகும். உண்மையில் சைவ சமய உலகிற்கு அம்மையார் அளித்த பெரும் பரிசு திருவாசக ஆராய்ச்சியுரை நூலாகும். இவ்வாறு பெரும் பணியைச் செய்த விஜய சௌந்தர அம்மாள் அருளம்பலவனார் லண்டனில் 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி இறைவன் திருவடியைச் சேர்ந்தமை நினைவு கொள்ளத் தக்கது. உண்மையில் அருளம்பலவனாரின் ஆழ்ந்து விரிந்த சைவ சமய பெருங்கடலின் அறிவினை இந்நூலின் வாயிலாக சைவ சமயத்தவருக்கு எடுத்துக்காட்டிய பெருமை அம்மையாருக்கு என்றும் உண்டு. எனவே, அன்னாரின் திருவாசக ஆராய்ச்சியுரையை சைவ மக்கள் உள்ளத்தால் போற்றினால் சொல்லிய பாட்டின் பொருளை தெளிவாக உணர்வதோடு அமையாது சிவபுர வாழ்விற் கும் வித்தாக அமையும் என்பது நிச்சயம். அன்னாரின் திருவாசக ஆராய்ச்சியுரையை உள்ளத்தால் விரும்பிக் கற்றால் மீண்டும் பிறவாத நெறியை அவனருளால் எளிதில் பெறுவார்கள்.

இன்று திருவாசகத்திற்கு பல உரை கள் வெளிவந்தாலும் இவ்வுரை என்றும் மேன்மைக்குரியதாகும். யாவரும் கற்பதற்கு ஏற்ற முறையில் எளிய நடையில் உள்ளது. மேலும் உள்ளத்தில் மன நிறைவை அளிக் கும். தெய்வீக சக்தியை இந்நூலைக் கற்பதி னால் பெறலாம். எனவே, சைவ சமயத்தவர் கள் யாவரும் கற்று நற்பயன் பெறக்கூடிய தெய்வீக நூலாக திருவாசக ஆராய்ச்சியுரை

அமைந்து உள்ளது என்பது நிச்சயம். இவ் ஆராய்ச்சியுரை நூலுக்கு 1974ஆம் ஆண்டில் ஈழத்து சாகித்திய மண்டலப் பரிசு கிடைத் தமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் தமிழகப் பேரறிஞர்களின் நல்மதிப்பினையும் ஈழத்துப் பேரறிஞர்களின் நல் ஆதரவையும் பெற்றுள் ளது என்பது தெளிவு. இந்நூலாசிரியர் எழு திய பிற நூல்கள் திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை, பெரும் பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை, பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை என்பனவாகும். இதில் பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரை மிக விரிவான பேருரையாக அமைந்து உள்ளது.

இந்நூல் இரு பகுதிகளாக வெளி வந்துள்ளது. இதனை நூல் வடிவில் பார்க்கும் பாக்கியத்தை தம் வாழ்நாளில் அருளம்பல வனார் கண்டு உவகை பெற்றுள்ளார். இந் நூலின் முதலாம் பாகம் 1960களிலும் இரண் டாம் பாகம்1963களிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையின் முதலாம் பாகம் 1961 ஆண்டில் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுள்ளது. இந்நூல் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்திலும் ஆரிய திரா விட பாஷாபிவிருத்திச் சங்கத்திலும் பாட நூலாக ஏற்றுச் சிறப்பித்துள்ளார்கள். தமிழகப் பேரறிஞர்களின் பாராட்டுக்குரிய அரிய நூல் இதுவாகும். ஈழத்துப் பேரறிஞர்கள், தமிழ்ப் பேரறிஞர்கள் இவரின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரையின் விரிவைக் கண்டு வியந்து போற்றி உள்ளார்கள்.

தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்த மகாவித்துவான் ச. தண்டபாணிகதேசிகர் இவரின் பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரையை மிகச் சிறப்பாக வியந்து போற்றியுள்ளார். ஈழத்துக் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா "ஈழத்து தமிழ் உரைமரபு" என்னும் நூலில் பதிற்றுப் பத்தின் பல்வேறு அம்சங்களையும் தெளி வாகக் கண்டுகொள்ள அருளம்பலவனாரது "ஆராய்ச்சியுரை" பெரிதும் உதவுகின்றது என்று துணிந்து குறிப்பிட்டுள்ளார். இவர் உரை ஆசிரியரின் ஆழமான தெளிவான தமிழ்ப் புலமையையும் சீர்தூக்கி காட்டும் ஒப்பற்ற சிறப்பையும் தமது நூலில் வியந்து போற்று வதைக் காணலாம். அருளம்பலவனாரின் தமிழ்த் தொண்டின் மகிமையை உல கோருக்குத் தெரிவிப்பதில் முன்னோடியாகத் திகழ்கின்றார். இவரது பயன் கருதாத தமிழ் என்றும் பெருமைக்குரியது. தமிழிலக்கிய உலகம் முந்தையோர் தந்த வழியை மறந்து போகாமல் ஞாபகப்படுத்தவும் மேலும், வளர்ச்சி வழிவகுப்பதற்குத் தொடர்பு காணவும் உதவும் என்ற கருத்தினை "இலக்கிய வழி" என்னும் நூலில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். தென் னகத்திலுள்ள பேரறிஞர் பலரும் போற்றும் சிறந்த ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டு ஈழத் துத் தமிழருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளார் என்று பேராசிரியர் சு. வித்தியானந் தன் உரையாசிரியரைப் பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தன்னுடைய குறைகளை மனிதன் உணரவேண்டும் என்பதற்காகவே பாவம் என்கிற வார்த்தை பிரயோகிக்கப்படுகிறது. மனிதனை அகந்தையில் இருந்து விடுவிக்க இறைவன் வகுத்த உபாயம் இது. ஆனால் மனிதனுக்கோ தன்னுடைய பாவங்களைக் காணாமல் அடுத்தவர் பாவங்களைக் காண்பதே பேருவகை அளிப்பதாய் உள்ளது.**

*கோபம் வரும்போது அதனை அடக்கி ஆள்வதே வீரமாகும்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 10. ஆனந்தாதீதம்

99. வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

**ப-ரை:**

வான நாடரும் அறியொணாத நீ- விண்ணுலகத்தவரும் அறிய இயலாத நீ, மறையில் ஈறும் முன் தொடரொணாத நீ- வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களும் முற்காலத்தில் தொடர்ந்து பற்றி இன்ன தன்மையன் என உணர்த்தமுடியாத நீ, ஏனை நாடரும் தெரியொணாத நீ- மற்றைய உலகத்திலுள்ளவர்களும் தெரிய முடியாத நீ, என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா- அடியேனை இனிதாக எளி வந்து ஆட்கொண்டருளியவாறும், ஊனை நாடகம் ஆடுவித்தவா- என் ஊனுடலை ஆனந்தக்கூத்து ஆடும்படி செய்தவாறும் நான் உருகி உனை பருக வைத்தவா- அடியேன் உள்ளமுருகி உன் அருட்பெருக்கைப் பருகும்படி செய்தவாறும், ஞான நாடகம் ஆடுவித்தவா- என்னை மெய்ஞ்ஞானக் கூத்து ஆடும்படி செய்தவாறும், வையகத்து உடை அவிச்சை நையவே- பூவுலகில் என்னுடைய அறியாமை நீங்கும் பொருட்டேயாம்.

வான நாடரும் அறிய முடியாத நீ, மறையின் முடிபாகிய உபநிடதங்களும் முன்தொடரொணாத நீ, ஏனை நாடரும் தெரியொணாத நீ அடியேனை இனிதாக எளிவந்து ஆண்டருளியவாறும் என் ஊனுடலை ஆனந்தக் கூத்தாடும்படி செய்தவாறும், நான் உள்ளமுருகி உன் அருட்பெருக்கைப் பருகும்படி செய்தவாறும், என்னை ஞானநாடகம் ஆடும்படி செய்தவாறும், பூவுலகில் என்னுடைய அறியாமை நீங்கும் பொருட்டேயாகும். நின் அருட்செயல் எத்துணை வியப்பிற்குரியது என்பதாம்.

வான நாடர்- விண்ணுலகத்துள்ள திருமால் முதலியோர். "வான நாடரும் மருவியேத்தா விண்ணுள்ளீராய் நிற்ப தென்னே" (சுந் 6:4) எனத் தேவாரத்து வருதலும் காண்க. இறைவனைத்

*நன்றாக உழைக்கின்ற எந்த மனிதனும் ஏழ்மையை அடைவதில்லை.*

திருமால் முதலிய வான நாடரும் அறியவொண்ணாமையை, "நான்முகனோ, டொருங்கு வளைக்கரத்தானு முணராதவன்" (331) எனத் திருக்கோவையாரில் அருளியமையானுமறிக. உம்மை உயர்வு சிறப்பு. ஒண்ணாத என்பது இடைக் குறைந்து நின்றது. மறையீறு- வேதங்களின் முடிபாகிய உபநிடதங்கள் "மறையீறு அறியா மறையோனே" (சத85) என வருதலுங் காண்க. ஏனைநாடர் என்றது வித்தியாகத்துவ புவனங்களிலுள்ள உருத்திரர்களை. "மாவேறு சோதியும் வான வரும் தாமறியாச், சேவேறு சேவடி" (கோத்1) என வருதலுங் காண்க.

இன்னிதாயாண்டு கொண்டவா- இனிதாக ஆட்கொண்டருளியவாறு.

"வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று போது நான்
வினைக்கேடன் என்பாய் போல
இனையனா னென்றுன்னை யறிவித் தென்னை ஆட்கொண்டு"
(சத22)

"பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து பார்ப்பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ் செய்வான்
எத்த னாகிவந் தில்புகுந்தெமை ஆளுங்கொண்டு"
(சென்னிப் 4)

என்பன ஈண்டறியற் பாலன. இனிதாய் என்பது- இன்னிதாய் என ஒற்று விரிந்து நின்றது.

ஊன் அதனையுடைய உடலை உணர்த்தியது. ஊனிலாவியை யோம் புதற்பொருட்டு (சத40) என்புழிப்போல. நாடகம் என்றது ஈண்டு ஆனந்தக் கூத்தை. "நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி நானா விதத்தாற் கூத்து நவிற்றி" (புணர்ச்சிப் 8) என வருதல் காண்க. உருகிப் பருகவைத்த வா என இயையும். பருக வைத்தவா என்ற வினையால், உனை என்பதற்கு உனது அருட்பெருக்கை என உரைக்கப்பட்டது.

"உருகிப் பெருகி யுளங் குளிர முகந்து கொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை"
(தெள் 15)

"பருகிய நின் பரங்கருணைத் தடங்கடலில்"
(ஏசறவு 5)

என வருவன காண்க. வைத்தவாறு- அருள் செய்தவாறும்.

"அன்பரில்... உனைப் பருக நின்றதோர் துப்பனே" (சத98) என வருதல் காண்க.

ஞான நாடகம்- மெய்ஞ்ஞானத்தால் உயிர் திருவருட் சக்தியைச் சார்ந்து இறைவனை அடைந்து மகிழ்தல். இது உயிரினுள் நிகழ்வதாகும்.

"ஊனநடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான் நடுவே நாடு"
என்பது திருவருட்பயன்.

ஆண்டு கொண்டதும் ஊனை நாடகம் ஆடுவித்ததும் உனைப் பருக வைத்ததும் ஞான நாடகம் ஆடுவித்ததும் வையகத்துள் அறியாமை நீங்கும் பொருட்டேயாகும். ஏகாரம்-

தேற்றம். அதனை நைய என்பதனோடும் கூட்டுக. அவிச்சை- அறியாமை. இது ஆணவத்தால் ஏற்பட்டது. வையகத்துடைய இச்சை எனப் பாடங்கொளின் அது அடுத்த திருப்பாட்டில் அந்தாதியாக வரும் முறையில் விச்சதின்றியே என்பதனோடு முரண்படும். ஆதலின் வையகத்துடை அவிச்சை எனப் பாடங் கொள்ளப்பட்டது.

இதன்கண், ஊனை நாடகம் ஆடுவித்தமையானும் ஞான நாடகம் ஆடுவித்தமையானும் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 95.

100. விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானும் அங்ஙனே யுடைய நாதனே.

**ப-ரை:**

விண்ணும் மண்ணக முழுதும் யாவையும்- விண்ணுலகத்தையும் மண்ணுலகம் முழுவதையும் மற்றும் எல்லாவுலகங்களையும், விச்சு அது இன்றியே விளைவு செய்குவாய்- வித்தாகிய அம்மூலகாரணம் புலப்படுதலில்லாமலே படைத்தருள்வாய்; வைச்சு வாங்குவாய்- சுட்டிய காலம் வரையும் காத்து வைத்து உரிய காலத்திலே ஒடுக்குவாய்; வஞ்சகம் பெரும் புலையனேனை- அறியாமையையுடைய பெரும் இழிவரலையுடைய என்னையும், உன் கோயில் வாயிலில் பிச்சன் ஆக்கினாய்- நினது திருக்கோயிலின் வாயிலில் நின்னை என்றும் தரிசிக்க வேண்டும் என்னும் பித்துடையவனாய் நிற்கும் வண்ணம் செய்தாய்; பெரிய அன்பருக்கு உரியன் ஆக்கினாய்- பேரன்பர்களாகிய மெய்யடியார்களுக்கு உரியேனாகுமாறு செய்தாய்; தாம் வளர்த்தது ஓர் நச்சுமாமரம் ஆயினும் கொலார்- உலகத்தவர் தம்மால் வளர்க்கப்பட்டது ஒரு நச்சு மாமரமானாலும் அதனைத் தாம் வெட்டி அழிக்கமாட்டார்; உடைய நாதனே- என்னை அடிமையாகவுடைய தலைவனே; நானும் அங்ஙனே- நின்னால் வளர்க்கப்பட்ட யானும் குற்றமுடையேனாயினும் நின்னாற் துன்புறுத்தப்படா தொழிதல் வேண்டும்.

விண்ணுலகத்தையும் மண்ணுலக முழுவதையும் மற்றும் எல்லாவுலகங்களையும் வித்தாகிய மூலகாரணம் புலப்படுதலில்லாமலே விளைவு செய்குவாய்; சுட்டிய காலம் வரையும் காத்து வைத்து உரிய காலத்திலே ஒடுக்குவாய்; வஞ்சகமுடைய பெரும் இழிவரலையுடைய என்னையும் உன் திருக்கோயில் வாயிலில் நின்னை என்றும் தரிசிக்க வேண்டும் என்னும் பித்துடையவனாய் நிற்கும் வண்ணம் செய்தாய்; பேரன்பர்களாகிய மெய்யடியார்களுக்கு உரியேனாகுமாறு செய்தாய்; உலகத்தவர் தம்மால் வளர்க்கப்பட்டது ஒரு நச்சு மாமரமானாலும் அதனைத் தாமே அழிக்கமாட்டார்; உடையநாதனே! நின்னால் வளர்க்கப்பட்ட யானும் குற்றமுடையேனாயினும் நின்னாற் துன்புறுத்தப்படா தொழிதல் வேண்டும்.

*சிறந்த நூல்கள் விலைமதிக்கமுடியாத பொக்கிஷம்.*

விச்சு, வைச்சு, பிச்சன் என்பன நச்சு என்னும் எதுகை நோக்கித் திரிந்தன. இனி இதற்கு முதற் திருப்பாட்டின் ஈற்றிலுள்ள வித்தையின் போலியாகிய விச்சை என்பதை இத்திருப்பாட்டிற்கு முதலாகக் கொண்டமையின் அங்ஙனமாயிற்று எனினும் அமையும்.

விச்சதின்றியே விளைவு செய்குவாய் என்றது விண்ணுலகம் முதலியவற்றை இறைவன் உண்டாக்குங்கால் அவற்றிற்கு மூலகாரணமாகிய மாயை எல்லார்க்கும் எளிதிற் புலப்படாமை பற்றியாகும். "அளவிலண்டமும் முளையின்றி விளைத்து" ஞானாமிர்தம் கடவுள் 4. "விச்சதின்றி நாறு செய்வானும்" (நரியைக்) (தே. நாவு. 4:2) என வருதல் காண்க. இங்ஙனம் கொள்ளாது முதலுற்பவத்தில் இறைவன் அவ்வுயிர்களுக்கு வினைகளாகிய வித்துக்களுக்கு ஈடாகவல்லாமல் தனது இச்சைப்படி தனுகரண புவன போகங்களைக் கொடுப்பவன் என உரைக்கின் அது இறை இயல்புக்கு வழுவாகுமென்க.

வைச்சு- வைத்து. "வைச்ச பொருள் நமக்காகுமென்றெண்ணி" (தே.நாவு 80:4) வைத்து என்றது குறித்த காலம் வரையும் காத்து வைத்து என்றவாறு. வாங்குதல்- தம்பால் ஒடுக்குதல். "ஓடு தந்து நில்லென்றான் எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான்" (பெரிய. திருநீல 20) வஞ்சகம்- மயக்கம்; புலைமை- இழிவு. "வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டிற்பூட்டி" (நாவு 76:5)

கோயில் வாயிலில் பிச்சனாக்கினாய் என்றது திருக்கோயில் வாயிலிலே நின்னைத் தரிசிக்கும் பெருவிருப்பால் பைத்தியம் பிடித்தவன்போல நிற்கும் வண்ணம் செய்தாய் என்பது.

பெரிய அன்பர் என்றது இறைவனுடன் வந்த அணுக்கன் தொண்டர்களை. அன்பருக்குரியனாக்கினாய் என்றது "பேசப் பட்டேன் நின் அடியாரில்" (சத 82) என அடிகள் முன்னர் அருளிச் செய்த வண்ணம் அவ்வடியாரில் தாமும் ஒருவராதல்.

"நச்சு மாமரமாயினும் கொலார்" என்பதற்கு உலகினர் என எழுவாய் வருவித்துக் கொள்க. உலகினர் தாம் வளர்த்த தொரு மாமரம் பின்னர் நச்சுத் தன்மையுடையதென அறிந்தவிடத்தும் தாமே அதனைக் கொல்லார். அதுபோல நின்னால் வளர்க்கப்பட்ட யானும் தீமையுடையேனாயினும் கொல்லப்படாது அருள் செய்தல் வேண்டும் என்பதாம். கொல்லாதருள் செய்தல் வேண்டும் என்பதன் குறிப்பு கொன்றால் மீளப் பிறப்புண்டாம்; அதனால், நீ ஆட்கொண்டமை, ஊனை நாடகமாடுவித்தமை, உனைப் பருக வைத்தமை, ஞான நாடகமாடுவித்தமை ஆகிய இவைகள் பயனிலவாகும்; ஆதலாற் கொல்லாது இப்போதே என்னை உய்யக் கொண்டருள வேண்டும் என்பதாம்.

இதன்கண், "நச்சு மாமரமாயினும் கொலார் நானும் அங்ஙனே" என்பதனால் கொல்லாது பாதுகாத்து உய்யக் கொண்டருள வேண்டும் என வேண்டுதல் அதீதமாகிய சிவானந்த நுகர்ச்சிப்பொருட்டு என்பது பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் புலனாதல் காண்க. 96.

(தொடரும்...

யாராவது நம்மைப் புகழ்ந்தால் மகிழ்ச்சி அடையாதீர்கள். அதேபோல, இகழ்ந்து பேசினாலும் கவலை வேண்டாம். புகழையும், பழியையும் சமமாக எடுத்துக்கொண்டால் மனதில் அமைதி நிலைத்திருக்கும்.

*அறிஞர்களின் கருவூலங்களாக விளங்குவது புத்தகங்கள்.*

# கல்கி அவதாரச் சிறப்பு

– **திருமதி ப. நடராசா** அவர்கள் –

பஞ்சபூத பூதமாகப் பிரபஞ்சச் சக்தியெனும்
வெண்புரவி மீதமர்ந்து பூதம் அதையடக்கி வசப்படுத்தி
அஞ்செலென அபயந்தரும் மாயத்திரை கிழிக்கும் ஞானவாளேந்தி
நுண்மதி துலங்கவரும் கல்கி பகவான் கதைக்குக் கணபதியே காப்பு

ஆம் இப்பிரபஞ்சத்தின் சக்தியே பஞ்சபூதங்கள். இவை இயல்பாக இயங்கிக் கொண்டிருப்பன. இது இயற்கையெனப்படும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து இயற்கைச் சக்திகளால் ஆனதே உலகம். இவையைந்தும் உலக இயக்கத்தின் ஆதார சக்திகள். இவ்வைந்தில் ஒன்றில்லாவிடினும் உலகம் வாழாது. ஆகவே இவை ஐந்தும் சமமானவை. உலகில் தோன்றிய அத்தனை பொருட்களும் நம் புறக்கண்களுக்குத் தோற்றப்படும் எல்லா உருவங்களும் இப் பஞ்சபூதச் சேர்க்கையினால் ஆனவையே. இவ்வைந்து சக்திகளையும் சமமாகப் பேணுமிடத்து அமைதி நிலவும்.

இச்சமநிலையைப் பேணும் அறிவைத் தருவது இறைசக்தியாகிய ஆன்மீக அறிவு. இவ்வறிவே வாழ்வியலின் மூலாதார (அடிப்படை) அறிவாகும். இவ்வறிவைப் பெறுவதன் மூலமே அமைதியான நிம்மதியான வாழ்வை உலகிலுள்ள அனைத்துயிர்களும் வாழ்ந்து அனுபவித்து மகிழ முடியும். ஆகவே உலகின் படைப்புக்களில் எல்லாம் உயர்வான சிறப்பான படைப்பாகக் கருதப்படும் மனித பிறவிக்கே இதை உணர்ந்து செயற்படுத்தி இவ்வுலகைச் செம்மையாக்க முடியும். ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த அடிப்படை அறிவு அவசியமாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க ஒவ்வொரு மனிதக் குழந்தைக்கும் ஆரம்பக் கல்வியாக இவ்வான்மீகக் கல்வி அமைய வேண்டுவது அவசியம் ஆகும். இது வாழ்வின் அத்திவாரமாகும். வாழ்வின் அடித்தளமாகிய மூலாதாரம் உறுதியாக அமைந்தால்த்தான் அதன்மேல் கட்டியெழுப்பப் படும் ஆறு ஆதாரங்களாகிய ஆறறிவும் செம்மையாக அமையும். அப்போதுதான் அறிவில் தெளிவு உண்டாகும். நல்லவை தீயவையை அறிந்து விலக்க வேண்டியவற்றை விலக்கிக் கொள்ள வேண்டியவற்றை ஏற்றுக் கொண்டு செயற்பட முடியும். ஆகவே உலக வாழ்வு சீராக அமைய உறுதியாக அடித்தளமாக விளங்குவது இறையறிவாகிய ஆன்மீக அறிவாகும். பிரம்மத்திலிருந்தே உலகம் தோற்றத்திற்கு வந்தது. தோற்றத்திற்கு முன் உலகம் ஒடுங்கியிருப்பது பிரம்மத்திலாகும். பிரம்மம் என்றும் உள்ளதால் சூனியம் என்று உலகைக் கூற முடியாது. உயிர் கண்ணுக்குப் புலப்படாமையால் "இல்லை" என்று தீர்மானிக்க முடியாது. ஆகவே பிரம்மம் உயிர்களை உள்ளடக்கிய முட்டையாகவும், விதையாகவும் கருதப்படுகின்றது. இது அருவுருவம் எனப்படுகின்றது.

அதாவது கண்ணுக்குப் புலப்படாத ஒன்றை உள்ளடக்கியுள்ள தோற்றமாகும்.

இது இறைவனின் அருவுருவத் திருமேனி யாகக் கொள்ளப்படுகின்றது. இறைவனின் இவ்வருவுருவத் திருமேனியே சிவலிங்க மூர்த்தமாகும். சிவம் என்றால் அன்பு, லிங்கம் என்றால் தொடர்புபடுத்தும் உணர்வு ஆகும். உலகைச் சிவத்துடன் (அன்புடன்) தொடர்பு படுத்தி இணைப்பதே சிவலிங்கத்தின் இயல் பான தோற்றமாகும். இது தானே இயல்பாகத் தோன்றுவதால் சுயம்புலிங்கம் என அழைக்கப் படுகின்றது. இதுவே ஆதிமூலமாகையால் இதனது சக்திப் பிரவாகமே உலக இயக்கத் தின் மூலசக்தியாகும். ஓம் எனும் ஒலி இதனின் றும் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருப்பதால் இது நாதப்பிரம்மம் ஆகின்றது.

ஓம் என்னும் ஒலியால் நான் உள்ளே உள்ளேன் என்று அறியப்படுகின்றது. உள்ளே இருந்து சப்திப்பவர் யார்? அவர் வெளியே வந்தால்த்தானே யார் என அறிந்து கொள்ள லாம். சிவலிங்கத் திருமேனியில் இருந்து உலகத் தோற்றத்திற்கு வந்து சீராக ஒரே லயத்துடன் இயங்குவதற்கு ஓர் தாளலயம் உருவாகின்றது. இத்தாளலயத்துடன் இணைந்து ஆடுவதே ஆடல் வல்லானாகிய நடராஜப் பெருமானின் திருநடனம். இவ்வாடல் மூலம் பஞ்சகிருத்தியமாகப் பரிணமிக்கின்றது. "ஓம்" என்னும் நான் பஞ்சபூதங்களையும் வசப்படுத்தி தாளலயத்திற்கேற்ப ஒழுங்குபடுத்துவதால் உலகம் சீராக இயங்குகின்றது. இத் தாள லயத்திற்கேற்ப ஒலிக்கும் மந்திரச்சொல் "நமசி வாய" என்னும் பஞ்சாட்சரமாகும். இப்போ "ஓம்" என்னும் இறைசக்தியாகிய நான் "நமசி வாய" என்னும் மந்திர ஒலியால் ஐம்பூதங் களையும் வசப்படுத்தும்போது நான் அதுவாக இயங்குவதால் உள்ளது ஒன்றாகின்றது.

வலது காலை நிலத்தில் ஊன்றி இடது காலைத் தூக்கி ஆடுவதே நடராஜப் பெருமானின் தோற்றமாகும். வலதுகால் உறுதியாக நின்றால்த்தான் இடது காலை அந்தரத்தில் வைத்துக்கொண்டே ஆட முடி யும். இடது பாகமாகிய உலகம் அந்தரத்தில் சுழல்கின்றது. பூமித்தாயாகிய அன்னை உலகை இயக்கும் கர்த்தாவாகிய இறை வனைத் தாங்கி நிற்பதால் அன்னை பராசக்தி அந்த இறைவனுக்கும் தாயாகின்றாள். இதை நாம் உலக நோக்கில் உணர்ந்து கவனித் தால் கண்ணுக்குப் புலனாகாத மின் சக்தியை (காந்த சக்தி) உபயோகித்து ஒளியாகவும் மற்றும் பல இயங்கு சக்தியாகவும் பயன் படுத்துகின்றோம்.

இடி, மழை, புயல் என்பவற்றால் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கும் பயன் படுத்துபவர்களுக்கும் ஊறு ஏற்படாவண்ணம் "இடிதாங்கி" என்னும் "வயரை" நிலத்தில் புதைத்து வைக்கின்றோம். இப்பூமியின் காந்த சக்தியால் ஈர்க்கப்படுவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை எத்தனை பெரிய இடிகளை யும் தாங்கி மக்களைக் காப்பவள் அன்னை ஆதிபராசக்தி. ஆகவே மூலசக்தியாகிய அன்னை ஆதி என அழைக்கப்படுகின்றாள் வெட்டவெளியில் இருந்து நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கும் உருவாகின. ஆத லால் இந்நான்கு பூதங்களுக்கும் ஆதாரமாய் உள்ள ஆகாயத்தின் ஈர்ப்பு சக்தியால்த்தான் பூமி அந்தரத்தில் தன்னிலை பிறளாமல் சுற்றிக்கொண்டிருக்கின்றது. பூதங்களைந்தை யும் சமநிலை பிறழாது இயக்கும் இயக் குனர் பகவான் எனப்படுகின்றார். இதனைக் குறித்தே பொய்யாமொழிப் புலவராகிய திரு வள்ளுவரும் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று முத லாவது குறளில் கடவுள் வாழ்த்தாகக் கூறி உள்ளார்.

இறைவனாகிய பகவான் தன் மாயா சக்தியால் உலகைத் தோற்றுவிக்கின்றார்.

*செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையாது.*

உலக வாழ்க்கையில் மூழ்கி மாயாசக்தியின் வசப்பட்ட மனிதன் கர்த்தாவை மறந்து தானே செயல்களுக்குக் கர்த்தா என மயங்கி விடுவதால் பேதபுத்தி தோன்றுகின்றது. இந்த உடம்பே நான் என எண்ணுவதால் சுயநலம் உண்டாகின்றது. புறப்பொருட்களை ஆராயும் அறிவு விருத்தியடைய போட்டி மனப்பான்மை உருவாகின்றது. இறைவனின் ஒவ்வொரு செயலையும் தனதாக்கிக் கொண்டதால் அதன் விளைவையும் அவனே அனுபவிக்கின்றான். இதனால் நான் யார் என்பதை மனிதன் மறந்து விடுகின்றான். தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிந்தவன் தன்னை அறியாமல் தளையிற் சிக்கித் திண்டாடுகின்றான். தன்னொளியாகிய சுயத்தை மறந்ததனால் இருட்டில் வழியறியாமல் தவிக்கின்றான். இருட்டில் இருந்து வெளிவர தன்னாலான முயற்சிகள் எல்லாவற்றையும் முயற்சித்துத் தோல்வி கண்டபின் தனக்கு மேலுள்ள சக்தியின் எண்ணம் உண்டாகின்றது. பரமபிதாவே என்னைக் கைதூக்கி விடவேண்டும் எனக் கூவி அழைக்கின்றான். உலக விளையாட்டில் களைத்துப் போன குழந்தைகளின் குரல் கேட்டு இறைவன் இரங்குகின்றார். இறங்கி வருகின்றார். குருவாக வந்து மாயத் திரையைக் கிழித்து உள்ளதை உள்ளபடி காட்டுகின்றார்.

மனிதன் புறப்பட்ட இடத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்கின்றான். இலகுவாகத் தன் வீட்டைக் கண்டுபிடித்து சென்றடைகின்றான். இறைவன் உடமையாகிய உலகச் சொத்துக்கள் உலக வாழ் உயிர்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானவை. இவற்றைத் தனது உடைமையாக்கிக்கொள்ள எண்ணும்போதே ஒருவன் வழிதவறிப் போகின்றான். இதனால் தர்மம் தடுமாறுகின்றது. அதர்மம் தலையெடுக்கின்றது. நல்லோர் நசுக்கப்படுகின்றனர் இதனால் உதவி கோரி இறைவனைக் கூவி அழைக்கின்றனர். இவ்வாறு அதர்மம் அதிகரித்து கொடுமைகள் மலியும்போது இறைவன் மனித உருத்தாங்கி வருகின்றார். கொடுமைமிக்க மக்களை அழித்து நல்லவர்களைக் காக்கின்றார். ஆனால் கலியுகத்தின் உச்சக்கட்டமாகிய இன்றைய நிலையில் மனித சமுதாயம் முழுவதுமே மலக்குவியலிடையே அழுந்தி அஞ்ஞான இருளில் மூழ்கி பாதாளச் சாக்கடையில் விழுந்து அல்லல் படுவதைத் தாங்காத பூமித்தாய் இறைவனை நோக்கித் தவமிருந்து பிள்ளைகளை மீட்டுத் தரும்படி இறைவனிடம் இறைஞ்சுகின்றார். இறைவா நீ உன்னை வெளிப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. உன் பூரணத்தன்மையைப் புலப்படுத்த வேண்டிய நேரம் இதுவே. இருள் சூழ்ந்த உலகுக்கு ஒளியைப் பாய்ச்ச வேண்டிய தருணம் இது. பாவச் செயல்களின் சுமையால் உலகம் தடுமாறித் தத்தளிக்கின்றது. தன்னை வெளிப்படுத்தும் கலியுக அவதாரமே கல்கி அவதாரமாகும். எல்லாப் பாவ மூட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்க வல்லது சிவநாமம் ஆகும். எல்லாப் பாவ கர்மாக்களையும் அழிக்க வல்லது சிவதொண்டு.

பாவிகளை இரட்சித்து ஈடேற்ற இறங்கி வருகின்றார் இறைவன் கலியுகவரதனாக கல்கி அவதாரமாக. இறைவனின் மூத்த பிள்ளையாக சக்தியின் அம்சமாக உலகில் அவதரித்த முதற் பிள்ளையாகிய கணபதி உலகப்பிள்ளைகள் அனைவருக்கும் மூத்த அண்ணனாக இருந்து காட்டும் வழியே ஔவையார் வாயிலாகவும் வள்ளுவர் வாயிலாகவும் வந்த அறநெறி அமுதமான நல்லறிவைத் தூண்டும் ஞான அமிர்தமாகும். இதில் இருந்து நாம் உலக சக்தியை வசப்படுத்தி தூய வாழ்வில் முன்னேறி மேல்நோக்கிச் செல்வதற்கான படிகளே இல்லறவாழ்வில்

*தன்னிடம் தானே நம்பிக்கை இழப்பது இறைவனிடம் நம்பிக்கை இழப்பதாகும்.*

அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அறத்தை மறந்து அதர்ம வழியில் பொருளைத் தேடினால் வருவது துன்பம். அது வீட்டுக்குச் செல்லும் வழியையும் மறைக்கின்றது. இருளை நீக்கி ஒளியைத் தரும் ஞானச் சுடராக இறங்கி வருகின்றார் கல்கி அவதாரமாக. இந்த அவ தாரத்தின் தனிச் சிறப்பு எதுவென்றால் இன்று தான்தோன்றித்தனம் மேலோங்கியுள்ளதால் ஒருவர் சொல்லைக் கேட்கும் நிலையில் மற்ற வர் இல்லை.

திருடன் தானாகப் பார்த்துத் திருந்தா விட்டால் யாராலும் திருட்டை ஒழிக்க முடி யாது. ஆயுத பலத்தாலோ சட்டத்தினாலோ சாதிக்க முடியாததைச் சாதித்து தர்மத்தை நிலைநாட்டுவதே கல்கி அவதாரத்தின் நோக்க மாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளே ஒளிந்துகொண்டிருக்கும் மனச்சாட்சியை அவர வர் உணர்ந்து கொள்ள வைப்பதே கல்கி அவதார நோக்கமாகும். மனத்திற்குச் சாட்சி யாக, ஒவ்வொரு எண்ணங்களின் தோற்றத்திற் குச் சாட்சியாக இருந்து எல்லாப் பதிவுகளை யும் ஆதாரமாக வைத்திருப்பவர் இறைவன். இறைவனுக்கும் மனித மனத்திற்கும் இடையே ஆசை என்னும் கருந்திரை விழுந்து விட்ட தால் என்னை யாரும் பார்க்கவில்லை நான் செய்வது யாருக்கும் தெரியாது என நினைத் துச் செயற்பட்டு மனிதன் மீளாத் துயரத்தில் அவிழ்க்க முடியாத பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டான். இவ்வாறு சிக்கலில் மாட்டியவர் களை விடுவிக்க வருகின்றார் ஞானசூரியனாக இறைவன். கையிலுள்ள ஞான வாளால் இறை வனுக்கும் மனிதனுக்கும் இடையே விழுந்த ஆசை என்னும் மாயத் திரையை கிழித்து இத்தனை காலம் காணாதிருந்த அன்புத் தந்தையாகிய இறைவனைக் கண்டு கதறி அழும் நிலைக்கு மனிதனை உருக வைப் பதே கலியுகவரதனின் கல்கி அவதாரமாகும். இதை விளக்க வல்லது வேல். வேலின் அடிப்பாகம் உறுதியான திடமான ஒரு இடத்தில் பிரதிட்டை செய்யாவிட்டால் அது உறுதியாக நேராக நிற்காது சரிந்து விழும். செங்கோலின் சின்னமாகிய வேல் சாயாதிருக்க அதைத் தாங்கி நிற்கும் மூலாதாரமாகிய அன்னையும் பிதாவுமாகிய சத்தியமும் தர்ம மும் உறுதியாக இருக்க வேண்டும். நடுத்தண் டாகிய முள்ளந்தண்டு நேராக இருந்தால் தான் மூலசக்தியாகிய அம்மையப்பனின் சக்தி ஒளியாக மேலே ஒவ்வோர் ஆதாரமாகச் சென்று மலர்ந்து மூளைக்குச் செல்கின்றது. மூளை யில் இவ்வொளி பட்ட மாத்திரத்தில் புத்தியில் தெளிவு உண்டாகின்றது. இந்த முள்ளந் தண்டு வழியாக மேலே செல்லும் ஆறு ஆதாரங்களும் ஆறு தாமரைகளாகவும் அதன் மீது வீசும் ஒளி முருகனாகவும் சித்தரிக்கப் படும் விந்தை இதுதான். இத்தனை விந்தை களையும் நமக்குள்ளே கண்டு வியக்க வைப் பதுதான் கல்கி அவதாரத்தின் நோக்கம் ஆகும். வேலின் கூர் முனை எத்தகைய சிக் கலையும் எளிதாக எடுக்கவல்ல கூரிய நுண் ணறிவின் சின்னமாகும். செய்த தப்புகளை இக் கூர்முனையால் குத்திக் குத்தி உணர வைத்து சம்சாரச் சூழலாகிய சிக்கலிலிருந்து விடுவிப்பதால் இது ஞானவேல் ஆகின்றது. சிவனின் அம்சமாகிய முருகனுக்கு அன்னை பராசக்தியின் அம்சமான வேல் ஞானசக்தி யாக விளங்கி ஞானச் சுடர் விளக்கை அடி யார்களின் உள்ளத்தில் ஏற்றி வைத்து அடி யார்களை மகிழ்விப்பதே அவன் வேலை, அவன் லீலை.

உள்ளிருந்து ஊக்குவிக்கும் ஞான சக்தியாக சத்திய ஒளியாக ஒவ்வோர் இதயத் திலும் புகுந்து விளையாடி நான் அவன் என்ற பேதமின்றி அகமகிழ்வதே கல்கி அவ தார நோக்கமும் சிறப்பும் ஆகும். ஆயுத

*கலங்கரை உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*

பலத்தால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதிக்க முடியும் என்பதை உலகறிய வைப்பதே இந்த அவதாரத்தின் நோக்கமாகும். இதற்கான அறிகுறிகள் இப்போது தோன்றத் தொடங்கியுள்ளன. முழு உலகும் இந்த ஞான ஒளியில் பிரகாசிக்கும் நாள் நெருங்கி விட்டது. அவனருளாலே அவன் தாள் வணங்கி, அவனது செய்தியையும் அவனருளாலே உலகறியச்செய்ய வைப்பதும் அவனது திருவிளையாடலே ஆகும். உலகமெல்லாம் சத்திய ஒளியாகிய ஞான வெளியின் ஒளியில் பிரகாசித்து எதிரிகளில்லாத அன்பு உலகில் நிம்மதியான, ஆரோக்கியமான, அச்சமற்ற வாழ்வு வாழ வழிகாட்டியாக, வழித் துணையாக விழித்துணையாக, என்றும் பிரியாதிருக்கும் துணைவனாக இறங்கி வருகின்றார் இறைவன். இவரை வரவேற்று வாழ்த்துரைக்க அனைவரும் ஒன்று கூடுவோம்.

எங்கும் எதிலும் அவனே
எல்லாம் அவன் செயலே.

## பொன் நாளே வருக!

சேற்று வயற் காட்டினிலே,
சேமமுற உழைத்துழவன்
நாற்று நட்டுப் பயிர் வளர்த்து,
நல் விளைவைக் கண்டு, தான்
ஏற்றமுற, உதவுகின்ற
எழிலோன் கதிரவனைப்,
போற்றியுமே பொங்கலிடும்
பொன் நாளே! நீ வருக!!

புத்தாடைகள் புனைந்து,
புதுக் கலசந்தானெடுத்து,
புத்தரிசியோடு பால்,
பழம், சர்க்கரை கலந்து,
தித்திக்கும் பொங்கல் பொங்கி,
திக்கெட்டும் கொண்டாடி
சித்தங் களிக்க வந்த
சீர் பெறு நாளே! வருக!!

பாடுபட்டுக் கழனிகளில்,
பல நாட்கள் உழைத்தபயன்
வீடுகட்கு நெல்மணிகளாய்
வந்து சேர்ந்ததனால்
ஈடிணையே இல்லாத
இன்பத்தில் உழவரெலாம்,
கூடிக் களித்திங்கு,
குலவும் நாளே வருக!

முற்றத்தில் கோலமிட்டு,
முறையாகப் பந்தலிட்டு
உற்றார் உறவினர்கள்
ஊர் மக்கள், மற்றும் தம்
சுற்றத்தாரோடு சேர்ந்து,
சுவையான பொங்கலிடும்,
நற்றமிழர் திரு நாளே!
நயம் பெற நீ வருவாயே!!

-கி. குலசேகரன்-

*சத்தியம், தர்மம், உண்மை, அகிம்சை ஆகியவையே உண்மை மனிதனின் நெறி.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## ருக்மிணி கல்யாணம்

மதுராபுரியில் கிருஷ்ணர், திரிவக்ரை என்ற கூனிக்கு வாக்களித்தபடி அவளில்லம் சென்று அவள் விருப்பத்தை நிறைவேற்றினார். அடுத்து அக்ரூரர் தம் இல்லத்தில் பரமனின் திருப்பாதங்கள் பதியவேண்டுமெனக் கேட்டிருந் தார். அதை நிறைவேற்ற அவர் இல்லம் போனார்.

அக்ரூரர் கிருஷ்ணரை வரவேற்று அவரது திருவடிகளை வணங்கி அவர் பாதங் களை அலம்பி, அந்தத் தீர்த்தத்தை தன் தலையில் தெளித்துக்கொண்டார். பிறகு ஒரு நாள் அக்ரூரரை அஸ்தினாபுரத்திற்கு அனுப்பி பாண்டவர்களின் நலனை அறிந்து வரச் சொன் னார். வசுதேவரின் சகோதரிதான் குந்தி. பாண்டவர்களின் அன்னை. கிருஷ்ணரின் அத்தையாவர். குந்தி அக்ரூரரிடம், பலராமரும் கிருஷ்ணரும் வந்து தங்கள் துயரங்களைப் போக்க வேண்டுமென்று சொல்லியனுப்பினார். அதன்படியே சென்று வந்த அக்ரூரர் குந்தியின் வார்த்தைகளையும், அஸ்தினாபுரத்திலுள்ள கௌரவர்களின் எண்ணங்களையும் எடுத் துரைத்தார்.

கிருஷ்ணர் துவாரகைக்கு வந்தார். துவாரகையே விழாக்கோலம் பூண்டது. பிரம்ம தேவர் சொற்படி ரைவதர் என்ற மன்னர் தன் மகள் ரேவதியை பலராமருக்கு மணமுடித்துக் கொடுத்தார். பீஷ்மக மன்னரின் மகள் ருக்மிணி. கிருஷ்ணரின் பெருமைகளைக் கேள்வியுற்று கிருஷ்ணரையே மணக்க விரும்பினாள். ஆனால் அவளுடைய அண்ணன் கிருஷ்ணர் மேல் துவேஷம் கொண்டிருந்தான். இவன் ஜராசந்தன், சிசுபாலனுக்கு வேண்டப்பட்டவன். ருக்மிணியை சிசுபாலனுக்கு மணமுடிக்க தீர மானித்தான். துடித்துத் துவண்டுபோனாள் ருக் மிணி. கிருஷ்ணருக்கு ஒரு கடிதம் எழுதி அந்தணரிடம் கொடுத்து அனுப்பினாள். கிருஷ் ணர் உடனே ரதத்திலேறி புறப்பட்டு வந்தார். இதனை அறிந்த பலராமர் பெரும்படையோடு பின்னாலேயே வந்தார். அம்பிகையின் ஆலயத் துக்கு வந்த ருக்மிணியை சிசுபாலன் முத லானோர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கிருஷ்ணர் தூக்கி தன் ரதத்தில் ஏற்றிக் கொண்டு கிளம்பினார். ஜராசந்தன் முதலியோர் பெரும் போர் புரிந்தனர். கிருஷ்ணரை எதிர்த்த வர்கள் முடிவு என்னாகும் என்பது தெரிந்தது தானே. யாதவப்படை எதிரிப்படை முழுவதை யும் அழித்தது.

துவாரகைக்கு வந்து ருக்மிணியை கோலாகலமாக முறைப்படி மணந்தார். மகா விஷ்ணுவும், மகாலட்சுமியுமே இவர்கள் என்று மக்கள் கொண்டாடினார்கள். ருக்மிணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மன்மதனே கிருஷ் ணரின் மகனாக வந்துதித்தான். அவனே பிரத்யும்னன்.

**ஸ்யமந்தகமணி**

துவாரகையில் வசித்துவந்த சத்ராஜித் என்ற யாதவன் சூரியபகவானுடைய பரம பக்தன். அவனுக்கு சூரியபகவான் "ஸ்யமந்தகம்" என்ற மணியைக் கொடுத்தார். அவன் அந்த மணியைக் கழுத்தில் அணிந்திருந்தான். அந்த மணியின் ஒளியால் கண்கூசிய மக்கள் சூரிய பகவான்தான் வந்து கொண்டிருக்கிறார் என்றனர். சூரிய பகவான் கொடுத்த மணியால் ஒளிவீசிக்கொண்டிருக்கின்ற சத்ராஜித் அந்த மணியை இல்லத்தில் வைத்து பூஜித்து வந்தான். அந்த மணியின் விஷேசம் ஒளி மட்டுமல்ல, அது தினமும் 8 பாரம் தங்கத்தை உற்பத்தி செய்யும். அந்த மணி இருக்கும் இடத்தில் வறுமை, அகால மரணம், நோய்கள், திருட்டுகள் முதலியவை ஏற்படாது. மிக உயர்ந்த பொருள் என்றால் அது மன்னரிடம்தான் இருக்கவேண்டும். உக்கிரசேன மன்னரிடம் அதனைக் கொடுத்துவிடுமாறு கிருஷ்ணர் சொன்னார். அவன் மறுத்து விட்டான். அவன் தம்பி பிரசேனன் ஒருநாள் வேட்டைக்குப் போகும்போது அந்த மணியைக் கழுத்தில் கட்டிக்கொண்டு போனான். அந்தக் காட்டில் ஒரு சிங்கம் அவனைக் கொன்று அந்த மணியை எடுத்துக்கொண்டு போனது.

அந்தக் காட்டில் ஜாம்பவான் இருந்தார். ஸ்ரீ இராமாயண காலத்தில் கரடியரசனாக இருந்த ஜாம்பவான்தான் இவர். இவர் அந்த சிங்கத்தைக் கொன்று அந்த மணியைத் தன் குகைக்கு கொண்டுபோனார். அவருக்கு ஜாம்பவதி என்ற மகளும், ஒரு பாலகனும் இருந்தனர். அந்த மணியைக் குழந்தை வைத்து விளையாடியது.

பிரசேனனைக் கொன்று அந்த மணியை கிருஷ்ணர் அபகரித்து விட்டதாக சத்ராஜித் வீண்பழி சுமத்தினான். இந்த உண்மையை வெளிப்படுத்த சிலரோடு கிருஷ்ணர் காட்டிற்குப் புறப்பட்டார். கொஞ்ச தூரம் போனதும் இறந்து கிடந்த பிரசேனனைக் கண்டார்கள். அவனைப் பார்த்ததும் சிங்கம்தான் அவனை அடித்துக் கொன்று மணியைக் கொண்டு போனது புரிந்தது. அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றிப்போக சிங்கம் இறந்து கிடந்தது. ஆனால் மணி இல்லை. கொஞ்ச தூரம் போனதும் இருண்ட குகை ஒன்று தெரிந்தது. வந்தவர்களை நிறுத்திவிட்டு கிருஷ்ணர் குகைக்குள்ளே போனார். குழந்தை மணியை வைத்து விளையாடிக்கொண்டிருந்தது. குழந்தையின் அருகில் போனார். அதற்குள் வளர்ப்புத் தாய் வந்து கிருஷ்ணரைக் கண்டதும் பயந்து அலறினாள். கூச்சல் கேட்டதும் ஜாம்பவான் விரைந்து வந்தார். ஜாம்பவானுக்கும், கிருஷ்ணருக்கும் சண்டை ஏற்பட்டது. 28 நாட்கள் நடந்த சண்டையில் ஜாம்பவான் தோல்வியுற்றதும், சாட்சாத் பகவான் ஸ்ரீ ராமர்தான் இந்த லீலையைச் செய்கிறார் என்று தீர்மானித்து கிருஷ்ணரைத் துதித்தார். கிருஷ்ணர் மகிழ்ச்சியோடு ஜாம்பவானை ஆரத்தழுவிக் கொண்டார். ஜாம்பவான் மிக மகிழ்ந்து ஸ்யமந்தக மணியையும் தனது அன்பு மகளான ஜாம்பவதியையும் அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

குகை வாசலில் காத்திருந்தவர்கள் நாள் கணக்காயினும் கிருஷ்ணர் வராதபடியால் துவாரகைக்குத் திரும்பி வந்து விஷயத்தைச் சொன்னார்கள். எல்லோரும் என்ன ஆயிற்றோ என்று துடித்து அம்பிகையைத் துதித்தார்கள். அந்த நேரம் அவர்கள் களிப்புறும் வண்ணம் ஸ்யமந்தக மணியோடும், ஜாம்பவதியோடும் கிருஷ்ணர் வந்து சேர்ந்தார்.

பின்னர் சத்ராஜிதனைக் கூப்பிட் டனுப்பி எல்லோரும் சாட்சியாக ஸ்யமந்தக மணியைக் கொடுத்தார். அவர்மீது வீண்பழி சுமத்தியதற்கு மனம் நொந்து, தன் அழகான மகள் சத்யபாமாவை மணமுடித்து, மணியை யும் ஒப்படைத்தார். கிருஷ்ணர் சத்யபாமாவை ஏற்றுக்கொண்டு, மணியை சத்ராஜிதனிடமே ஒப்படைத்தார். அந்த மணி தினமும் 8 பாரம் தங்கத்தைத் தருவதால் சிலருக்கு அதன்மீது ஆசை ஏற்பட்டது. சததன்வா என்பவன் கிருஷ் ணரும் பலராமரும் இல்லாத நேரம் பார்த்து சத்ராஜிதனைக் கொன்றுவிட்டு மணியை எடுத்துக்கொண்டு போனான். சத்தியபாமா மூலம் செய்தி அறிந்த கிருஷ்ணர் திரும்பி வந்ததும், தன்னைக் கொன்றுவிடுவாரென்று மணியை அக்ரூரரிடம் கொடுத்துவிட்டு ஓடி னான். கிருஷ்ணர் அவனைத் துரத்திப் பிடித்து மிதிலாபுரியில் அவனைக் கொன்று அக்ரூர ரிடம் மணியைக் கொடுத்தார். இந்த ஸ்யமந்த மணி சரிதம் படிப்பவர்களுடையதும், கேட்பவர் களுடையதும் பாபங்களைப் போக்கி சாந் தியை அளிக்கவல்லது.

கிருஷ்ணர் இந்திரபிரஸ்தம் போனார். அங்கு அர்ச்சுனனுடன் இருக்கும்போது சூரிய பகவான் மகளான காளிந்தி கிருஷ்ணரை விரும்பினாள். காளிந்தியையும் திருமணஞ் செய்தார். பின்பு அத்தைமகள் மித்ரவிந்தை யையும் மணம் செய்தார். கோசல நாட்டு மன்னன் நக்னஜித். அவன் தன் மகளான சத்யாவை, தன்னிடமுள்ள ஏழு காளைகளை அடக்குபவர்கே மணஞ் செய்து கொடுப்பதாக அறிவித்தார். கிருஷ்ணர் ஏழு காளைகளையும் அடக்கி சத்யாவை மணந்தார். இவளையே நப்பின்னை என்பார்கள். அதன்பின் கேகய நாட்டு மன்னன் மகளான பத்ரையும், மத்ர தேசத்து மன்னன் மகளான லஷ்மணையை யும், மொத்தம் எட்டுப்பேரை மணமுடித்தார். ஒவ்வொருவருக்கும் பத்துப் பிள்ளைகள் பிறந் தார்கள். பிள்ளைகளும், பேரன்களுமாக கோடி கோடியாக இருந்தார்கள்.

"அடைந்தார்க்கு அருளும்
அருளாளனே சரணம்"

(தொடரும்...

# குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பெப்ரவரி | 12 | தை 29 | புதன் | சண்டேசுரர் |
| மார்ச் | 03 | மாசி 20 | செவ்வாய் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச் | 10 | மாசி 27 | செவ்வாய் | திருவள்ளுவர் |
| மார்ச் | 22 | பங் 09 | ஞாயிறு | பரமகுரு சுவாமி |
| மார்ச் | 24 | பங் 11 | செவ்வாய் | குழந்தைவேற் சுவாமி |
| மார்ச் | 26 | பங் 13 | வியாழன் | செல்லப்பா சுவாமி |

*கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு உனக்கு நீயே கொடுத்துக்கொள்ளும் தண்டனை.*

# நாரத முனிவரும் கொடிய கள்வனும்

– வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

முன்னொரு காலத்தில் ஒரு கொடிய கள்வன் அடர்த்தியான காட்டில் வசித்து வந்தான். வழிப்போக்கர்களிடம் பொருட்களை கொள்ளையடித்து குதூகலமாக வாழ்ந்து வந்தான். பல பிரயாணிகளைக் கொன்று பொருட்களை அபகரிப்பதில் அகமகிழ்ச்சி அடைந்தான். பலர் அந்தப் பக்கம் போவதை நிறுத்தி விட்டார்கள்.

ஒரு நாள், நாரத முனிவர் காட்டைக் கடந்து போக வேண்டிய தேவை ஏற்பட்டது. முனிவர் எளிய வாழ்வை மேற்கொள்வதால் ஒரு சிறிய பையுடனும், வீணையுடனும் சிறிய உணவுப் பொட்டலத்துடனும் சென்றார். கள்வன் கொடிய வாளுடன் சென்று நாரத முனிவரை நிற்கும்படி கட்டளையிட்டான். அபூர்வ தோற்றமும், அபூர்வ உடையும் உரத்த குரலும் நாரத முனிவரை ஏங்க வைக்கக் கூடியதாக அமைந்தது.

"அசையாமல் நில். ஓர் அடி எடுத்து வைத்தால் கொன்று விடுவேன்" சிங்கம்போல் கர்ஜனை செய்தான். "நல்லவனே! தங்களுக்கு என்ன வேண்டும்? என நாரத முனிவர் வினாவினர். "என்னிடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. நான் ஒரு ஞானி" மேலும் விளக்கமாகக் கூறினார். "என்னிடம் அப்படிப் பேசாதே. உன்னிடம் இருக்கும் அனைத்தையும் அப்படியே உடனே கொடுத்துவிடு" கள்வன் பயமுறுத்தினான். நாரத முனிவர் பயப்படவில்லை "என்னிடம் இருக்கும் பொருட்கள் வீணையும் சிறிய பையும்தான். இவை தங்களுக்கு பிரயோசனமாக இருக்குமானால் கொடுத்து விடுகிறேன்" எனக் கூறினார். பொருட்களைக் கொடுத்தார். "நான் மேலும் கூறுவதைக் கேள். எனது வீணையை நீ அபகரிக்கலாம். ஆனால் வீணையை வாசிப்பதற்கும் நான் பாடுவதற்கும் உரிய எனது ஆற்றலை, நுட்பத்தை உன்னால் அபகரிக்க முடியுமா?" என அச்சமின்றி விளக்கமாகக் கூறினார்.

குழப்பமடைந்த கள்வன் சிறிது நேரம் பேசாது நின்றான் "ஆம்! உங்களுடைய ஆற்றலை திறமையை என்னால் களவாட முடியாது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். பெரிய உண்மையை உணர்த்திவிட்டாய்" எனக் கள்வன் தாழ்மையாக எடுத்துக் கூறினான்.

"அன்பானவரே! எல்லாப் பொருட்களையும் எங்கே கொண்டுசெல்கிறீர்?" என நாரதமுனி கேட்டார். "எனது பெற்றோர் பிள்ளைகள்! மனைவி இக் காட்டில் என்னுடன் வசிக்கிறார்கள். அவர்களுக்கு உடுக்க உடையும் உண்ண உணவும் விளையாட வீணையும் தேவை" எனக் கள்வன் விளக்கமாகக் கூறினான்.

"தோழனே! பாவ மூட்டையை சுமந்து கொண்டிருக்கிறீரே! களவாடுவது ஒரு பெரிய

*நல்ல நட்பை இழப்பதைவிட கொஞ்சம் பணத்தை இழப்பது மேல்.*

பாவம். பாதகமான செயல். தினமும் இத் தவறான செயலைப் புரிந்து வருகிறீர்கள். உங்களுடைய பெற்றோரும் மனைவியும் பாவங்களில் ஒரு பகுதியைப் பகிர்ந்து கொள் வார்களா?" "ஏன் முடியாது? அவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். நான் அவர்களுக்கு உதவி புரிவதற்காகவே இப்பாவச் செயலை புரிகின்றேன்". "அவர்களுக்கு தங்களுடைய பாவச் செயல்கள் பற்றி விளக்கமாகக் கூறி யுள்ளீர்களா?" "இல்லை இனித்தான் கூற வேண்டும்". "உடனே சென்று விளக்கமாகக் கூறுங்கள்" என்றார் முனிவர்.

கள்வன், முனிவர் ஓடி மறைந்து விடு வார் என சந்தேகம் கொண்டான். தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினான். "நீ என் மீது சந்தேகம் கொள்கிறாய். என்னை ஒரு மரத்தில் கட்டிவை. தங்கள் வருகைக்கு நான் காத்திருப்பேன்" என அன்பாகக் கூறினார். கள்வன், முனிவரை மரத்தோடு சேர்த்துக் கட்டிய பின் தனது வீட்டிற்கு பொருட்களுடன் சென்றான். முனிவர் இந்த அதிசய பிறவியைக் கண்டு வியப்படைந்தார். அவர் தப்பி ஓட விரும்பவில்லை. "தந்தையே, எனது கேள் விக்குப் பொருத்தமான விடை தாருங்கள். நான் புரிந்து வரும் பாவங்களைப் பற்றி உங் களுக்குத் தெரியும். உங்களுடைய தேவை களைப் பூர்த்தி செய்வதற்காக என்பதும் உங்களுக்கு விளங்கும். எனது பாவச் சுமையை நீங்கள் பகிர்ந்து கொள்வீர்களா? எனது பாவச் சுமையைக் குறைப்பீர்களா?" "நான் உன்னைக் களவாடி உதவி புரியும் படி கேட்கவில்லை. உதவிபுரிதல் உனது கடமை. நீ எப்படி உழைக்கின்றாய் என்பது எனக்குத் தெரியத் தேவையில்லை. பாவ மூட்டையை நான் உன்னுடன் சேர்ந்து காவ மாட்டேன்'' மனைவியும் பிள்ளைகளும் கள்வனுடைய வேண்டுகோளை ஏற்கவில்லை. கள்வன் எதிர்பாராத விடையுடன் ஏமாற்றத் துடன் முனிவரிடம் சென்று அவர் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கோரினான். முனிவரை அவிழ்த்து விட்டான்.

"ஏன் நீ பாவச் செயல்களைத் தொடர்ந்து புரிய வேண்டும்? எல்லோரும் சுய நல வாதிகள். இந்த உண்மையை உணர் வாயாக. பாவச் செயல்களைப் புரியாது நல்ல செயல்களைப் புரிவதோடு செய்வதற்கு பிராயச்சித்தமாக ஆண்டவனை தினமும் வழிபாடு செய்" எனக் கூறி ஆசீர்வசித்தார் முனிவர். கள்வன் களவுத் தொழிலைக் கைவிட்டு நற்செயல்கள் புரிந்து நலமாக வாழ்ந்தான்.

## தர்மம்

இரக்கப்படுதலென்பது, மானுடநெறி. இது தர்மத்தின் ஓர் அங்கமுமாகின்றது. இத்தகைய இரக்க உணர்வுள்ளோரை ஏமாற்ற விளைவோர், பாவ ஆத்மாக்களாகின்றனர்.

பொய்யுரைத்து, நடித்து, வருவோரை நம்ப வைத்து ஏமாற்றுவது, தற்போது சகஜமாகிவிட்டது. சில பேர்வழிகள், தங்கள் துயரக் கதைகளைச் சொல்லிச் சொல்லியே, பிறரிடம் பொருள் கோருகின்றனர். ஆனால் அவர்கள் சொல்வதில் பெரும்பாலானவை, கற்பனை கலந்த நெடும்தொடர் என்பதை, இரக்கம் மிகுந்தவர்கள் கவனத்திற்கொள்வதுமில்லை.

துன்பப்பட்டவர்களைத் தாங்குதல், மேலான கைங்கரியமாகும். ஆனால், தர்மம் சேரும் இடத்தில் சேர வேண்டும். பற்பல காரணங்களைக் காட்டிப் பணம் சேகரிக்கும் கூட்டம் அதிகரித்துவிட்டது. எக்காரணம் கொண்டும், தர்மம் வீணாக அனுமதித்தலாகாது. ஏதிலிகளுக்காக இரங்குபவர்கள் இயன்றளவு வழங்குங்கள்.

*தோல்வி அடையக்கூடாது என்று போராடு, உலகம் உன் கையில்.*

# திருவிளையாடற் புராண வசனம்

(ஐந்தாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## திருமணப் படலம்

திருவருள் வடிவாகிய தடாதகைப் பிராட்டி அரசு செய்து கொண்டிருக்கும் நாளிலே, அவளுக்குத் திருக்கல்யாணஞ் செய்யும் பருவம் வந்தடுப்ப, அது கண்டு மாதாவாகிய காஞ்சனமாலை எம் பெருமாட்டியை நோக்கி, "உனக்குக் கன்னிப் பருவம் வந்தும் இன்னமும் விவாகம் இல்லையே" என்று துன்பமுற்றாள். தடாதகைப் பிராட்டி "தாயே! நீ நினைந்த எண்ணம் ஆம்பொழுது ஆகும்; நீ இரங்க வேண்டாம் நான் போய் இப் பூமண்டலத்திலும் எண்டிசைகளிலும் என் வெற்றியை நாட்டி மீளுவேன்; நீ இங்கே இரு" என்றாள்.

தடாதகைப் பிராட்டி சங்குகள் ஒலிப்பத் தேர்மேற் கொண்டு, பலவகைப்பட்ட வாத்தியங்களெல்லாம் முழங்க யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைச் சேனையுஞ் செல்ல, வெண்கொற்றக் குடை நிழற்ற மகளிர்கள் சாமரை வீச, ஒரு புறத்திலே பிராமணர்கள் ஆசிகூற, ஒரு புறத்திலே மனிதர்கள் கீதம்பாட, கயற்கொடியும் புலிக் கொடியும் விற்கொடியும் மயிற்பீலிக் குஞ்சமும் தன்னுடைய தேர்க் கருகிலே செல்ல, பக்கத்திலே சுமதியென்னும் மந்திரி ஒரு தேர் மீதேறித் தனது திருக்குறிப்பின்படி நால்வகைச் சேனைகளும் செல்லும் வண்ணம் கையிற் பிரம்பை நீட்டிச் சேவகஞ் செலுத்திக்கொண்டு செல்ல, இவ்வாறு சென்று, வடதேசத்திலுள்ள கயபதி முதலிய அரசர்களை வென்று யானை, குதிரை, தேர்களும் மாதர் கூட்டமும் திறையும் பெற்றாள். பின் இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களை வென்று, திறை கொண்டு, திருக்கைலாய மலையை வளைத்து கொண்டார்கள். அது கண்ட திருமலைக் காவலாளர்கள் விரைந்து சென்று, திருநந்தி தேவரை வணங்கி, அதனை விண்ணப்பஞ் செய்தார்கள். திருநந்திதேவர், பூத கணங்களை ஏவினார். அக் கணங்கள் தடாதகைப் பிராட்டியோடு பொருது தோற்று மீண்டார்கள். அதுகண்டு, திருநந்தி தேவர் கைலாசபதியாகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, நிகழ்ந்தனவற்றை விண்ணப்பஞ் செய்தார். பரமசிவன் புன்னகை செய்து, பினாக வில்லையும் படைக்கலங்களையும் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு, இடப வாகனத்தின் மேலேறி யுத்தகளத்திற்குச் சென்றார். அங்கே பெண்சிங்கம்போல நிற்கும் தமது தேவியாருடைய திருவுருவத்தையும் வீரத்தையும் எதிர்கண்டார். தடாதகைப் பிராட்டியும், ஒரு வீரக்கழல் கட்டிய திருவடியும், புலித்தோலுடையும், மழுப்படையேந்திய திருக் கரமும், திருவெண்ணீறணிந்த உபவீதம் பொருந்திய திருமார்பும், சடாமுடியும், தன்னையே நோக்குகின்ற பெருங்கருணைத் திருநோக்கும் பெற்ற தன்னுடைய வலப்பாதியை எதிர் கண்டாள். கண்டபொழுது நடுவிலுள்ள ஒரு தனம் மறைந்தது, உடனே உள்ளத்தில் நாணமும் மடமும் அச்சமும் உதிக்க, முன்னையன்பு வந்து குடிகொள்ள, அளகம் பிடரியிலே தாழ, கண்கள் புறவடியை நோக்க, தலை குனிந்து நின்றாள். முன்னாலே

தோன்றிய அசரீரி வாக்கை அறிந்த சுமதி தடாதகைப் பிராட்டியை வணங்கி நின்று, "தாயே! இந்தக் கைலாசபதியே உன் மண வாளன்" என்றான். எம் பெருமாட்டி அதுகேட்டு, பேரன்பு பெருக நின்றாள். கைலாசபதி பிராட் டியை நோக்கி, நீ திக்குவிசயத்தின் பொருட்டு எப்பொழுது புறப்பட்டாயோ, அப்பொழுது தொடங்கி நாமும் மதுரையை விட்டு, உன் னைப் பிரியாது தொடர்ந்து வந்தோம். இதற்கு எட்டா நாளாகிய சோமவாரத்திலே சுப லக் கினத்திலே உன்னை விவாகஞ் செய்ய வரு வோம்; நீ மதுரைக்குப் போ, என்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட தடாதகைப் பிராட்டி மதுரையை அடைந்து, மகளிர்கள் அட்ட மங்கலத்தோடும் எதிர்கொள்ளச் சென்று, திருமாளிகையிலே புகுந்தாள்.

மந்திரிகள் திருக்கல்யாணவோலை எழுதி, எல்லாத் தேயங்களுக்கும் விடுத்து, மதுரை நகரமெங்கும் மணமுரசு அறைவித் தார்கள். மணமுரசொலி கேட்ட நகரத்தார் யாவரும் பெருங்களிப்படைந்து, இந்திர னுடைய அமராவதி நகரமும் நாணும் வண் ணம் மதுரை நகரம் முழுவதையும் அலங்கரித் தார்கள். தடாதகைப் பிராட்டியாருடைய சுற்றத் தார்கள் இரத்தினமயமாகிய ஒரு திருக்கல் யாண மண்டபமும், அதனுள்ளே குண்ட மண் டல வேதிகைகளும், உருத்திரர் தேவர் முனிவர் முதலியோருக்கு ஆசனங்களும், நடுவே ஒரு விமானமும், அதன் நடுவே சிவ பெருமானும் தடாதகைப் பிராட்டியாரும் எழுந் தருளியிருக்கும் பொருட்டு ஒரு நவரத்தின சிங்காசனமும் செய்வித்தார்கள்.

தடாதகைப்பிராட்டியாருடைய திருக் கல்யாணத் திருமுகம் எழுந்தருளுதல் கேட்ட சகல தேயத்தரசர்களும் அத் திருமுகத்தை எதிர்கொண்டு வணங்கி இரு கையாலும் வாங்கி, முடிமேலேற்றி, அதிலெழுதப்பட்ட வாசகத்தைக் கேட்டறிந்து, களிகூர்ந்து, அது கொணர்ந்த தூதருக்கு ஆபரணம் பீதாம்பரம் முதலியன கொடுத்து, தங்கள் தங்கள் நாடு களின் உள்ள பலவகை வளங்களுங் கொண்டு, சேனைகளோடு விரைந்து வழிக் கொண்டு மதுரையை அடைந்து, தடாதகைப் பிராட்டியாரைத் தரிசித்து வணங்கிக்கொண்டு தங்கள் தங்கள் விடுதியிற் சேர்ந்தார்கள். அது நிற்க.

தடாதகைப் பிராட்டியார் மீண்ட பின்பு, சிவபெருமான் யுத்தகளத்தினின்றும் நீங்கி திருக்கைலாசத்திற் சென்று, வீற்றிருந்து கொண்டு, சங்குகன்னர் முதலிய கணாதிபர் களை விடுத்தருள, அவர்கள் உருத்திரர் தேவர்கள் முதலியோருடைய பதங்களிற் சென்று, கைலாசபதியினுடைய திருக்கல் யாண சோபனத்தைத் தெரிவித்தார்கள். அது கேட்டு மிக மகிழ்ந்து, காலாக்கினி ருத்திரர் கூர்மாண்டேசர் ஆடகேசர் வீரபத்திரர் ஐயனார் முதலிய உருத்திரர்களும் பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும், வியாக்கிர பாதர் பதஞ்சலி அகத்தியர் முதலிய முனிவர் களும், பிறரும் திருக்கைலாச மலையை அடைந்து, திருக்கோயிலின் புறத்தே சென்றார் கள். அதுகண்ட திருநந்தி தேவர் உள்ளே புகுந்து, சிவபெருமானை வணங்கி, விண்ணப் பஞ் செய்து, அவருடைய அனுமதிபெற்றுக் கொண்டு வந்து, அவர்களை உள்ளே விடுத் தருள, அவர்கள் உள்ளே சென்று, கைலாச பதியுடைய திருவடிகளை வணங்கினார்கள். சிவபெருமான் தமது சந்நிதியில் வணங்கித் துதிப்பவர்களுள்ளே சிலருக்குத் திருவார்த்தை யினாலும், சிலருக்குத் திருப்புன்முறுவலினா லும், சிலருக்குத் திருக்கடைக்கணோக்கத் தினாலும், சிலருக்குத் திருமுடி அசைத்தலி னாலும், அவரவர் தகுதிக்கேற்பத் திருவருள் சுரந்து, அங்கு நின்றெழுந்து, திருமணக்

கோலங்கொள்ளும் பொருட்டு ஒரு திருமண்ட பத்துள்ளே புகுந்தார். அவருடைய திருவுளக் குறிப்பை அறிந்த குபேரன் மெய்யன்புடனே அங்கே சென்று, வேதங்களும் பிரம விட்டு ணுக்களும் முனிவர்களும் தீண்டற்கரிய அருமைத் திருமேனியைத் தன் கையினாலே தீண்டி, திருமணக்கோலஞ் செய்து, பெருந் தவப் பயனைப் பெற்றான்.

பின்பு சிவபெருமான் குண்டோதரர் உடைய முதுகின் மேலே திருவடியை வைத்து, இடப வாகனத்தின் மேலேறி எழுந் தருளியிருந்து கொண்டு, கற்பகப் பூமாரி பெய்ய, மங்கல வாத்தியம் முழங்க, தேவ துந்துபி ஒலிக்க, அரம்பையர்கள் நடிக்க, பானுகம்பர் ஆயிரம் வாய்களினும் ஆயிரஞ் சங்குகளை வைத்து இரண்டாயிரம் கைகளா லும் பிடித்துக்கொண்டு ஊத, வாணாசுரன் ஆயிரங் கைகளாலே குடமுழாவைத் தாக்க, முனிவர்கள் கைகுவித்து, நெஞ்சு நெக்குருகும் வண்ணம் துதிக்க, கணநாதர்கள் சிவானந்த பரவசர்களாய்க் கைகொட்டி ஆடிப்பாட, ஈசா னர் அடைப்பையும் இந்திரன் காளாஞ்சியும் அக்கினி தூபகலசமும் வருணன் பூத்தட்டும் நிருதி கண்ணாடியும் ஏந்த, வாயு ஆலவட்டம் அசைக்க, குபேரன் திரவியங்களை முகந்து முகந்து வீச, இயமன் சனம் விலக்க, வேத புருடன் பாதுகையை முடியின்மேலே தாங்கிக் கொண்டு பின்னே செல்ல, கங்கை காவிரி முதலிய நதிகள் சாமரம் இரட்ட, குண்டோதரர் குடை பிடிக்க, ஆலால சுந்தரர் திருவெண்ணீ றும் திருமாலையும் ஏந்தி வர, வலப் பக்கத் திலே பிரம தேவரும் இடப்பக்கத்திலே விட்டுணு வும் கை குவித்துத் தோத்திரஞ் செய்ய, இவ்வாறே சென்று, மதுரை நகர்ப் புறத்தை அடைந்தார். அப்போது தடாதகைப் பிராட்டி யாருடைய மந்திரிமார்களும், சேனாதிபதிகளும், அரசர்களும் எதிர்கொண்டு வணங்கினார்கள். சிவபெருமான் மதுரையுட் புகுந்து, பிராமணர் கள் கும்பத்திலே தருப்பையும் அரசிலையும் தோய்த்த நீரை வீச, அவர்களுடைய பன்னி யர்கள் நீராசனஞ் சுற்ற, பெண்கள் அட்ட மங்கல மேந்தி எதிர்வர, திருமாளிகைமுன் சென்றார். அப்போது அரம்பையர்கள் வாத்தி யம் ஒலிக்க, கருப்பூர தீபம் ஏந்தி சிவபெரு மானை மும்முறை வலஞ் செய்தார்கள்.

சிவபெருமான் திருநந்தி தேவருடைய கையைப் பற்றிக்கொண்டு இடப வாகனத் தினின்றும் இழிந்து, விட்டுணுவும் பிரமாவும் இருபுறத்திலும் நீட்டுகின்ற கைகளைப் பற்றிக் கொண்டு, பாதுகையின் மேலே திருவடிகளைச் சாத்தி, நறுமலர்கள் பரப்பிய நடைப் பாவாடை யின்மேலே தேவர்கள் பூமாரி பெய்ய நடந்து, உள்ளெழுந்தருளினார். அப்பொழுது காஞ்சன மாலை மகளிர்கள் சூழவந்து, பொற் கரகத் திலுள்ள கங்கை நீரை அவர்கள் வார்க்க, கைலாசபதியினுடைய திருவடிகளை விளக்கி, அத் தீர்த்தத்தைத் தன் சிரசிலே தெளித்து, உட்கொண்டாள். பின்பு திருவடிகளில் ஈரம் புலரும்படி வெண்பட்டினாலே துடைத்து, பனி நீர் விட்டுக் கஸ்தூரி கலந்த சந்தனக் குழம்பை அணிந்து, கற்பக நறுமலர் சாத்தி, சிரசின்மேலே கை குவித்து நின்று, "பரம கருணாநிதியாகிய சுவாமீ! அடியேன் அருமை யாகப் பெற்ற கன்னியை விவாகஞ் செய்து, இப் பாண்டிநாட்டைக் கைக்கொண்டு அரசாளுக" என்று விண்ணப்பஞ் செய்தாள். சிவபெருமான் அதற்குத் திருவுளம் இசைந்து, புன்னகை கொண்டு, திருக்கல்யாண மண்டபத்தைச் சேர்ந்து, இரத்தின சிங்காசனத்தின்மேல் எழுந் தருளியிருந்து கொண்டு, தம்மைச் சூழ்ந்து நின்ற உருத்திரர்களையும் பிரம விட்டுணு முத லிய தேவர்களையும், முனிவர்களையும், பிற ரையும் தங்கள் தங்கள் ஆசனத்தில் இருக்கும் படி திருக்கடைக்கண் சாத்தினார். அது நிற்க.

*சாதிக்கப் பிறந்தவன் தூங்கும்போதும் விழித்திருக்கிறான்.*

மகளிர்கள் தடாதகைப் பிராட்டியைச் செம்பொன் ஆசனத்தில் இருத்தி, கஸ்தூரி அணிந்து, குங்குமக் குழம்பு பூசி, முரசங்களும் ஒலிப்ப, வாசங்கலந்த நீரினாலே ஸ்நானஞ் செய்வித்து வஸ்திரஞ் சாத்தினார்கள். தடாதகைப் பிராட்டி பிராமணருக்குத் தானங் கொடுத்தாள். இலக்குமியும் சரசுவதியும் தடாதகைப் பிராட்டியாருடைய அருமைத் திருமேனியைத் தீண்டி, திருமணக் கோலஞ் செய்து, அவளை வணங்கி, "உய்ந்தனம், உய்ந்தனம்" என்று பேரானந்தப் பெருஞ்செல்வம் அடைந்தார்கள். விவாக முகூர்த்தம் வந்த உடனே, தடாதகைப் பிராட்டி, இலக்குமியும் சரசுவதியும் சோபனம் என்று வாழ்த்தி வந்து, இரண்டு பக்கத்திலும் தங்கள் கைகளை நீட்டத் தன்னுடைய திருக்கரங்களினாலே பற்றிக்கொண்டு வேதங்கள் ஒலிக்க, மங்கல தூரியம் கலிக்க, சங்குகள் முழங்க, கற்பகப் பூமாரி பெய்ய, வெண்சாமரம் வீச, இந்திராணி அடப்பையையும் அரம்பை காளாஞ்சியையும் திலோத்தமை கண்ணாடியையும் மேனகை பூத்தட்டையும் ஏந்த, வீர மடந்தை பொற்பிரம்பினாலே சனம் விலக்க, ஊர்வசி ஆலவட்டம் அசைக்க, மகளிர்கள் சோபன கீதம் பாட, பனி நீரோடு கலந்த சந்தனமும் மலர்களும் பரப்பிய நடைப் பாவாடையின்மேலே திருவடிகளைப் பையப்பைய வைத்து நடந்து சென்று, சிவபெருமானைக் கண்டவுடனே நாணி ஒதுங்கி, அவர் பக்கத்திலே எழுந்தருளியிருந்தாள்.

அப்பொழுது மகாவிட்டுணு சிவபெருமானுடைய திருவடிகளைப் பொற்கரக நீரினாலே விளக்கி, சந்தனமும் மலருஞ் சாத்தி, தூபதீபங் காட்டினார். சிவபெருமானுடைய பாத தீர்த்தத்தை அங்குள்ளார் யாவரும் சிரசிலே தெளித்து உட்கொண்டார்கள். விட்டுணு சிவபெருமானுடைய திருக்கரத்திலே தடாதகைப் பிராட்டியாருடைய திருக்கரங்களை வைத்து, வேத மந்திரஞ் சொல்லித் தாராதத்தஞ் செய்தார். அப்போது தேவர்கள் பூமாரி பெய்தார்கள்; அரம்பையர்கள் நடித்தார்கள்; விஞ்சையர்கள் கீதம் பாடினார்கள்; முனிவர்கள் அரகர என்று தோத்திரஞ் செய்தார்கள்; தேவர்கள் உரோமஞ் சிலிர்ப்பப் பரவசரானார்கள்; சிவகணர்கள் சிரசின்மேற் கைகுவித்தார்கள். அங்குள்ளார் யாவரும் திருக்கல்யாண தரிசனத்தாலாகிய பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார்கள். சிவபிரானுடைய திருவடிக்கீழ் வீழும் வண்ணம் தேவர்கள் முனிவர்கள் முதலியோர் குங்குமங் கலந்த அட்சதையை வீசினார்கள். பால், தயிர், நெய், தேன், கனி என்பவை கூடிய பானங்களை திருமுன்பு வைத்து, "திருக்கை தொட்டருள்க" என்று விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் திருக்கரத்தை வைத்து, திருவமுது செய்தாற்போலத் திருவுள மகிழ்ந்தருளினார். இலக்குமியும் சரசுவதியும் தேவ மகளிர்களும் இருடி பத்தினிகளும் மங்கலம் பாடினார்கள். பிரமதேவர் தம்முடைய புத்திரர்களோடும் இருந்து அக்கினி காரியஞ் செய்தார். சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமங்கிலியந் தரித்துப் பாணிக்கிரகணஞ் செய்தார். பின்பு தம்முடைய மனைவியாரோடு திருக்கரத்திலே பொரியை வாங்கி, ஓமஞ் செய்து, முனிவர்களுக்குத் தானங்கொடுத்து, அக்கினியை வலஞ்செய்து, பிராட்டியுடைய திருவடியைத் தமது திருக்கரத்தினாலே பற்றி, அம்மிமேல் வைத்து, அருந்ததி பார்த்து, உலகத்தார் யாவரும் அறிந்து செய்யும் பொருட்டு விவாகச் சடங்குகளெல்லாம் இவ்வாறே நிறைவேற்றிக் கொண்டு, மணவறையிலே புகுந்தருளினார்.

*ஆணவம் கொள்ளாமல் இருந்தால் அரச மரவேர்போல் ஊன்றி வாழ்வான்.*

பின்பு மணவறையினின்றும் நீங்கி, திருக்கல் யாண மண்டபத்தை அடைந்து, வீற்றிருந்து, திருமால், பிரமன் முதலிய தேவர்களுக்கும் பிறருக்கும் விடை கொடுத்தருளினார்.

அதன்பின், சிவபெருமான் ஆட்டு வோன் ஆடிக் காட்டுதல்போல அரசர்களுக்குத் தாம் அரசு செய்து காட்டத் திருவுளங் கொண்டு, இடபக்கொடி கயற்கொடியாகவும், சர்ப்பாபரணம் பொன்னாபரணமாகவும், கொன்றைமாலை, வேப்ப மாலையாகவும், புலித்தோலாடை பொன்னாடையாகவும், சடா முடி இரத்தின முடியாகவும், தாம் சௌந்தர பாண்டியராகி, சங்குகன்னர் முதலிய கண நாதர்கள் முன்னை வடிவம் நீங்கி மானுடராகி ஏவல் செய்ய, அரசு செய்தருளினார். உலகத் தைக் காக்கும் அரசர்கள் சிவனைப் பூசித்தல் வேதநெறியென்று அரசர்களெல்லாம் துணிந்து உய்யும்பொருட்டு, தாமும் அந்நகரத்திலே நடுவூரென்று ஒரு நகரஞ் செய்வித்து அதிலே ஆலயங் கட்டுவித்து, இம்மையே நன்மை நல்குமிறை எனப் பெயர் கொண்ட ஒரு சிவ லிங்கந் தாபித்து, அதனைச் சிவாகம விதிப்படி பூசை செய்து கொண்டும், சோமசுந்தரக் கட வுளைத் திரிகாலமும் தரிசனஞ் செய்து கொண்டும், பூமி முழுதுஞ் செங்கோல் நடாத் தினார்.

பிரமா விட்டுணு முதலிய தேவர் களும் முனிவர்களும் பிறரும் தம்மையே பூசித்து இம்மை மறுமைகளை அடைய நின்ற முதற் கடவுளாகிய சிவபெருமானே பூசித்த இந்தச் சிவலிங்கத்தின் பெருமையை யாவர் அளக்க வல்லர்! (தொடரும்...

## சூதும் வாதும் வேதனை செய்யும்

பண்புகளில் தலை சிறந்தது அன்பு பாராட்டுதல். ஒருவர் செய்த நன்மையையோ, அவரது நற்குணத்தையோ புகழ்ந்து பேசுவதுதான் அன்பு பாராட்டுதலாகும்.

சமுகத்தில் இதுபோன்ற நற்பண்பு குறைந்துகொண்டே வருகிறது. ஒருவர் செய்த தீமைகளையோ, கெட்ட பழக்கங்களையோ கண்டுபிடித்து குறை சொல்லவே பலரும் விரும்புகின்றனர். நற்குணத்தின் சிறப்புப்பற்றி பேசுவதேயில்லை.

குறைகள் கண்ணுக்குத் தெரியும் அளவு, நிறைகள் புலப்படுவதில்லை. இன்று உறவினர், நண்பர்களுக்குள் வரும் சண்டைக்குக் காரணமே, அன்பு பாராட்டுதலை மறந்ததுதான்.

ஒருவர் தீமையே செய்பவராகக்கூட இருக்கலாம். ஆனால், என்றோ அவரை அறியாமலேயே ஒரு நற்செயலைச் செய்திருப்பார். போற்றும்படியான நற்குணம் ஒன்று நிச்சயம் இருக்கும். அதைக் கண்டுபிடித்து பாராட்டுவதன்மூலம், நன்மைகள் விளையும். அதுவரை தீமை மட்டுமே செய்துவந்தவரின் மனம், நன்மையின் பக்கம் திரும்பும்.

நன்மை செய்ய ஒருவரைத் தூண்டுவதே நம் செயல்கள்தான். அன்பு பாராட்டல் என்ற பண்பின்மூலம், முட்களைப் பூக்களாக மாற்றலாம்; கல்லையும் கரைக்கலாம்.

*இன்றே செய்யவேண்டியதை நாளைவரை தள்ளிப்போடாதே.*

# புராண படனம் என்பது நந்தமக்கு வாய்த்த அமிர்தாஞ்சனம்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

கந்தபுராணக் கலாசாரத்தின் உச்ச மாகவும், ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாக் கும் ஊடகமாகவும், சூரிய சந்திரர் உள்ள வரை மிச்சமாகவும் நீடு வாழ்ந்து வரும் சைவ சமய கைங்கரியம் புராண படனமேயாகும். இதுவே சைவ சமயிகளுக்கு ஓர் அருமருந்தாக வும் அமிர்தாஞ்சனமாகவும் கருதப்படுகின்றது. இதன் பிரகாரம் ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்களிலே, புராணபடனஞ் செய்து இறை வனோடு ஒன்றித்திருப்பது அருமருந்தாக ஆத்மாவுக்கு ஈடேற்றம் தருகிறது. உடலும் உள்ளமும் ஒருங்கே சேரும்படியாக, மிகுந்த ஆசாரசீலராக, தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து, சால்வையை அரையில் கட்டியவாறு, தீட்சை அனுட்டானங்களோடு, உருத்திராக்க மாலை அணிந்து, புராணத்தை வாசிப்பவர் வடக்கு முகமாக அமர்ந்திருந்து வாசிக்க, பயன் சொல்பவர் கேட்போருக்கு விளங்குமாறு பயன் சொல்ல புராதனமான வரலாறு கேட்ப வர்களூடாகக் கிராமத்துக்கே சென்று பயன் பெறும். புராண படனமானது அதை வாசிக்கும் தோறும், கேட்கும்தோறும், அதை உணரும் தோறும் சைவசமயத்தின் விழுமியங்கள், பாரம்பரியங்கள், சிவாம்சங்கள் யாவுமே பேணப்பட்டு, வழிகாட்டப்படுகின்றன. சிவநெறி பிறழாத வாழ்வினைச் சித்தரிக்கும் சிவ சரிதங் களாக, அற்புதங்களாக, அதிசயங்களாக, அருட்பனுவல்களாக, தோத்திரங்களாக, தர்க்க ரீதியாக விளங்க வைக்கும் சாத்திரங்களாக சைவ சமயப் பொக்கிசங்களை எல்லாம் அனு பவிக்க வல்ல எமது வாழ்க்கையின் பண் பாட்டு உபகாரமே புராணபடனமாகும்.

இன்னும் சொல்வதானால் அடியவர் களது சிவநெறி பிறழாத வாழ்வைச் சித்தரிக் கும் சரிதங்களாக, அவ்வடியார்களுக்கு இறை வன் செய்தருளிய கருணையின் பெருமை யைக் கூறும் பனுவல்களாக, தோத்திரங் களாக, தர்க்க ரீதியாக விளங்க வைக்கும் சாத்திரங்களாக உள்ளடக்கப்பட்ட பொக்கிஷமே புராணங்களாகும். இவை யாவரும் விளங்கு மாறு இலகு தமிழ் நடையில், கதைகள் ரூபமாக விளம்பி நிற்கும். இதன்வழி சமூகங் கள் பயணித்து வாழ்வில் பேறு கண்டன. கி.பி. 5ஆம் நூற்றாண்டிலும் புராண இதிகாசங் கள் இந்தியாவில் பிரபல்யமானபோது அத னுடைய செல்வாக்குத் தமிழகத்திலும் பாயத் தொடங்கியது. தமிழகத்தில் புராண இதிகாசங் கள் சுவைபடச் சொல்லப்படும்போது சமகாலத் தில் இலங்கையிலும் அதனது பயன்பாடு சுவறுமாறு நெருக்கமானதெனக் கொள்ளப் பட்டது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டிலே, இரண் டாம் இராஜாதி இராஜன் ஆட்சி நடைபெற்ற வேளையில், ஆளுடைய நம்பி புராணம் படிக் கப்பட்ட செய்தி திருவெற்றியூர் கல்வெட்டு ஒன்றில் பதிவாகி புராண மான்மியத்தை விசேடிக்கிறது.

பண்டிதர்களினது உள்ளத்திலும், சொல்லிலும் செயலிலும் பக்தியிலும் வெல் லும்படியாக இருந்த புராணங்கள் பாமர

*எண்ணங்களை நல்லவைகளாக மாற்றிப் பயிரிடுங்கள். அது வெற்றியை அறுவடை செய்யும்.*

மக்களுக்கும் பாலிக்கும்படியாக மிகவும் எளியநடையில் பாடிப் பயன் சொல்லப்பட்டதே புராணபடனமாகும் என்பதால், படித்தவர்களும் பாமர மக்களும் கேள்வி ஞானத்தினால் வாழ்வுக்கு வரம் சேர்த்தார்கள். 19ஆம் நூற்றாண்டுக்கு முன்பாகப் போதனைகளும், சாதனைகளும் சம்பாஷணைகளும், சங்கீத உபந்நியாசங்களும், பஜனோபாசனைகளும், பயனோடிசைந்த உரைகளும் மலிந்திருந்த வேளையில், 19ஆம் ஆண்டிலே இலங்கையிலே ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் சைவ சமயத்தின் தாற்பரியமான வளர்ச்சிக்காக எல்லாம் வல்ல சிவபெருமானால் ஓர் அவதார தூதுவராக எம்மத்தியில் முன்னிலையாகின்றார்.

சைவ சமயம் மறுமலர்ச்சியும் புத்தெழுச்சியும் வீறுகொண்டெழ வந்து வாய்த்த பெருந்தகையாளரான நாவலர் பெருமான் அவர்கள், திருமுறைகளையும், புராணங்களையும், மற்றும் அருளாளர் பக்தி இலக்கியங்களையும் தனது உயிரினும் மேலாகக் கருதி, உன்னதமான புராணபடனத்தைத் தக்க முறையில், தானே வாசித்தும் தானே பயன் உரைப்பவராகியும் சோபித்துத் தாபித்து விளங்கினார். இதனைச் செயற்படுத்த விரும்பிய நாவலர் பெருமான், அதிகாலையில் எழுந்து, காலைக் கடன்களை உரியவாறு முடித்து நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை தரித்தவராய், தீட்சை அனுட்டானங்களை முடித்தவராய், சிவசின்னங்கள் பொலியத் தவமாகிச் சிவமாகியவராய் ஆலயங்களில் புராண படனத்தினை இலக்கிய இலக்கணப் பக்திச்சுவை ததும்பும் வகையில் ஆற்றலானார். வீடே ஆலயம், ஆலயமே வீடு எனப் போற்றிய சைவ சமயிகளுக்கு இஃது ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. நாவலரின் சொல்வாக்கானது சைவ சமயிகள் மத்தியில் பெரும் செல்வாக்கினை உருவாக்கிற்று.

நம் நாட்டிலே, புராணபடன முறையானது, மூன்று வகையாக நோக்கலாம்.

**புராணங்களைப் படித்துப் பயன் சொல்லல்**
**இதிகாசங்களைப் படித்துப் பயன் சொல்லல்**
**சமயக் கதைகளை வாசித்து விளக்கம் சொல்லுதல்.**

புராணத்திற்குப் பயன் சொல்லுதல் என்பது கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப் புராணம், கைலைப் புராணம் ஆகிய புராணங்களை உள்ளபடி கதைக்குப் பங்கம் ஏற்படாதவாறு, சொல் விளங்க வாசித்தவாறு அழகு தமிழில், இலகு நடையில், வாசிப்பவர் வாசித்த இராகத்திலேயே பயன் சொல்லுவதாகும். புராண படனஞ் செய்யும் நூல்களுள்ளே கந்தபுராணமே மிகவும் முக்கியம் பெற்று விளங்குகின்றது.

புராண படிப்பானது வீரராகவன் ஆட்சி புரிந்தவேளை, கச்சியப்பரின் சகபாடியும் யாழ்ப்பாடியுமான கச்சிக் கணேசையர் மூலமாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து அறிமுகம் செய்து வைத்ததாக வரலாறுகள் சான்று பகர்கின்றன.

மேலும் நாவலர் பெருமானும், அவரது மருகர் பொன்னம்பலப்பிள்ளையாலும் புராண படனம் புத்தெழுச்சியோடு நாளிலும் பொழுதிலும் வளர்த்தெடுக்கப்பட்டு, இன்றுவரை பேறாக்கப்பட்டு சைவசமயத்தின் ஓர் ஆறாகப் பெருகுகிறது.

வடமாகாணத்தின் பெரும்பாலான இந்து ஆலயங்களிலும், மடாலயங்களிலும், நினைவாலயங்களிலும், சமாதிப் பீடங்களிலும் புராணபடனம் நடைபெறுகிறது. இதுவே சைவ சமய வளர்ச்சியிலே இன்று மட்டுமல்ல என்றுமே கைகொடுத்தும், கைகொடுக்கவும் போகிறது. சைவசமயம் வளர்வதற்கு எந்தவித சலசலப்போ கலகலப்போ ஆரவாரமோ விளம்பரமோ அழைப்பிதழ்களோ இல்லாமல்,

பொன்னாடைகளோ பொற்பதங்களோ எதிர் பார்க்காமல் பணியாகவும், தொண்டாகவும் பேறாகவும் நடைபெறும் ஒரேயொரு சைவ சமய சாதனை புராணபடனமேயாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட இலங்கையில் சுமார் ஐநூறு ஆலயங்களில் புராணபடன நிகழ்வு வெகு சிறப்பாக இன்றும் பாரம்பரிய சம்பிரதாயங்களோடு நடைபெற்று வருகிறது.

புராணபடனம் நடைபெறுவதன்மூலம், தமிழ், உரைநடை, சமயநெறி, சமய ஈடுபாடு, இசை, பொறுமை, விடுதலை, அன்பு, பரோப காரம், பக்தி, பரவசம், பாண்டித்தியம், கேள்வி ஞானம், அறிவு, ஆற்றல், ஆளுமை, ஆன்ம ஒடுக்கம், ஆணவ நீக்கம், அவையடக்கம் யாவும் சித்திப்பதனால், அரசும் ஆலயங்களும் போதிய மானியங்களை வழங்குவதன்மூலம் சமயத்தின் விழுமியங்களை நாமும் அனு பவிக்கலாம்.

புராண வித்தகர்களான பௌராணிகர் மார் நாட்டை, பூபாளம், மோகனம், தோடி, பைரவி, ஆனந்தபைரவி, காம்போதி, கேதார கௌளை, பந்துவராளி, சண்முகப்பிரியா, சங்கராபரணம், ஆரபி, பிலஹரி, கரகரப்பிரியா, தன்னியாசி, மத்தியமாவதி, நாட்டைக்குறிஞ்சி, நீலாம்பரி, சுருட்டி இன்னும் பல இராகங்களில் வாசிக்க அதே இராகங்களில் பயன்சொல் பவரும் சொல்லவேண்டுமென்பது மரபாகும். கும்பமும், விளக்கும், பழம், பாக்கு வெற் றிலை தேங்காய் சாம்பிராணி கற்பூரம், கவளிகையோடு, திருச்சிற்றம்பலம் சொல்லி ஆரம்பித்து காப்புச் சொல்லிக் கொண்டு கூட்டி வாசிக்க பயன் சொல்பவர் விரிவாகப் பொருள் உரைக்கும்போது, வெளிப்பட்டு நிற்கும் பொருளை முதலில் சொல்லிய பின்னர், உட் பொருளாகிய செம்பொருளை விரித்துரைக்க வேண்டும்.

தற்பொழுது புராணபடன வித்தகர்கள் எமது நாட்டிலே 2000 பேர்கள் தரமாக உள் ளனர். இவர்களுக்கு வாழும்வரை வேதனம் கொடுக்க ஆவன புரியவேண்டும். யார்க் கெடுத்துரைப்பேன்?

## கலியுகத்தின் மெய்ஞ்ஞானக் கடவுளே போற்றி

கற்பனைக்கும் அப்பால் எட்டாக் கந்தனே போற்றி
கலியுகத்தின் மெய்யாய் நின்ற கடவுளே போற்றி
அற்புதங்கள் புரியவல்ல அருந்தமிழ்க் குமரா போற்றி
ஆறுமாமுக அழகுடைய சிவகுரு நாதா போற்றி
பற்பலரும் போற்றும் சைவப்பழமே போற்றி
பருத்த தோகை மயிலில் ஏறும் ஷண்முகவடிவேலா போற்றி
மற்றொரு தெய்வ ஒப்பில்லா மலையுறை இறைவா போற்றி
மாதர் இருபாகமுற அமர்ந்த சந்நிதி வேலனே போற்றி போற்றி.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*கீழ்ப் பணிவதற்கு கற்றுக்கொண்டால் பதவி உயர்வு தானாக வரும்.*

# மனிதன் தாவர போசணியே

– திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள் –

சைவசமயம் ஆதியும் அந்தமுமில்லா தது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத் துக்கு முன்பிருந்தது சைவசமயம். ஆதியும் அந்தமுமில்லாத சிவபெருமானே ஆன்மாக் களின்மீது வைத்த கருணையினால் உயிர்கள் வாழ்வதற்காக உலகத்தையும் உலகிலுள்ள போகப் பொருட்களையும் உடம்புகளையும் உடம்பில் காணப்படும் கருவி கரணங்களை யும் அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவி போன்றவற்றையும் படைத்தார். எனவே சிவபெருமானுக்குப் பிற்பட்டதே உலகங்கள் ஆகும்.

ஆன்மாவாகிய உயிர் என்றுமுள்ளது. இவ்வுயிர்களை யாரும் கத்தியால் வெட்ட முடியாது. நெருப்பில் எரிக்க முடியாது. துப் பாக்கியால் சுட்டுவிட முடியாது. இந்த உயிர் கள் ஒரு உடம்பைப் பெற்று இவ்வுலகில் வாழ்வதற்குக் காரணம் தம் பிராரத்துவ வினை களை அனுபவித்து முடிப்பதற்காகும். இத னையே பல தத்துவ நூல்கள் எடுத்துக் கூறுகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவ சித்தாந்த தத்துவ அடிப்படையில் சைவ வினாவிடை நூலில் "நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது ஏன்" என்ற ஒரு வினாவினூடாக "சிவனை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என்கிறார்.

இக்கருத்தையே திருநாவுக்கரசு நாய னாரும் இற்றைக்கு 1300 வருடங்களுக்கு முன்னமாக திரு அங்கமாலை எனும் தேவாரப் பதிகத்தினூடாகப் பாடியுள்ளார். எடுத்துக் காட்டாக "கால்களாற் பயனென் கறைகண்டன் உறை கோயில் கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களாற் பயன் என்" என்கிறார். அதாவது கோபுரங்களோடு கூடிய கோயில் களைத் தினமும் சுற்றி வலமாக வந்து வழி பாடு செய்யாத கால்களாற் பயனில்லை. காலைப் படைத்ததே சிவாலயத்தை வலம் வருதல் முதற் பயனாகும். இதேபோல் ஆல யங்கள் தோறும் காலினால் நடந்து பாதயாத் திரை வருதல் வேண்டும். இப்பாதயாத்திரை உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியமான தாகும். இதனாலே இன்றும் செல்வச்சந்நிதி யிலிருந்து கதிர்காமம் வரை நடந்து நடந்து பாதயாத்திரை செய்கிறார்கள்.

ஒருவன் ஒரு சமயத்தில் வாழும் காலத் தில் அந்த சமயத்தின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்வது முக்கியமானதாகும். அப்போதுதான் அவன் சமயி ஆகின்றான்.

இச் சமய, பண்பாடு, கலாசாரங் களைக் கடைப்பிடிக்கும்போதுதான் இறை வன் கருணையும் அவனுக்குக் கிடைக்கும்.

ஒரு பிள்ளை தாயில் அன்பு கொண் டால் மட்டும் போதாது. ஒழுக்கமாக வாழவும் வேண்டும். பிள்ளை ஒழுக்கமில்லையாயின் தாய் அப்பிள்ளையின் தேவைகளை நிறை வேற்ற மாட்டாள். ஒரு தாய் பிள்ளை ஒழுக்க மாக தன்சொல் கேட்டு வாழ வேண்டும் என எதிர்பார்க்கின்றாள். கல்வியைப் பெறுதல், நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல், தனக்கும் தந்தை சகோதரர்களுக்கும் வேண் டிய நல்ல உதவிகளைச் செய்தல், பெரி யோரைக் கனம்பண்ணி வாழ்தல் போன்றவற் றைத் தன் பிள்ளை சரியாகக் கடைப்பிடித் தால் பிள்ளை கேட்காமலேயே பிள்ளைக்குத்

தேவையான எல்லாவற்றையும் தாய் அந்தந்த நேரங்களில் செய்து கொள்வதை உலகியல் வாழ்க்கையில் நாம் பார்க்கின்றோம் அல்லவா?

இதே போன்றே சைவசமயத்தில் பிறந்த நாம் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு விருப்பமாகவுள்ள செயல்களைச் செய்வதும் சிவன் விரும்பாதவற்றை செய்யாது இருப்பதும் எம் கடமையாகும். சிவன்மீது அன்பு வைத்தால் மட்டும் போதாது. சைவ சமயம் கூறும் சமய ஆசாரங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே ஆறு அறிவு படைத்த மனிதனுக்கு உற்ற பண்பு ஆகும்.

இப்போது உணவைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம். உயிரினங்களின் வாழ்க்கைக்கு அடிப்படையான தேவைகளில் ஒன்று நாம் உண்ணும் உணவாகும். ஒரு இறைவனுக்காக இறைவனிடம் நல்ல அருளைப் பெறுவதற்காக விரதமிருந்து உணவின் அளவைக் குறைத்தல், உணவின் சுவையைக் குறைத்தல், உணவு உண்ணும் வேளைகளைக் குறைத்தல் அல்லது உணவை முற்று முழுதாக உண்ணாது குறிப்பிட்ட நாட்களில் தவிர்ப்பது ஆகும். இதனை நவீன விஞ்ஞானமும் வரவேற்கிறது.

மனிதனுக்கு ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உண்டு. எதையும் சிந்தித்து ஆராய்ந்து பார்த்துச் செயல்பட வேண்டும். சுயநலத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாது பரநலத்தில் அக்கறை கொள்ள வேண்டும். மனிதர்கள் மட்டுமே உணவைச் சமைத்து உண்கின்றார்கள்.

நாம் எங்கள் ஊனைப் பெருக்குவதற்கு வேறு விலங்குகளின் ஊனை உண்ண முடியுமா, எமது உடம்பில் தோல் உரிந்து உள்ளே தசை தெரிந்து கொண்டால் அது மணக்கிறது. புண் எனச் சினக்கின்றோம். பார்ப்பதற்கு அருவருக்கின்றோமல்லவா.

**"உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றன்**
**புண்ணது உணர்வார் பெறின்"**

என்பது திருக்குறள்.

யார் யார் எல்லாம் உயிர்களைக் கொல்லாது வாழ்ந்து கொள்கின்றார்களோ அவரவர்களை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழுமளவிற்கு உயர்ந்த தகுதிகள் பெற்று வாழ்வார்கள்.

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**

என்கிறது திருக்குறள்.

மச்சம், மாமிசம் சாப்பிடுபவர்கள், மது அருந்துபவர்கள் கோயில் வழிபாடு செய்யத் தேவையில்லை. செய்தாலும் பயன் கிடைக்காது. ஆயிரம் யாகங்கள் செய்தல், ஆயிரம் சகஸ்ர நாம அர்ச்சனை செய்வதைவிட உயிர்களைக் கொன்று அவற்றைச் சாப்பிடாவிட்டால் அதிக பலன்களை இறைவனால் பெற்றுக் கொள்ள முடியும்.

**"அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர் செகுத்து உண்ணாமை நன்று"**

என்கிறது திருக்குறள்.

மனித வாழ்க்கையில் இன்று சிலர் தம் சுயநலத்திற்காக ஆடு, கோழி, மாடு, பன்றி என வேறு வேறு விலங்குகளைக் கொன்று தம் ஊன் பெருக்குகின்றார்கள். இப்படியானவர்களை ஒரு நாளைக்கு யாரோ ஒருவர் கொல்லப் போகின்றார்கள் என்பதை நன்குணர்கின்றார்களில்லை. நாம் செய்வது தான் நமக்குக் கிடைக்கும். இதைச் சைவ சமயம் மட்டுமன்றி விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கின்றது. நவீன விஞ்ஞானி நியூட்டன் கூட எடுத்துக் காட்டுகின்றார். ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு என்பது இவரது மூன்றாவது இயக்க விதியாகும். நீ பிறருக்கு எவ்வளவு நன்மை

*கடுமையான போராட்டத்தின் பலனாகக் கிடைக்கும் வெற்றிகளே மதிப்புடையவை.*

செய்கின்றாயோ உனக்கும் அவ்வளவு நன்மை ஏதோ ஒரு வகையில் வந்து கிடைக்கும். நீ ஒருவனுக்கு எவ்வளவு தீமை செய்கின்றாயோ உனக்கும் அவ்வளவு தீமை வந்து கிடைக்கும். இதையே "தீதும் நன்றும் பிறர் தர வாராது" என்று சான்றோர் கூறியமையைக் காணலாம். பிற உயிர்களைக் கொல்பவன் தான் மனிதனையும் பயமின்றிக் கொல்கின்றான். கொன்றுவிட்டு கொள்ளையையும் அடிக்கின்றான்.

விஞ்ஞான உயிரியல் ரீதியாக விஞ்ஞானிகள்கூட மனிதன் தாவரபோசணி என்பதற்குப் பல ஆதாரங்களை நம் உணவுக் கால்வாய் தொகுதியைக் கொண்டு எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

சிங்கம், புலி, நாய், ஓநாய் போன்ற ஊனுண்ணும் விலங்குகளைப் பாருங்கள் அவற்றின் வேட்டைப் பற்கள் நன்கு நீண்டு காணப்படுகின்றது. இவை இறைச்சியைக் கிழிப்பதற்கும் வாயில் பிடிபட்ட விலங்குகளைத் தப்பவிடாமல் தடுத்துக்கொள்வதற்கும் காணப்படுகின்றது. மனிதனிலும் வேட்டைப் பற்கள் இருந்தாலும் அவை குறுகி ஏனைய பற்களோடு மட்டமாக இருக்கின்றமை அவர்களுக்கு வேட்டைப் பற்கள் தேவையில்லை. அவர்கள் தாவர உணவுகளை உண்பதற்காகவே அவ்வாறு மழுங்கியுள்ளது என்பதை நாமும் உணரவேண்டுமல்லவா?

மேலும் மனிதனின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் 7மீற்றர் நீளமான சிறுகுடல் அமைந்திருப்பது தாவர உணவு சமிபாடு அடைவதற்கு வசதியாக இருப்பதற்காகவே என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு பல அம்சங்கள் சிவனால் உடல் அமைப்பிலேயே படைக்கப்பட்டு இருக்க நாம் மச்சம், மாமிசத்தை புசிக்கலாமா? சற்றுச் சிந்தியுங்கள்.

இன்று சைவ சமயத்தை, அதன் தத்துவங்களை, சைவர்களின் வாழ்வியலை அறியத் தொடங்கிய மேலைத் தேசத்தினர் தாவர உணவை உண்ணத் தொடங்கி விட்டார்கள். எடுத்துக்காட்டாக இலண்டன் மாநகரில் இப்போது பல தாவர உணவுக் கழகங்கள் உருவாகியுள்ளது.

விலங்குகளிலே மிகவும் சாதுவான மிருகம் பசு ஆகும். பசு இந்த உலகில் வாழும் பல உயிரினங்களுக்கும், மனிதர்களுக்கும் நிறையுணவாகிய பாலைத் தருகின்றது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் வளர்ந்த இக்காலத்தில் மனிதரால் நிறையுணவாகிய பாலை உருவாக்க முடிகின்றதா? இல்லையே பசுக்கள் புல், வைக்கோல், இலை, குழை, தவிடு, பிண்ணாக்குப் போன்ற மனிதருக்குத் தேவையற்ற கழிவுகளை உண்டு நமக்கெல்லாம் பயன்தரும் நிறையுணவாகிய நல்ல சுவையுள்ள பாலைத் தருகின்றதல்லவா?

தாயின் பால் குடித்து வளராத மனிதர்கள் பலர் இந்த உலகத்தில் வாழ்ந்துள்ளார்கள், இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். குழந்தை பிறந்த காலத்தில் தாய் இறந்து விட்டால் அக் குழந்தை தாய்ப்பாலை உண்ண மாட்டாது. வேறு தாய்மார் யாராவது இக் குழந்தைக்குப் பாலூட்டுவார்களா? பகுத்தறிவுள்ள மனிதர்களே நன்கு சிந்தியுங்கள். ஆனால் பசுப்பால் குடித்து வளராத மனிதர்கள் என்று யாருமே இருக்கமுடியாது. தாயுள்ள குழந்தைகளுக்கே "லக்ரோஜன்" பால்மாவை கரைத்துத் தாய்மார் பாலூட்டுகின்றார்கள். மேலும் தேனீர், கோப்பி, மைலோ போன்றவற்றிலும் பசுப்பாலே பயன்படுத்தப்படுகின்றது. எத்தனையோ வகையான சொக்லேட் வகைகள், பிஸ்கற் வகைகள், ஐஸ்கிறீம் வகைகள் எல்லாமே பசுப்பாலிலிருந்துதானே தயாரிக்கின்றார்கள். இவை மட்டுமன்றி பாற்கட்டி,

*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும்.*

வெண்ணெய், நெய், தயிர், மோர், யோக்கற் போன்ற பல உணவுகளும் பசுவின் பாலில் இருந்தே தயாரிக்கின்றோமல்லவா? இப்படியான ஒரு பெரும் தொழிற்சாலைபோல் சூழலை மாசுபடுத்தாது செயற்படும் பசுக்களை நாம் கொன்று அதன் ஊனைச் சாப்பிடுவது எத்துணை பாவச்செயல். மனிதர்களே சற்று சிந்தியுங்கள்.

மேலும் இன்று விவசாயத்தில் செயற்கைப் பசளைகள், கிருமிநாசினி, களைநாசினிப் பாவனை சூழலை மாசடையச் செய்கின்றது என்பதை சூழலியலாளர்கள் நன்கு சிந்திக்கின்றனர். சூழல் மாசடைதலைத் தடுக்க நாம் பசுக்களின் கழிவுகளான சலம், சாணம் போன்ற பொருட்களை விவசாயத்தில் பயன்படுத்துவோமானால் அவை மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் தீங்கை ஏற்படுத்தாது அல்லவா? ஆறாவது அறிவுள்ள பகுத்தறிவு உள்ள மனிதர்களே சற்றுச் சிந்தியுங்கள். செயற்படுங்கள். நாம் மாட்டிறைச்சி புசிப்பது சரியா? என்பதை பல தடவை யோசித்துப் பாருங்கள்.

மேலும் இப்போது சிவனது திருவிளையாடலோ என்று எண்ணத்தக்க வகையில் பறவைக்காய்ச்சல், கோமாரி நோய் போன்றன பரவி இன்று பலரையும் பறவை, விலங்குகளின் இறைச்சி உண்ணாது தவிர்த்து சைவ உணவு உண்ண வழிகாட்டியுள்ளது.

இவை மட்டுமன்றி பொருளாதார நோக்கில் உயிரினங்களில் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு உணவு கடத்தப்படும்போது அதாவது உணவுச் சங்கிலியில் பத்தில் ஒரு பங்கு சக்தியே சேமிக்கப்படுகின்றது. இதனால் விலங்குணவுகளை உண்பது பொருளாதார நஷ்டம் என்றும் கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருப்பதோடு பெருமளவான தானியங்கள் விலங்குணவாகப் பயன்படுத்தப்படுவதனால் பலர் பசிப்பிணிக்கு ஆளாகின்றார்கள். பல குழந்தைகள் உணவின்றி தினமும் உயிரிழக்கின்றார்களே. இதை ஈடுசெய்ய விலங்குணவுகளைத் தவிர்ப்போம் என்ற குரலும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

இப்போது அளவுக்கு மீறிய விலங்கு உணவுகளைச் சாப்பிடுவதால் பலரின் உடற் பருமன் அதிகரிக்கின்றது. உடலில் கொழுப்பு கூடுகின்றது. வைத்தியர்கள் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துங்கள் என எச்சரிக்கின்றனர். கொலஸ்ரோல் உடலில் அதிகமாகி இரத்த நாடி நாளங்களில் உட்சுவரில் படிகின்றது. இதனால் இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. சிலவேளை சிறிய நாடிகளை முழுமையாகவே அடைந்து விடுகின்றது. இவை சில உறுப்புக்களை தொழிற்படவிடாது தடுக்கின்றது. மேலும் இதயத்திற்கே குருதியை வழங்கும் நிருநாம நாடிகளை கொலஸ்ரோல் அடைக்கும் தருணத்தில் மாரடைப்பு நோய் ஏற்பட்டு பலர் மரணமடைகின்றனர். இவைகள் தவிர்த்து பல ஆண்டுகள் நோயின்றி வாழ விலங்குணவுகளைத் தவிர்த்து தாவர உணவுகளை உண்ணுதல் வேண்டும்.

உலகிலேயே பலமுள்ள விலங்கு எது? யானையல்லவா. இன்று பெரிய பாரம் தூக்கிகள் போன்ற பார ஊர்திகள் செய்யும் வேலைகளை யானை செய்தது. யானைக்கே அதிக பலம் இருக்கின்றது. இப் பலம் எதனால் வந்தது. அது உண்ணும் தாவர உணவுகளே யானைக்கு அதிக பலத்தைக் கொடுக்கின்றது. இன்று சில மனிதர்கள் தங்கள் ஆரோக்கியத்தைப் பேணிக்கொள்ள, ஆரோக்கியத்தை அதிகரித்துக்கொள்ள நாம் மாமிசம் புசிக்கின்றோம் என்கிறார்கள். இது தவறு. தாவர உணவுகளை இனமறிந்து உண்ணுங்கள். அங்கேதான் அதிக பலத்தைப் பெற்றுக் கொள்ளலாம். விலங்குணவினைக் காட்டிலும்

*அழகான உருவத்தைவிட அழகான நடத்தையே மிக நல்லது.*

அதிக புரதம் கொண்டது தானியங்களே. பயறு, கௌப்பி, சோயா, அவரை போன்ற வற்றிலேயே அதிக புரதம் உண்டு என்பதை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

சைவ சித்தாந்த நோக்கில் உயிர்கள் அழிவது கிடையாது. நம்முடைய பாட்டனோ பாட்டியோ ஏன் தாய் தந்தையர் உறவினர் களோ இறந்த பின்னால் நம் உறவுத் தொடர் பால் மீண்டும் எங்கள் வீட்டிலேயே நாம் அன்போடு வளர்க்கும் ஆடாக, கோழியாக, தீக்கோழியாக, மாடாக, நாயாக, பூனையாக, கிளியாக வந்து பிறந்திருக்கிறார்கள். இவற் றிற்கு உணவூட்டினால் நல்லதே தவிர அவற்றை வெட்டிக்கொலை செய்து அவற்றைச் சாப்பிடு வது எவ்வளவு நன்றிகெட்ட செயலாகும். எங்கள் உறவுகளே. எங்கள் முன்னோர் கருத்துக்கே நாம் தீங்கு செய்யலாமா? செத்த போது அழுததன் பயன் என்ன?

மாமிசம் புசித்தவர்களே உங்களை யாராவது வெட்டினால் ஏற்றுக்கொள்வீர்களா? வேறு விலங்குகள் உங்களைத் தாக்கி உங் கள் ஊனை உண்பதை ஏற்றுக்கொள்வீர்களா?

இறந்த பின்னர்கூட உங்கள் உடலை நாயோ, பூனையோ, காகமோ தின்றால் ஏற்றுக் கொள்வீர்களா? ஆனால் நாம் மட்டும் வேறு விலங்குகள் இறந்தபின் அதன் உடலை உண்பது எவ்வளவிற்கு நியாயமானது.?

## சரவணபவ நாமம் சொல்!

சரவணையிற் பிறந்த சதுர்கிரிமுருகன் - எம்மை
அரவணைத்துக் காக்கும் அழகன்
சூரபத்மனை அழித்து சுகமளித்த சுந்தரன்
தமிழ் மரபினைப்பாடும் தொண்டைமானூரில் உறைந்தான்.

அன்னதானக் கந்தனாய் சிறப்புற்று அருளீர்க்கும்
எம் எண்ணமெல்லாம் நிறைந்த செல்வச்சந்நிதியான்
நாமம் திண்ணமாய் சரவணபவ என்று சொல்லச்
சொல்ல வண்ணமாய் உள்ளமெல்லாம்
இன்பமாய் ஊற்றெடுத்ததே.

புண்ணியஞ் செய்ததனால் சந்நிதிக்குநாம் வந்தோமே
பூமாலை தொடுத்துனக்குப் பாமாலை பாடினோமே!
எண்ணிய கருமங்களை நிறைவேற்றிடும் முருகா
ஏழை எமக்கருள ஏன் இன்னும் தாமதமோ!

தொல்லை வினைதீர்த்தருளும் தூயவனே முருகய்யா!
அன்னம்தரும் பதியுறை ஞானக்கந்தனே முருகா!
இல்லையெனாது வரமீந்தருளும் வள்ளிமணாளனே!
ஈசனுமை பாலகனே நல்வாழ்வு தந்திடையா!

திருமதி நா. கந்தசாமி.

*கட்டுப்பாடான சீரான வழியில் நம்மை நடத்திச் சென்றால் பண்பு வளரும்.*

# வழித்துணை 31

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 தந்தையோடு தாயாரும் பிள்ளைகுட்டி மட்டுமே
வம்சாவழியென்று வாழ்வுதனை வரையாதீர்
இறையோடு இறைபடைத்த ஆத்மாக்கள் அனைத்துமே
வம்சாவழி என்றுணரும் மானிடத்தை வெல்வீர்.

02 பேசிப் பெறும் பலனைவிடப் பேசாமல் பெறலதிகம்
நேசித்து ஒருவரைநீர் பேசாமல் இருந்துபாரும்
தூசித்து தன்னைநீர் துன்புறுத்த வில்லையென்று
யோசித்து பெரும்பலனை உமக்காக்கி அவர்மகிழ்வார்.

03 சாபங்கள் பலிப்பதற்கு பாவங்கள் வேண்டும்
பாவமேதும் அறியாற்கு சாபங்கள் பலிக்காது
கோபங்கள் தாபங்கள் கூடவே இடும் சாபம்
ஆபத்து அதுபின்னர் சபிப்போரைத் தாக்கிவிடும்.

04 தெய்வீகம் என்பது வெறும்ஐதீகம் ஆகாது
உய்வதற்கு இருக்கின்ற ஒரேயொரு வழியாகும்
மெய்ஞான நிலையூடே மேதினியைக் கடப்போற்கு
பொய்யான போயகலும் தெய்வீக நிஜம்தோன்றும்.

05 மனிதனை இறைவனே மாண்புடன் படைத்தான்
மனிதனோ நவீனத்தை நாளெல்லாம் படைக்கிறான்
மனிதன் படைப்பதை இறைவனும் விரும்பினால்
இறைவனேன் படைப்பதை மாறாமல் படைக்கின்றான்.

06 கால்தொட்டுப் பணிதலும் கைதூக்கிக் கும்பிடலும்
ஞாலத்தில் இழிவென்று எண்ணிடுதல் நன்றன்று
மிகப்பெரும் பணிவினையும் மதிப்பினையும் அதுகாட்டுவதால்
ஆத்மீகம் மகிழ்ந்துமக்கு ஆசிதரும் உயர்வுறவே.

*நீங்கள் நம்பிக்கையோடு உழையுங்கள் உங்கள் ஆசைகள் நிறைவேறக் காண்பீர்கள்.*

07 தேவைக்கு குஞ்சரமும் இல்லையெனில் இழித்துரைப்பும்
சேவையென்ற வரம்பிற்குள் வந்திடாது மாறாக
நாவை அடக்குதலும் நன்றியோடு நடத்தலுமே
பூவைவிடச் சிறந்ததுவாம் புனிதமான பூசைகட்கே.

08 தீங்கென்று அறிந்தபின்பும் பிறர்க்குநாம் தீங்கிழைப்பின்
தாங்கொணாத் துன்பத்தைப் பின்னரது தந்துவிடும்
ஏங்கித் தவித்தாலும் ஓங்கி ஓங்கி அழுதாலும்
நீங்காது விதைத்ததே முளைத்துப்பின் பலன்தருமாம்.

09 தன்நிலமை உயர்வதற்குக் காரணமாய் அமையுமெனில்
தாழ்வு மனப்பான்மையதும் தரணியிலோர் வழியாகும்
மொத்தத்தில் அதுவாழ்வை அழைப்பதற்கே வழிவகுப்பின்
உயர்வு மனப்பான்மையொடு தாழ்ந்திருத்தல் தவறன்று.

10 தான்செய்யும் சரிபிழையை தானேற்கும் தன்மையற்கே
இறைவனே எமைப்படைத்தான் என்றேற்கும் மனமிருக்கும்
தான்செய்தால் சரியேதான் தவறில்லை என்றுரைப்போர்
இறையெங்கே எமைப்படைத்தான் என்றெண்ணி அழிவுறுவர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*வாழ்க்கையின் மகிழ்ச்சி பிறரை மகிழ்விப்பதில்த்தான் இருக்கிறது.*

# தீப வழிபாடு

– **திருமதி பொ. திலகவதி** அவர்கள் –

நமது சாதாரண புலனறிவுக்குப் புலப் படாமல் அண்டங்களுக்கு அப்பால் அருட் பெருஞ்சுடராய் நின்று எங்கும் அருள்பாலிக்கும் தெய்வத்தின் திருவுருவ வழிபாடே திரு விளக்கு வழிபாடாகும். இருளாகிய துன்பம் நீங்கி அருளாகிய இன்பம் நிறைந்திட திரு விளக்கு வழிபாடு செய்கிறோம். கேணி நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து நாம் அருந்தி தாகம் தீர்த்துக்கொள்வதுபோன்று அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணையாகிய தெய்வத் தின் திருவருளை திருவிளக்கில் ஏற்றி வழி பட்டு நாம் துன்பத்தை தீர்த்துக் கொள்கிறோம்.

மகாலக்சுமியின் அம்சமான திரு விளக்கு மிகவும் புனிதமாகப் போற்றப்படுகிறது. காலை, மாலை நேரங்களில் பெண்கள் தங் களைத் தூய்மை செய்துகொண்டு திருவிளக் கின் பாதத்திலே மலரை வைத்துத் தீபம் ஏற்றவேண்டும். பழைய சங்க நூல்களிலே மாலை, காலை நேரத்திலே நெல்லும் மலரும் தூவி திருவிளக்கேற்றி தெய்வத்தைப் பெண் கள் வழிபாடு செய்வது சுட்டிக்காட்டப்படுகின் றது. தீப ஒளி பரவும் இடங்களிலே தரித்திரம், நோய், மனச்சஞ்சலம் முதலிய தீயவைகள் அண்டாது. செல்வச்செழிப்பும், சௌபாக்கிய மும் ஏற்படும். திருவிளக்குப்பூசை செய்யும் பெண்களுக்கு நல்ல மனத்திற்கேற்ற கண வனை மணந்து குழந்தைச் செல்வத்தோடும் மஞ்சள் குங்குமத்தோடும் நீடூழி வாழ்வர் என் பது உறுதியென்று கூறலாம். பெண் திருமண மாகி புகுந்த வீடு செல்லும்போது அந்த வீட்டிற்கு விளக்கேற்றச் செல்வதாகப் பேசப் படுகிறது.

விளக்கின் ஐந்து முகங்களும் பெண் களுக்கான ஐந்து இலட்சணங்களைக் குறிப் பிடுவதாகும். அவையாவன, பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, சமயோசிதபுத்தி, வைராக்கியம் என்பனவாகும். வாழ்வு இனிமையாக நடைபெறவும் வாழ்வில் முன்னேறவும் இந்த ஐந்து குணங்களும் துணை புரியும். விளக்கு தானாக அணையாமல் ஒரு பூவால் ஒற்றி அணைக்க வேண்டும். வாயால் ஊதியோ கையால் விசிறியோ அணைக்கக் கூடாது. ஒருவர் ஏற்றிய தீபத்தை அவர் கையில் இருந்து மற்றவர் வாங்கக்கூடாது. தீபம் ஏற்றும் முன் தரையைக் கையால் நெருடினால் கையை அலம்பாமல் தீபத்தை ஏற்றக்கூடாது. குத்துவிளக்கை திங்கள், வியாழன் மட்டுமே தேய்த்து சுத்தம் செய்யவேண்டும். நாம் வசிக் கும் இல்லங்களை அடிக்கடி கழுவவேண்டும். கழுவாத நேரங்களில் மங்களப் பொருளான மஞ்சள் நீரால் தெளித்து புனிதமாக்கியும் சாம்பிராணிப் புகை காட்டியும் வந்தால் இல் லத்தில் செல்வத்திற்கு அதிபதியான இலக்குமி யும் உவந்து வீற்றிருந்து அருளாட்சி செய்வார்.

திருவிளக்கிடுவதற்கு பசு நெய் மிக வும் உத்தமமானது. அதைப் பெற இயலாத வர்கள் நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் முதலியவற்றால் திருவிளக்கு ஏற்றலாம். திரு விளக்கு ஏற்றுவதற்கு நூலால் அமைந்த திரிகளே சிறப்பானது. இரண்டு திரிகளைப்

*ஒருவனின் அறிவாற்றல் சிறந்து விளங்குமானால் அவன் வாழ்வு சிறக்கும்.*

பொருத்தி விளக்கேற்றினால் மிக நன்று. கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் திரிகள் அமைந்தால் மிகவும் உத்தமம். விளக்கு ஏற்றுவதால் நம் அக இருள் நீங்கும். நற்சிந்தனை உண்டாகும். பல நற்சிந்தனை களை மிளிரச் செய்யும். பண்புகள் பெருகும், பாவங்களைப் போக்கும்.

வெள்ளி, பஞ்சலோகத் தங்கம், பித்தளை, செம்பு விளக்குகள் பூஜைக்கு உகந்தவை. சிறப்பைத் தரும். எவர்சில்வர் விளக்கு பூஜைக்கு உகந்தது அல்ல. "விளக்கை அணைத்துவிடு" என்று சொல்லக் கூடாது. "விளக்கைக் குளிரவை" என்று சொல்ல வேண்டும். வீட்டில் ஏற்றப்படும் திருவிளக்கே இலட்சுமியின் கடாட்சமாகும். மாலை ஆறு மணிக்கு வீட்டின் பின் கதவைச் சாத்திவிட்டு முன் கதவைத் திறந்து வைக்க வேண்டும். இதன் பொருள் முன் வாசல் வழியாக வரும் இலட்சுமி பின் வாசல் வழியாகச் சென்றுவிடக் கூடாது என்பதுதான். தீபம் ஏற்றிய பின் இலட்சுமி தீப ஒளியாக வீட்டில் திகழ்கின்றாள். தீபம் ஏற்றிய பின்னர் பின் கதவு திறக்கப் படலாம். பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுத் திரி போட்டு குளம்போல் நெய்யை விளக்கில் இட்டு தாயே உன்தன் காலடியில் சரணடைந்தேன், மாதாவே உன்தன் மலரடியில் நான் பணிந்தேன் என்று நித்தம் நித்தம் வணங்கினால் வாழ்வில் இருள் அகலும். இன்பம் ஊட்டும். அருளைப் பெருக்கும், அன்பை வளர்க்கும். பாரில் சிறந்தே வாழ்ந்திடலாம். விளக்கில் விளங்கும் ஜோதிதனை விமலன் என்றே உணரலாம். திருவிளக்கு பூஜை செய்து பேறுகள் பல பெற்று வளமுடன் வாழ்வோமாக.

**தீபாராதனைத் துதி**

போற்றி ஓம் கௌரி போற்றி, போற்றி என்று அகத்தில் அன்புச்
சாற்றினி லூறி நிற்கும் தண்ணடி யார்கள் தம்மைக்
கூற்றனின் நெடிய பாசக் கொடுமைகள் அணுகாவிடில்
ஏற்றியங்கு அருட்பாலூட்டும் இறைவியே போற்றி போற்றி.

**உன்னைநீ அவனிடம் ஒப்படை**
**ஓடிவந் துகாக்கும் வேற்படை**

நினைத்ததை முடித்து வைப்பான்
நினையா துவந்து நிற்பான்
அனைத்தும் வேலவனின் கூத்தே
அவனின் றியணுவும் அசையா
வினைகள் எல்லாம் போக்குவான்
வேண்டும் வரங்கள் நல்குவான்
உன்னைநீ அவனிடம் ஒப்படை
ஓடிவந் துகாக்கும் வேற்படை.

-வ. யோகானந்தசிவம்-

*தூய்மையான உள்ளத்தில் வஞ்சக எண்ணங்களுக்கு சிறிதும் இடம் கிடையாது.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சு. சுதாகர் (சுந்தரமூர்த்தி குடும்பம்) | அளவெட்டி | 3000. 00 |
| மு. சிவதர்சன் | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| பா. சுபாசினி | இணுவில் | 1மூடை அரிசி |
| ஜெ. ஜெயந்தன் | வசாவிளான் | 1000. 00 |
| ச. பகீரதன் | திருகோணமலை | 1000. 00 |
| கு. தர்மகுலசிங்கன் | உரும்பராய் | 1000. 00 |
| அக்ஷயன், ஹரிசியன், ஆரிசியன் | லண்டன் | 5000. 00 |
| திரு தீபன் | திருநெல்வேலி | 1000. 00 |
| யோகாம்பிகை உதயலிங்கம் | பிரான்ஸ் (மூளாய்) | 3000. 00 |
| வே. முருகேசு சுவாமிகளின் நினைவாக | | 50000. 00 |
| வி. விமலேஸ்வரன், ஆ. சுரேஸ் | லண்டன், கரவெட்டி | 100000. 00 |
| அ. மகேஸ்வரி நினைவாக | பண்ணாகம் | 1000. 00 |
| S. பூவிலிங்கம் | அச்சுவேலி | 1000. 00 |
| வே. சிவசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு துஷ்யந்தன் | மானிப்பாய் | 2000. 00 |
| ச. விதேஸ் | சிலாபம் | 2000. 00 |
| இ. தேவராசா | குடத்தனை | 10000. 00 |
| இ. சிவரஞ்சன் | கைதடி | 1புட்டி அரிசி 500. 00 |
| கோ. தயாநிதி | கைதடி மத்தி | 1புட்டி அரிசி 500. 00 |
| ச. திரன் | கைதடி | 500. 00 |
| வே. பார்த்தீபன், வே. குணதீபன் | கைதடி | 1000. 00 |
| சி. பிரகாஸ் | கைதடி | 500. 00 |
| திரு நடராஜர் குடும்பம் | கொக்குவில் | 25000. 00 |
| இ. பாலசுந்தரம் | ஆனைக்கோட்டை | 35000. 00 |
| தி. பஞ்சலிங்கம் | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| எரிஷன் தனுஷா | அச்சுவேலி | 10000. 00 |
| து. இந்திராதேவி | சுன்னாகம் | 1000. 00 |
| ம. கஜேந்திரன் | கரவெட்டி | 5000. 00 |
| S. அருள்நிலா, S. அனிலா | யாழ்ப்பாணம் | 1000. 00 |

*சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.*

| | | |
|---|---|---|
| ரோஜினி கிருபாகரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 36000. 00 |
| முருகன் அடியார் | உடுவில் | 1000. 00 |
| A. ஆனந்தகுமார் | திக்கம் | 5000. 00 |
| ப. சிவமைந்தன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஐ. அன்னபூரணம் | தாவடி | 1மூடை அரிசி 5000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| S.K. சண்முகசுந்தரம் | சொய்சாபுரம் | 1000. 00 |
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 1000. 00 |
| இ. திருக்குமரன் | சுதுமலை | 2000. 00 |
| சி. குணரட்ணம் | மானிப்பாய் | 5000. 00 |
| மைதிலி நகை மாடம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| க. மகாலட்சுமி | காரைநகர் | 2000. 00 |
| R. பொன்னுராசா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திருமதி சு. சபாநடேசன் | காரைநகர் | 2000. 00 |
| S. சோபிதா, ரவி | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| ர. கம்ஷாயினி | கட்டைப்பிராய் | 1000. 00 |
| பா. ஜெயராணி | பருத்தித்துறை | 3000. 00 |
| க. ராசரத்தினம் | வட்டுக்கோட்டை | 1புட்டி உ.கிழங்கு, 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| கு. மகாலிங்கம் | கரவெட்டி | 20000. 00 |
| க. குகதாசன் | புத்தூர் | 5000. 00 |
| ந. மணிவண்ணன் | கரவெட்டி | 24000. 00 |
| ந. தனஞ்சயன் | இமையாணன் வடக்கு | 5000. 00 |
| திரு சயிலேஸ்வரன் குடும்பம் | ஊரெழு | 10000. 00 |
| T. சிவதர்ஷன் | காரைநகர் | 500. 00 |
| A. துளசிதாசன் | கொழும்பு | 5000. 00 |
| M. செந்தூரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| த. சரஸ்வதி | நீர்வேலி | 2000. 00 |
| இ. சிவனேசன் | புத்தூர் | 5000. 00 |
| து. பிரபாகரன் | இணுவில் | 1000. 00 |
| பா. மயூரா | வல்வெட்டி | 1000. 00 |
| ஐ. நடராஜா | புத்தூர் | 1500. 00 |
| திருமதி இ. தர்மராசா | திருகோணமலை | 1000. 00 |
| உதயதாசன் தாரணி | வெள்ளவத்தை | 10000. 00 |
| இ. சிவராஜா யாக்கரை | கரவெட்டி (கற்றல் செயற்பாடு) | 10000. 00 |
| திருமதி இரத்தினம் | சாவகச்சேரி | 5000. 00 |
| கந்தசாமி நினைவாக | நவாலி | 1000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |

(தொடரும்...


*சேமித்து வைப்பதே தலை சிறந்த வருமானம்.*

# சுவாமி விபுலானந்த அடிகளார்

– **திருமதி புனிதவதி சண்முகலிங்கம்** அவர்கள் –

முத்தமிழ் வித்தகர், சுவாமி விபுலானந்த அடிகளார் மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் சாமித்தம்பி கண்ணம்மை தம்பதியினரின் புத்திரராக 1892இல் பிறந்தார். இவரது இயற்பெயர் மயில்வாகனன். இவர் சிறு பராயத்தில் குஞ்சிதபாத உபாத்தியாயரிடம் கல்வி கற்றார். பின்பு கல்முனை மெதடிஸ்த ஆங்கில பாடசாலை, மட்டக்களப்பு அர்ச்மைக்கேல் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயின்றார். இளமையிலேயே அறிவு, ஆற்றல், விவேகம் மிக்கவரான மயில்வாகனன் படிப்படியாக தன் கல்வித் தகைமைகளில் உயர்வு பெற்றார். ஆங்கில ஆசிரியர் பயிற்சியும் பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் சித்தி எய்திய முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமையையும் பெற்றார். 1917இல் லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமானி பட்டத்தையும் பெற்றார்.

இத்தகைய கல்வியியலாளர்- மொழி வல்லுனரான மயில்வாகனன் தனது மக்களுக்காக சிறிது காலம் ஆசிரிய சேவையில் ஈடுபட்டார். இரு ஆண்டுகள் மட்டக்களப்பிலும் பின் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் ஆசிரியராக கடமை ஆற்றினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் பதவியையும் அலங்கரித்தார். இவர் யாழ்ப்பாணத்தில் சேவை ஆற்றிய காலத்தில் யோகர் சுவாமிகளின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. இது ஏற்கனவே துறவுள்ளம் கொண்ட சுவாமிகளை மேலும் பக்குவப் படுத்தியது.



1922ஆம் ஆண்டு மயில்வாகனன் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. இவர் சென்னை சென்றார். மயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ண மிஷனில் இணைந்தார். பிரபோத சைதன்யர் எனும் நாமம் பெற்றார். 1924ஆம் ஆண்டு சித்திரை மாத பௌர்ணமி தினத்தில் சிவானந்த சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றார். காவி உடை தரித்தார். சுவாமி விபுலானந்தர் எனும் தீட்சா நாமமும் பெற்றார். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் துறவிகளுள் ஒருவரானார். இத்துறவு வாழ்க்கை அவரது மானிட நேயத்தை மேலும் வளர்த்தது.

1925இல் சுவாமி தாய்நாடு திரும்பினார். அந்நியர் ஆட்சிக் காலத்தில் தம் அடையாளத்தை இழந்து மயக்கமுற்ற மக்களை மீட்டெடுக்கச் சித்தம் கொண்டார். இவர்களுக்கு அறிவொளி பாய்ச்சும் நோக்கத்தில் பல பாடசாலைகளை நிறுவினார். மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம், யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயம், திருகோணமலை இராமகிருஷ்ண இந்துக் கல்லூரி என்பன அவற்றுள் சிலவாகும். பெண்

கல்வியிலும் இவர் மிகுந்த ஆர்வமுடையவர். பெண்களுக்கென காரைதீவு சாரதா வித்தியாலயத்தையும், மட்டக்களப்பில் விவேகானந்தா மகளிர் கல்லூரியையும் தாபித்தார். அநாதைக் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக அநாதை இல்லத்தையும் அமைத்தார். அத்துடன் இப்பகுதியில் ராமகிருஷ்ண கிளை நிறுவனத்தையும் தாபித்தார். இச் செயற்பாடுகளூடாக நல்லொழுக்கமும் அறிவாற்றலும் சமய பக்தியையும் கொண்ட ஒரு இளம் சமுதாயம் உருவானது. இப்பணிகள் இவரை ஒரு உன்னத சமூகத் துறவியாக இனம் காட்டியது.

இவரது ஆற்றல் துறவுநிலை பெற்ற பின்னரே முழு அளவில் பிரகாசிக்கத் தொடங்கியது. இவரது பணிகள் பன்முகப்பட்டவை. அண்ணாமலை பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதல் தமிழ் பேராசிரியராக பதவி வகித்தார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் வித்தகனாக பரிணமித்தார். இவரது தனிப் பாடல்களும், கங்கையில் விடுத்த ஓலை, ஆங்கில வாணி ஆகிய குறுங் காவியங்களும் இவரை உன்னத கவிஞனாக்கி விடுகிறது.

தமிழிசை நூல்களை பல ஆண்டுகளாக ஆய்வு செய்து வெளியிட்ட சாதனைப் படைப்பாக இவரது "யாழ்நூல்" திகழ்கிறது. இது பண்டைய தமிழரின் நரம்பியற் கருவியான யாழின் பல்வேறு வடிவங்களை கூறுகிறது. அவற்றின் இயக்கங்களை தனது கணித, விஞ்ஞான, அறிவின் அடிப்படையில் விளக்கி வடிவமைத்தார். இது பழந் தமிழர் நாகரிகத்தை உலகெல்லாம் அறியச் செய்த உன்னதநூல். "திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணங்கச் செய்ய வேண்டும்" என்ற பாரதியின் கூற்றை மெய்ப்பிப்பதாக இந்த யாழ்நூல் அமைகிறது.

இவரது "மதங்க சூளாமணி" எனும் நூல் தமிழ், வடமொழி, ஆங்கில நாடக மரபுகளை விளக்கி எழுந்த சிறப்பார்ந்த நாடக நூலாகும். இது வேற்று மொழிகளில் இவருக்கு இருந்த புலமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவர் நடராச வடிவம், உமாமகேஸ்வரம், கணேச தோத்திர பஞ்சகம் என்ற சமய நூல்களையும் எழுதி உள்ளார். இவரது ஈசன் உவக்கும் மலர் என்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் எளிமையும் இனிமையும் பக்திச்சுவையும் மிக்கவை. இதோ ஒரு எடுத்துக்காட்டுப் பாடல்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளைநிற பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

என்ன அற்புதமான பாடல்.

துறவி, அடிகளார் என்ற சொற்பதம் காவி உடை அணிந்த வேதாந்தியையே நம் மனக்கண்முன்னிறுத்தும். காவி உடை அணிந்த விபுலானந்தரோ ஒரு சமூகத் துறவி. சமூகத்தை விட்டு நீங்காதவர். சமூகத்தின் துயரங்களிலும் மகிழ்ச்சியிலும் பங்குகொண்டவர். சிறந்த இலக்கியகர்த்தா. முத்தமிழ் வித்தகர். பழமையில் காலூன்றி புதுமை படைத்தவர். இத்தகைய புலமையாளர் 1947ஆம் ஆண்டு ஈசனுக்கு உவந்த மலராகத் தன்னையே அர்ப்பணித்தார். இவரது பூதவுடல் சிவானந்த வித்தியாலயத்தில் உள்ள தபோவனத்தில் அடக்கம் செய்யப்பட்டது. தமிழும் தமிழ் இசையும் உள்ளவரை இவர் புகழ் நிலைத்து நிற்கும்.

*நம்பிக்கையைக்கொண்டு மனிதனின் வீரத்தை நிர்ணயித்து விடலாம்.*

(தொடர்ச்சி...

# தீட்சையும் ஞான முத்தியும்

– **திருமதி சறோஜினிதேவி சிவஞானம்** அவர்கள் –

ஒருவர் உணர்த்தினாலன்றி அறியமாட்டாதது ஆன்மா! இராக்காலத்தில் மறைத்து நிற்கும் இருளைச் சூரியன் நீக்குகின்றது. இந்நிலையை உயிர் உணர்ந்தால்... எதையும் தான் செய்ததாக எண்ணமாட்டாது. ஆகவே இவற்றிற்கெல்லாம் ஒரு "சக்தி" உண்டு என்று எண்ணும்போதே ஆன்மா விடிவு பெறும். ஆன்மாவின் கருவி கரணங்களை அப்போதுதான் நெறிப்படுத்த முடியும். தன்னைத்தான் உணர முடியும்.

அத்தோடு நாம் நாற் பாதங்களான நாற்படிகளிற் செயலாற்றுவதோடு "ஞானிகட்குச் செய்யும் அறங்களால்" இப்பிறவியில் முத்தி கிடையாவிட்டாலும் மறு பிறவியிலேயாவது நேரே ஞானம் கைவரப்பெற்று முத்தி பெறமுடியும்.

தீட்சை பெற்றவர்கள் முத்திபஞ்சாட்சரத்தை சிறப்புற ஓதலாம். எமது நெஞ்சக் கமலத்தில் இறைவனை ஐந்தெழுத்து உருவினனாகக் கண்டு அர்ச்சித்து வணங்கலாம். அப்போது ஆன்மாவானது சிவத்துள் அடங்கி நிற்கும்.

**ஞான நிலையாவது:-**

இறைவன் பெரும் கருணையை இடைவிடாது நினைந்து உருகுவதாகும். இப்படி இறைவனை அத்துவிதமாய் எம்முடனிருக்கின்றான் என்று எண்ண எண்ண ஞானநிலை, ஞானக்கண்ணைப் பெற்ற நிலை உண்டாகும். இப்படி தங்கள் தங்கள் கருவிகள் கரணங்கள் எல்லாம் பொய் என எண்ணி கதறி அழுது இறைவன் திருவடி நிழலை அடைந்த மெய்யடியார் எத்தனை பேர்.

தீட்சையால் அத்துவாசுத்தியைப் பெற்ற உயிர் தீட்சையாலேயே தன்னை உணர உணர "ஞானம்" பெறும். எனவே தீட்சையின்போது உபதேசத்தால் ஒரு இதய சுத்தியாளனுக்கு "ஞானம் பிரகாசிக்க" வேண்டும். ஞானமே முத்திக்கு வழி, ஞானப் பிரகாசமே முத்தியைக் கொடுக்கும். இப்பேறு "தீட்சை" பெறுவதால் அமையும் பேறேயாம். தீட்சையால், ஞானமும் ஞானத்தாலேயே முத்திப்பேறும் அமையுமாம். (முற்றும்)

## நம்பிக்கையுணர்வு

பணக்கார இளைஞனின் விலையுயர்ந்த கார் நின்றுகொண்டிருந்தது. ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

சிரித்துக்கொண்டே அந்த இளைஞர் சொன்னார், "இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது" சிறுவன் முகத்தில் வியப்பு. "உனக்கு அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகிறாயா?" இளைஞர் கேட்டார். சிறுவன் சொன்னான், "இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டுமென்று விரும்புகிறேன்". நம்பிக்கையுணர்வு நல்லெண்ணங்களையே வளர்க்கும்.

*நம்பிக்கை வைக்காமல் உலகில் மேலான செயல் ஏதும் சாதிக்கப்படுவதில்லை.*

# -விழாக்கள் இரண்டு-

# திருவாசக விழாவும்

# கற்றல் உபகரணங்கள் வழங்கலும்

தொகுப்பு: வல்லையூர் அப்பாண்ணா-

**திருவாசக விழா:**



சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடந்தோறும் நடைபெற்று வரும் "திருவாசக விழா" 03.01.2020 வெள்ளியன்று ஆச்சிரம மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. செல்வச் சந்நிதியில் நடைபெற்ற பூசை வழிபாடுகள் முடிவடைந்த பின்னர், நால்வர் திருவுருவங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன.

பழைய பேழையில் வழமையாக எடுத்துவரப்படும் நால்வர் திருவுருவப் படத்திற்குப் பதிலாக, புத்தம் புதிதாக ஆக்கப்பட்ட அழகிய திருப்பேழையில் வைத்து (படத்திற்குப் பதிலாக) பளிச்செனத் துலங்கும் நால்வர் திருவுருவச் சிலைகளுடன் நடராஜர் திருவுருவமும் திருவாசக ஏடுகளும் மறவனூர் T.M. வாசகர் குழுவினரின் மங்கல இசையுடன் ஊர்வலமாக ஆச்சிரம வாசலை வந்தடைந்தது.



ஆச்சிரம வளாகத்தில் பூவரச மரத்தடியில் இடம்பெற்ற நிறைகுட வரவேற்பினைத் தொடர்ந்து, பேரவையின் மூத்த உறுப்பினர் திரு கு. அருணகிரிநாதன் தலைமையில்

விழா மேடையில் திருவாசக விழா நிகழ்வுகள் ஆரம்பமாயின. அன்றைய வெள்ளி வாராந்த நிகழ்வுக்காக வந்திருந்த மறவனூர் T.M. வாசகர் குழுவினரின் மங்கல இசை நடைபெற்றது.



தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவ சித்தாந்தத்துறை விரிவுரையாளர் திரு தி. செல்வமனோகரன் அவர்கள் "யாரொடு நோகேன்" எனும் பொருளில் சிறப்புரை ஆற்றினார். அனைவரும் புரியும்படியாக அழகு தமிழில் அவர் ஆற்றிய உரை சபையோரை வெகுவாகக் கவர்ந்தது. சிறப்புரையினைத் தொடர்ந்து காரைநகர் கிழவன்காடு கலாமன்ற ஆசிரியை திருவாசகக் குயில் செல்வி லீலாவதி இராசரெத்தினம் அவர்களின் "திருவாசக இன்னிசை" நடைபெற்றது. செவிக்கு இனிமையாகவும் - மனதுக்கு இதமாகவும் இருந்த திருவாசகத் தேனிசைப் பாடல்கள் கேட்டு கரகோஷம் செய்து பார்வையாளர்கள் தம் மகிழ்வினை வெளிப்படுத்தினர்.





சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் செயலாளர் திரு ஆ. சிவநாதன் அவர்களின் நன்றி உரையுடன் திருவாசக விழா இனிதே நிறைவுக்கு வந்தது.

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்:



பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது அமரர் மகேஸ்வரன் அவர்களின் ஞாபகார்த்தமாக சந்நிதியான் ஆச்சிரமத்தினால் கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் இவ்வாண்டுக்கான வழங்கல் நிகழ்வு 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெற்றது. பேரவைச் செயலாளர் திரு ஆ. சிவநாதன் அவர்களின் பஞ்சபுராண ஓதுதலுடன் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகியது.



வட மாகாண சபையின் செயலாளர் திரு சி. சத்தியசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கற்றல் உபகரணங்கள் பெறுவதற்காக- மண்டபம் நிறைந்த கூட்டமாக வந்திருந்த மாணவர்களை வழிநடத்தக்கூடிய நல்லுரையாக திரு சத்தியசீலன் அவர்களின் சிறப்புரை அமைந்திருந்தது.

பரு. இலங்கை வங்கி முகாமையாளர் திரு சி. தவலிங்கம், தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராசா ஆகியோரது பேச்சுரைகளைத் தொடர்ந்து மொத்தம் 245 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்ட குறித்த மாணவர்களின் பெயர் விபரங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய விழாவிற்கு வருகை தந்திருந்த பிரமுகர்கள், ஆச்சிரம ஆர்வலர்களால் கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டபோது, மாணவர்கள் தர வாரியாக வரிசையாக வந்து பொதிகளைப் பெற்றுச் சென்றனர். விழா நிறைவின் பின்னர் மாணவர்கள்- பெற்றோர்- விழாவிற்கு வருகை தந்தோர் அனைவரும் ஒன்றாக மதிய உணவுக்காக மண்டபத்தில் அமர்ந்து கொண்டனர்.





அமரர் மகேஸ்வரனின் 11ஆவது ஆண்டு நினைவாக, ஆண்டுதோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் மாணவர்களுடன் திரு சி. சத்தியசீலன், திரு சி. தவலிங்கம் ஆகியோருடன் ஆச்சிரம சுவாமிகளும்.






சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு ம. ஸ்ரீகாந்தன் மற்றும் அவரது துணைவியார் அவர்களினாலும் வழங்கப்பட்டபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு சி. பத்மநாதன் மற்றும் அவரது துணைவியார் அவர்களினாலும் வழங்கப்பட்டபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு ப. துஷ்யந்தன் மற்றும் அவரது துணைவியார் அவர்களினாலும் வழங்கப்பட்டபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு த. கணேசமூர்த்தி அவர்களும் திரு K. சுசிந்திரன் அவர்களும் வழங்கியபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில்
பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு துரை. கணேசமூர்த்தி அவர்களும்
திரு செ. பரமேஸ்வரன் அவர்களும் வழங்கியபோது...






சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில்
பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு கு. அப்பாத்துரை அவர்களும்
திரு இரா. ஸ்ரீநடராஜா அவர்களும் வழங்கியபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைப் பெற்ற மாணவர்களுடன் திரு செ. ஞானசபேசன் அவர்களும் திரு சி. நாகலிங்கம் அவர்களும்.





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில்
பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு க. கமலதாஸ் அவர்களும்
அவரது துணைவியார் அவர்களும் வழங்கியபோது...






சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு செந்தில் அவர்களும் திரு செ. ராமதாஸ் அவர்களும் வழங்கியபோது...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில்
பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை திரு ஆ. அருணாசலம் அவர்களும்
திரு க. கைலைநாதன் அவர்களும் வழங்கியபோது...





(மேலே) கற்றல் உபகரணங்களைப் பெற்ற பாடசாலை மாணவர்களுடன் திரு ஆ. சிவநாதன்.
(கீழே) 27.01.2019 – வாராந்த நிகழ்வினில் வைத்து செல்வி கஸ்தூரி சந்திரகுமார் என்பவருக்கு
திரு சோ. பரமநாதன், திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி இருவரும் துவிச்சக்கரவண்டியினை வழங்கியபோது...





மாதாந்த வெளியீடான ஞானச்சுடரின் மார்கழிமாத மலருக்கான சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களுடன்
அன்றைய நிகழ்வில் வெளியீட்டுரை நிகழ்த்திய திரு சோ. பரமநாதன் அவர்களும்
மதிப்பீட்டுரையை வழங்கிய திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களும்.



# துளசி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

துளசிப் பத்திரம் வைணவர்களாலும் சைவர்களாலும் பூசிக்கப்படுவது கண்கூடு. இப் பத்திரத்தின் மேன்மையும், தூய்மையும் சொல்லுந்தரமன்று. இப்பத்திரத்தின் பின்னால் இருக்கும் வரலாறு ஒன்றை நோக்குவோம்.

தூய்மையை அருளும் துளசி முற்பிறப்பில் ஒரு பெண்ணாக வாழ்ந்தாள். இவள் கண்ணபிரான் அருளைப் பெற்ற ராதையின் தோழியாக இருந்தவள். அப்போது சந்தர்ப்பவசத்தால் கண்ணனின் சாபம் பெற்று பூவுலகில் தர்மசத்துவசன் என்பவனுக்கு மகளாகப் பிறக்க நேரிட்டது. இக்குழந்தைக்கு பெற்றோர் "துளசி" எனப் பெயரிட்டு சீர் சிறப்போடு வளர்த்து வந்தனர். துளசி என்ற சொல்லுக்கு "தன்னிகர் இல்லாதவள்" என்றும் பொருள் உண்டு.

பூர்வ ஜன்ம பலனின்படி, அழகும் குணமும் நிரம்பிய துளசி வளர்ந்து சங்கசூடன் என்னும் அரசிளங்குமரன் ஒருவனை மணந்தாள்.

சங்கசூடன் தேவி பக்தன். வீர பராக்கிரமம் உள்ளவன். தேவியின் வலிமையால் ஒப்பற்ற வரங்களைப் பெற்றவன். ஆனால் தான் பெற்ற வரம்பிலா வர வலிமை காரணமாக சங்கசூடன் தற்பெருமையும் அகந்தையும் கொண்டான். எல்லோரையும் அடக்கி ஆள முற்பட்டான். தேவர்களையும் பிடித்துச் சிறை வைத்தான்.

வழக்கப்படி தேவர்கள் சங்கசூடனின் கொடுமைகளை எம்பெருமானிடம் முறையிடவே எம்பெருமான், அவனை அழிக்கத் திருவுளம் கொண்டார்.

அதற்குத் திருமாலின் உதவியையும் நாடினார். கற்பிற் சிறந்த பதிவிரதையான துளசி யின் சக்தி, மிக வலியது. அவள் கற்புடன் திகழும்வரை யாராலும் சங்கசூடனைக் கொன்று வெற்றிகொள்ள முடியாது என்ற உண்மையை அறிந்த திருமால் ஓர் உபாயம் செய்தார்.

தான் சங்கசூடனின் வடிவெடுத்து வந்து துளசியின் முன் நின்று தன்னையே அவள் கணவன் என எண்ணவும் வைத்தார்.

இதனால் அவளுடைய பதிவிரதா தர்மம் களங்கமடைந்தது. பின்னர் இதனை உணர்ந்த துளசி பதை பதைத்தாள். கடும் சினமும் கொண்டாள்.

திருமால் அவளைச் சாந்தப்படுத்தி "நீ அடுத்த ஜென்மத்தில் என்னையே கணவனாக அடைவாய்" என்று உண்மையை உணர்த்தினார். பின்னர் சங்கசூடனைச் சங்கரித்தார்.

சங்கசூடனின் உடலோடு தானும் தீயில் வீழ்ந்து தன் வாழ்வை முடித்துக்கொண்டாள் துளசி.

அவள் உடலைத் துளசிச் செடியாக மாற்றி அவளைச் சிரஞ்சீவியாக்கினார் திருமால். அன்றுமுதல் துளசி பரிசுத்தமானவளாக பாவங்களைப் போக்கும் பரம கல்யாணியாகத்

*தன்மீது நம்பிக்கை வைப்பவன் எப்போதும் வெற்றி பெறுவான், மகிழ்ச்சியும் அடைவான்.*

திகழ்கின்றாள். மகாலஷ்மியின் சொரூபம் துளசி. எனவே துளசி இருக்குமிடத்தில் மகா விஷ்ணுவும் எப்பொழுதும் வாசம் செய்வார்.

துளசிப்பத்திரம் கொண்டு பூசை செய்தால் 1000 பாற்குடங்களால் விஷ்ணு பகவானுக்கு அபிஷேகம் செய்யும் பலன் கிடைக்கும்.

விஷ்ணுவுக்குரியதெனக் கூறப்படும் துளசி சிவபெருமானுக்கும் அர்ச்சிக்கப்படுகின்றது. எடுத்து வைத்த துளசிப் பத்திரங்களை மூன்று நாட்களுக்குப் பூசை செய்யப் பயன்படுத்தலாம். அத்தோடு துளசி அதி மருத்துவ மகிமையும் வாய்ந்தது.

எனவே, இத்துணை மேன்மை பொருந்திய துளசிச் செடியை யாமும், எமது இல்லங்களில் புனிதமாக வளர்த்து வழிபாட்டுக்குப் பயன்படுத்தி நற்பயன் பெறுவோமாக.

## தைப்பொங்கல் திருநாள்

தைப்பொங்கல் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா ஆகும். தமிழர் திருநாளாக தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றி செலுத்தும் திருநாள் ஆகும்.

பயிர்களின் வளர்ச்சிக்கு மழையைத் தந்து வளம் தரும் சூரிய பகவானுக்கு உழைப்பின் முதல் அறுவடையைப் பொங்கல் வைத்துப் படைத்து நன்றிகூறி வழிபட்டு வரும் மரபு தமிழர்களுக்கே உரித்தானதாகும். இதனைத் தொன்றுதொட்டு எம்மக்கள் கடைப்பிடித்து வருவதனை நாம் அவதானிக்கலாம். பொங்கல் விழா நான்கு நாட்கள். அதாவது போகி, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவதுண்டு. ஆலயங்களில் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. தைப்பொங்கல் விழாவுக்கு முதல்நாள் நடைபெறுவது போகிப் பொங்கல் விழாவாகும். போகி என்பவன் இந்திரன். அவன் மேகங்களை இயக்கி மழையை வழங்கும் இறைவனாகக் கருதப்பட்டான். தமிழ்நாட்டார் காலத்திலிருந்தே இந்திரனை விளை நிலங்களின் தெய்வமாக வைத்து வழிபட்டு வரலாயினர். சோழ வள நாட்டில் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. இப்போகிப் பொங்கலுக்கு அடுத்து வருவது தைப்பொங்கல் பெருநாளாகும். இப்பெருநாள் மேற்குறிப்பிட்டபடி சூரியனை வழிபடும் நாளாகும். இப்பொங்கல் திருநாளுக்கு அடுத்தநாள் நடைபெறுவது மாட்டுப்பொங்கல் திருநாளாகும். நாட்டுப்புறங்களில் இப்பொங்கல் மிகச் சிறப்பாக நடைபெறும். பண்டைக் காலத்தில் மாடே செல்வமாகக் கருதப்பட்டது. மாடு என்ற சொல்லுக்கு செல்வம் என்ற பொருளுமுண்டு.

மனித இனத்திற்காக உழைக்கும் மிருகங்களில் மாட்டுக்கு இணையாகச் சொல்லக் கூடிய எந்த மிருகமுமில்லை. விளை நிலத்தை உழுவதற்கு உதவுவது மாடு. அமைதியும் அன்பும் பொறுமையும் உடையது பசு. தன் கன்றுக்குரிய பாலைக் கவர்ந்து கொள்ளும் கல் நெஞ்சர்க்கும் ஒளிக்காது பாலை வழங்கிவரும் கருணை உடையது பசு. பசுக்களை ஆதரிக்கவேண்டும் என்பது தமிழர் கொள்கை. வயலில் கடுமையாக உழைக்கும் காளை மாடுகளும் பாலை வழங்கும் கறவை மாடுகளும் நோயின்றி செழித்து வளர்வதற்காக நிகழ்ந்து வருவதே மாட்டுப்பொங்கலாகும். நன்றி மறவாமை என்ற மானிட நற்பண்பினை அன்றுதொட்டு இன்றுவரை நானில மக்களுக்கு எடுத்துக்காட்டும் தலை சிறந்த விழா தனிப்பெரும் பொங்கல் விழா.

*உன்னுடைய எண்ணம்போலவே உன் வாழ்க்கை அமையும்.*

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

– பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஸ்ண ஐயர் அவர்கள் –

திருக்கோயில்களின் தலைவாயிலில் வானளாவி விளங்கும் கோபுரங்கள் தூல லிங்கம் என்ற சிறப்புப் பெறுவன. கோயிலின் கம்பீரத் தோற்றத்திற்கும் வனப்பிற்கும் கோபுரங்களே காரணமாகின்றன. "கோலக் கோபுரக்கோ கணஞ்சூழாக் கால்களாற் பய னென்" என்ற நாவுக்கரசரின் வாக்கு கோபுரத் தின் மகிமையைக் கூறுகின்றது. கோபுரத் துடன் கூடி விளங்கும் கோயில்தான் எல்லா நிலைகளிலும் நிறைவு பெற்றதொன்றாக அமையும். எனவே கோபுரம் கோயில்களுக் குரிய இன்றியமையாத அங்கமாக விளங்கு கின்றது. கலைச்சிறப்பும் தத்துவ மகிமையும் கொண்டு மிளிர்வன கோபுரங்கள்.

திருக்கோயிலில், கர்ப்பக்கிரகம், விமா னம், மண்டபங்கள், பிரகாரம் போன்ற பல் வகை அம்சங்களும் சிறப்படைவதற்கு தலைவாயிலில் சிறந்து விளங்கும் கோபுரமே துணைசெய்கின்றது. எனவே இக்காரணம் பற்றியே பண்டைய நாட்களில் மன்னர்கள் தாம் எழுப்பிய கோயில்களில் கோபுரங்களை யும் சிறப்பாக அமைத்தனர். கோபுரத்தின் அமைப்பிலே சிறந்ததொரு தத்துவம் உள் ளது. பூமியில் ஆழ்ந்தும் அகன்றும் ஆகாய வெளியிலே உயர்ந்தும் விளங்குவது கோபுர மாகும். மூலஸ்தானத்துள் அமைந்து விளங் கும் சூக்குமலிங்கம் நித்திய நைமித்தியக் கிரியைகள் நிகழும்போது அடியார்கள் உள்ளே நின்று வழிபடுவதற்கு ஏதுவாகின்றது. கொடி மரத்தடியில் அமைந்து விளங்குவது பத்மலிங்கம். ஆனால் தூல லிங்கமெனச் சிறப்புப் பெறும். கோபுரமோ துலாம்பரமாகத் தூரத்தே நின்று கைதொழுது வழிபடுவதற்கும் வசதிக் குறைவான காலங்களில் கோயில் தரிசனம் செய்யமுடியாத வேளைகளில் வழி படுவதற்கும் பெருந்துணை புரிவது. இவ்வாறு சகல நிலைகளிலும் சிறப்புப்பெறும் கோபு ரத்தை ராஜகோபுரம் என்றழைப்பர். இறை வனது சாந்நித்தியம் கோபுரத்திலும் நிறைந்து விளங்கும்.

தென்னாட்டிலும் ஈழத்திலும் காலங் காலமாக எழுச்சி பெறும் கோபுரங்கள் எமது பண்பாட்டுச் சின்னமாக விளங்கி உலகளாவிய நிலையில் எமது பண்பாட்டுப் பெருமையை பறைசாற்றி நிற்கின்றன.

தமிழ் நாட்டிலே உள்ள கோயில் களில் கோபுரங்கள்தான் அடியார்களை வர வேற்று நிற்கின்றன. கோபுரத்தைத் தரிசித்த மாத்திரத்தில் பரம்பொருளின் தெய்வீகப் பெருமை எமது உள்ளங்களில் குடிகொண்டு விடுகின்றது. கோயில் என்றால் கோபுரமே எனக் கூறக் கூடிய அளவுக்குத் தமிழகத்தில் உள்ள கோயில்கள்தோறும் வானளாவ ஓங்கி நிற்கும் வகையில் கோபுரங்கள் எடுக்கப்

*திரும்பத் திரும்பச் செய்யும் எந்தப் பணியிலும் விரைவில் நிபுணராக முடியும்.*

பட்டுள்ளன. எனவே கோயில் எழுந்த சூழலில் தெய்வீக மணங்கமழச் செய்வனவாக இவை விளங்குகின்றன.

கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டிட அமைப்பாகிய கோபுரத்தின் வரலாறு சுவையானதொன்று. தமிழகத்திலே கோயிற் கட்டிடக்கலை சிறப்பாக பல்லவர் காலத்திலிருந்துதான் மேன்மையடைகின்றது. மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப் பிடத்தக்கன பல்லவ மன்னன் இராஜசிம்மன் எடுத்த கோயில்களில்த்தான் காணப்படுவதாக அறிஞர் கருதுவர். காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் மாமல்லபுரத்தில் எழுந்த கடற் கரைக் கோயிலிலும் மிகச் சிறிய கோபுரங்கள் உள்ளன. இக்காலக் கோயிற் கட்டிட அமைப் பில் நாம் காணும் சிறப்பம்சம் யாதெனில் கருவறையை அலங்கரிக்கும் விமானம் உயர மாகவும் கோபுரம் மிகச் சிறியதாகவும் அமைந்து விளங்குவன. வாயில் மேற்பகுதியில் ஒரு சிறிய துவாரசாலை மட்டும் காணப்படக் கூடியது.

பல்லவ மன்னர்களையடுத்து கோயிற் திருப்பணிகளில் சிறப்பாக நிர்மாணித்த கோயில் கோபுரங்கள் விமானங்களை விடச் சிறியவையாகக் கட்டப்பட்டன. சில கோபுரங் களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. சோழர் காலத்தில் இராஜராஜ சோழனின் காலம் சிறப்பு வாய்ந்தது. இவன் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயில் ஒரு புதிய மரபைக் கொண்டு விளங்கியது. இவனுடைய காலத் திலும் கருவறையின் மேல் உள்ள விமானம் உயர்த்தியே கட்டப்பட்டதாயினும் அதன் முன்னர் இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளியில் உள்ளது உயரமாகவும் உள்ளே உள்ளது உயரங் குறைவாகவும் கட்டப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கோயில் கோபுரங்கள் திருவாயில் என்ற பெயர் பெற் றன. விமானத்தின் முன்னர் இரு கோபுரங்கள் அமைப்பது சோழர் காலத்தில் முக்கிய மரபாக இருந்தது. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபும் தொடங்கியது. எடுத்துக்காட் டாக தில்லையில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் 12ஆம் 13ஆம் நூற்றாண் டில் கட்டப்பட்டன. இவை ஏழு நிலைக் கோபு ரங்களாகக் கட்டப்பட்டன. எனவே எழுநிலைக் கோபுரம் என்ற சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று. அடிப்பகுதி அகன்று பரந்து விளங்கிய நிலை யில் இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம் எழுந்தன.

இத்தகைய கோபுரங்களில் கீழ்ப்பகுதி யில் பல பரிவார தெய்வங்களின் உருவங்க ளும் மேற்பகுதியில் முக்கிய தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம்பெற்று உள்ளன. கோபுரத்தின் நுழை வாயிலின் இரு மருங்கும் உள்ள நிலைக் கால்களில் பரத நாட்டியக் கரணங்கள் சிற்பங்களாகச் சித்தரிக் கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தையடுத்து தமிழகத்தை ஆண்ட விஜயநகரப் பேரரசு மன்னர்கள் கோபு ரங்களையமைக்கும் பணியில் பல சிறப்பம் சங்களைப் புகுத்தினர். இவர்கள் புகழ் வாய்ந்த கோயில்கள் அனைத்திலும் மிக உயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். கோயிலின் வாயிலை இத்தகைய வானளாவ எழுந்த கோபுரங்கள் பெரும் வனப்பையும் கம்பீரத் தையும் எடுத்துக்காட்டின. காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் இவை போன்ற கோபுரங் கள் எழுந்தன. விஜயநகர மன்னர் வரிசையில் கோபுரப் பணியில் சிறந்து விளங்கியவர் கிருஷ்ண தேவராயர் ஆவார். இவர் 180

அடி உயரத்திற்கு மேல் கோபுரங்களை எழுப்பியவர். இவரது கோபுரங்கள் ராயர் கோபுரம் என்று அழைக்கப்படலாயிற்று. எனவே இக்காலப் பகுதியைக் கோயிற் கட்டிடக்கலை வரலாற்றில் கோபுர காலம் எனக் குறிப்பிடலாம். இம் மன்னர்களும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பியுள்ளனர். திருமலை மன்னர் மதுரையில் எழுப்பிய கோபுரத்தில் எண்ணற்ற அழகிய சுதை உருவங்களை வைத்து தனது தெய்வீக பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். இன்றும் இத்தகைய கோபுரங்கள் காண்போரின் உள்ளங்களில் தெய்வீகப் பெருமையையும் வரலாற்றுப் புகழையும் உணர்த்தி நிற்கின்றன.

கோபுரங்கள் புராண இதிகாசக் கதைகளை கட்புலனாக்கும் செற்றி வாய்ந்தன. அவற்றில் இடம்பெறும் சிற்பங்கள் தெய்வீக வரலாறு, கலை, தத்துவப் பொருள் ஆகியவற்றை விளக்கி நிற்கின்றன. கோபுரங்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று ஆகிய நிலைகளைக் கொண்டு விளங்குவன. கோபுரத்தின் முடியில் இத்தகைய எண்ணிக்கையைக் கொண்ட கலசங்கள் அமைத்து கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. கோபுரங்களில் பெரும்பாலானவை ஐந்து மாடங்களாகிய நிலைகளைக் கொண்டவை. தலைவாசலும் ஐந்து மாடங்களாகிய ஆறு அமைப்புக்களும் உடம்பின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைக் குறிப்பனவாகும். இந்துக் கோயில்களை அலங்கரிக்கும் கோபுரங்கள் ஆகமங்கள் விதித்துக் கூறும் திருக்கோயில்கள் அமைப்பின் பூரணத்துவத்தையும் பெருமையையும் எடுத்து இயம்புகின்றன.

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்தின் கோபுரங்கள் வரலாற்றுப் புகழோடு கலைச் சிறப்புப்பெற்று விளங்குகின்றன. அம்பிகையின் ஆலயத்திற்கு முன் அமைந்து விளங்கும் கோபுரம் ஏழு நிலைக் கோபுரம் ஆகும். 740 சுதை விக்கிரகங்களைக் கொண்டது. ஏறக்குறைய 117 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 78அடி நீளமும் 38 அடி அகலமும் கொண்டது. எண்ணற்ற கலை எழில் கொண்ட சிற்பங்களினால் இது "சித்திர கோபுரம்" என அழைக்கப்படுகின்றது. இக் கோயிலின் நாற்புறமும் நான்கு கோபுரங்கள் அலங்காரத்துடன் காட்சி தருகின்றன. ஒவ்வொன்றும் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இப்பிரதான கோபுரங்களுள் தென்புறத்தில் உள்ள கோபுரம் உயரத்தில் கூடியது. நில மட்டத்திலிருந்து 160 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 108 அடி நீளமும் 67 அடி அகலமுடையது. ஏறக்குறைய 1511 சுதைச் சிற்பங்கள் தெய்வீகப் பெருமைகளை விளக்கி நிற்கின்றன. மேற்குக் கோபுரம் 154 அடி உயரமானது. இதன் அடித்தளம் 101 அடி நீளமும் 63 அடி அகலமுமாகும். ஏறக்குறைய 1124 சுதைச் சிற்பங்கள் உள்ளன. வடக்குக் கோபுரம் மொட்டைக் கோபுரம் என அழைக்கப்படுகின்றது. கிழக்குக் கோபுரம் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (1216-38) எனவே இதனை சுந்தர பாண்டியன் கோபுரம் என அழைப்பர். இக் கோபுரம் 153 அடி உயரமும், அடிதளம் 111 அடி நீளமும் 65 அடி அகலமும் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய 1101 சுதைச் சிற்பங்கள் இக்கோபுரத்தை அலங்கரிக்கின்றன. இவ்வாறு கோபுரத்தின் சிற்பங்களை அறிய மதுரை ஸ்ரீ மீனாட்சி ஆலயம் சிறந்த தொன்றாக விளங்குகின்றது.

அண்மைக் காலத்தில் கோபுர வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீரங்கம் இராஜ கோபுரமாகும். ஆசியாவிலேயே உயரமான

*நேர்மை குணமிருந்தால் நல்ல எண்ணங்களைச் செயற்படுத்த முடியும்.*

கோபுரமென புகழத்தக்க பெருமை கொண்டது. அடியார்களைக் கருவியாக்கி அரங்கன் நிகழ்த்திய சாதனை என்று அனைவரும் பெருமைப்படத்தக்க கோபுரமிதுவாகும். ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் உள்ள இக்கோபுரம் பதின்மூன்று நிலைகளைக் கொண்டது. கோபுரம் 236 அடி உயரம் கொண்டது. கிழக்கு மேற்கில் $165^3/_4$ அடி அகலமும் தெற்கு வடக்கில் 97 அடி அகலமும் கொண்டது. பதின்மூன்று செம்புக் கலசங்களில் ஒவ்வொன்றும் $10^1/_2$ அடி உயரமும் $5^1/_2$ அடி பருமனும் 135 கிலோ கிராம் எடையும் கொண்டது. 1979 மே மாதம் முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு நாளும் சுமார் இருநூறு கலைஞர்களும் தொழிலாளர்களும் இணைந்து உழைத்து இவ் அரும் பெரும் திருப்பணியை நிறைவேற்றியுள்ளனர். இத்தகைய விபரங்கள் திருக்கோயிற் கோபுரத்தின் பெருமையினை எமக்கு அறிவுறுத்துகின்றன.

கோபுர அமைப்பில் கர்ப்பக்கிருக அளவுக்கும் திருக்கோயிலின் நீள அகல உயரங்களுக்கும் பொருத்தமாகவே திருக் கோபுரம் அமைய வேண்டுமென்பது சிவாகம விதி. கோபுர நிலையில் இரு அமைப்புக்கள் உள்ளன. கோபுரத்தின் நான்கு மூலைக் கோணங்களும் நேர்கோடாக அமைவது ஒருவகை. அம் மூலைக் கோணங்கள் நேர் கோட்டிலமையாது உள்ளே சற்று வளைந்து அமைவது இன்னொரு வகை. திருக்கோயிலின் தன்மைக்கும், வளத்திற்கும் ஏற்ப கோபுரங்களின் உயர அளவுகள் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலே ஊரின்கண் வாழும் மக்களுக்கு சமய உணர்வைத் தூண்டவல்ல கோபுரங்கள் ஆலயங்கள்தோறும் எழுந்ததைப் போன்று ஈழநாட்டின் கண்ணும் ஆலயங்கள் தோறும் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. திருக்கேதீச்சுவரம், கொழும்பு பொன்னம்பல வாணேசுவரர், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நல்லூர்க் கந்தன், இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் கோயில், நயினை நாக பூஷணி, காரைநகர் கருங்காலி முருக மூர்த்தி, வண்ணை வெங்கடவனின் ஆலயம், நாச்சிமார் கோயில், கீரிமலைச் சிவன் கோவில் போன்ற ஆலயங்களின் கோபுரங்கள் எழில்மிகு தோற்றத்துடன் காட்சி தருகின்றன. ஈழத்துச் சிதம்பரம் போன்ற பல ஆலயங்களில் கோபுரத் திருப்பணி நடந்தேறி வருகின்றன.

ஆலயத்தில் இறைவனுக்கென கோபுரம் அமைத்தல் எமது பொருளை அருளாக்கும் புண்ணியத் திருப்பணி எனில் மிகை இல்லை. கலையைப் பேணும் ஒருவகைக் கலைப் பணியாகவும் அமைகின்றது. அருள் நெறிக்கும் ஆன்ம நெறிக்கும் மக்களை ஆற்றுப்படுத்தவல்ல தெய்வத் திருப்பணி. இத்தகு திருப்பணியில் எமது வாழ்வில் ஒருமுறையாவது எம்மை ஈடுபடுத்திக் கொள்வதே எமக்குக் கிடைத்த அருட்பேறாகும்.

*நன்றி: மெய்ப்பொருள்- ஆண்டு 2018/2019*

**உலகை வெற்றி கொண்டால் இறைவன் பக்கம் திரும்பமாட்டாய். உலகம் உன்னைத் தோற்கடிக்கிறபோதுதான் இறைவனின் பக்கம் திரும்புகிறாய். உன்னைவிட உலகம் வலிமையாயிருப்பதை நீ அறிவாய். இந்த உலகத்தைப் படைத்தவன் அதைவிட வலிமையாயிருப்பான் என்பதை அறிந்துகொள். இறைவனின் சித்தத்தை அறிந்துகொள்ளும் திறனை அதைச் செய்து முடிக்கும் ஆற்றலை அவனிடமே வேண்டிப் பெறு.**

*உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாழ்க்கையினிலே ஒளி உண்டாகும்.*

(தொடர் -27)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

ஞானச்சுடர் வாசகர்களுக்கு புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள். சமய வாழ்வு எனும் நீண்ட கட்டுரையில் இந்து சமயம் பற்றிய சில விடயங்களை உங்களுடன் கடந்த 26 மாதங்களாக பகிர்ந்து வருகிறேன். இந்து மதம் குடும்ப வாழ்வின் வெற்றிக்கு கூறியிருக்கும் கருத்துக்களை எழுதலாம் என ஆரம்பிக்கிறேன்.

புதிதாகத் திருமணம் ஆன கணவனும் மனைவியும் சிரித்துப் பேசி மகிழ்ந்தபடி வருகிறார்கள். இது எவ்வளவு இனிமையான காட்சி!

நடுத்தர வயதுடைய தம்பதிகள் குழந்தைகள் குறும்பு செய்ய அவர்களைச் செல்லமாகக் கண்டித்தபடி, கடற்கரை மணலில் அமர்ந்திருக்கிறார்கள். இது எவ்வளவு அற்புதமான காட்சி!

சஷ்டி அப்த பூர்த்தியை முடித்த தாத்தாவும் பாட்டியும் மகன்களுடனும், மருமகள் களுடனும், பேரக் குழந்தைகளோடும் பொழுதுபோக்கி மகிழ்கின்ற காட்சி ஒரு தெய்வீகக் காட்சி! எல்லாமே குடும்பம் என்கிற கோயிலைச் சுற்றி நிகழ்கின்ற இனிய காட்சிகள்.

யோசித்துப் பார்த்தால் வாழ்க்கை என்பதே இவ்வளவுதான் என்கிற சுலப முடிவுக்கு வந்துவிடலாம்.

உலகில் வேறு எங்கும் இத்தகைய அன்புப் பிணைப்பை, பாச இணைப்பைப் பார்க்க முடியாது. இந்துக் காவியங்களும், இதிகாசங்களும் இதைத்தான் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன.

தனி மனித அன்பு, சமுதாயம் தழுவியதாக பரவிப் படர, குடும்பம்தான் காரணமாகிறது. மேலை நாட்டுக் குடும்பங்களுக்கும் இந்துக் குடும்பங்களுக்கும் ஓர் அடிப்படையான வித்தியாசம் உண்டு. அங்கெல்லாம் திருமணமானவுடன், ஆணும் பெண்ணும் தனி உலகம் ஆகிவிடுகின்றார்கள். இந்துக் குடும்பங்களின் நிலையே வேறு. திருமணமான பிறகும் அவர்கள் ஒரு பெரிய வட்டத்திற்குள், சிறிய வளையமாக செயற்படுவார்களே தவிர, தனிமைப்பட்டு விடமாட்டார்கள்.

இந்துக் கலாசார வாழ்க்கை அன்பின்மீது கட்டப்பட்டுள்ள வாழ்க்கை. மனைவி வந்துவிட்டாள் என்பதற்காக எந்த ஆணும் பெற்றோர்களை உதறி விடுவதில்லை. அவர்களை பாரமாக எண்ணுவதும் இல்லை. தற்போது இந்த எண்ணங்கள் மாறிவருவதும் முதியோர் இல்லங்கள் நிரம்பி வழிவதும் வேதனை தரும் நிகழ்வுகளாக அமைந்துள்ளன.

தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்பட்டு வருகின்ற நிலையிலும் பெற்றோரைப் பிரிந்து வேறு இடங்களில் தனிக் குடித்தனம் நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் பிள்ளைகளுக்கு ஏற்பட்டாலும் பாசம் என்கிற பிணைப்பு அறுந்துபோவதில்லை- அறுந்துபோகக் கூடாது.

*மன உறுதி இல்லாதபோதுதான் வாழ்க்கை வெறுமையாக இருக்கும்.*

காற்றாடி எவ்வளவு உயரத்தில் பறந்தாலும், கயிறு அதை விடுகிறவனின் கையில் இருப்பதைப்போல, பிள்ளைகளும் எவ்வளவு தொலைவில் வாழ்ந்தாலும், பாசக் கயிற்றால் பெற்றோருடன் பிணைக்கப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள அன்புப் பிணைப்பு அவ்வளவு சுலபத்தில் அறுந்துபோவதில்லை. இதில் தாய்ப்பாசம் மிகவும் உன்னதமானது. அதிக வலிமையுடையது. அதற்கு ஈடாக எதுவும் இருக்க முடியாது. இதைத்தான் "தொப்புள்கொடிப் பாசம்" என்று சொல்லுவார்கள். கருவிலிருந்தே இரத்தத்தில் ஊறிவந்தது தாய்ப்பாசம்.

இந்தப் பாசம் இந்துக்களுக்கு மட்டுமே உரியதா? என்று சிலர் கேட்கலாம். தாய்ப்பாசம் உலகம் முழுவதற்கும் பொதுவானதுதான், என்றாலும் இந்துக் கலாசாரமும் பழக்கவழக்கங்களும் அதை வலியுறுத்தி வந்திருப்பதைப்போல, வேறு கலாசாரங்கள் எதுவும் வலியுறுத்தவில்லை என திட்டவட்டமாகச் சொல்லலாம்.

ஏசுபிரான் இறைவனை தந்தை என்றுதான் குறிப்பிடுகிறார். ஆனால் இந்துமத அடியார்கள் இறைவனை "தாயாக" விளித்த பிறகே "தந்தையாக" விளிக்கிறார்கள்.

"அம்மையே அப்பா" என்றுதான் பாடுவார்கள். "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்றுதான் பாடுவார்கள். மேலை நாட்டினர் தங்கள் நாட்டை "தந்தையர் நாடு" என்றுதான் அழைப்பார்கள். "தாய்நாடு என்று அழைப்பதுதான் நமக்குப் பழக்கம்.

இந்துக்களின் வாழ்க்கை அமைப்பில் தாயின் இடம் உன்னதமானது. ஒரு பெண்ணைப் பார்த்து "தாயே" என்று அழைக்கும்போது, மரியாதைகள் அனைத்தும் அதற்குள் அடங்கி விடுகின்றன.

தாயை வணங்குவது ஒரு உன்னதமான வழிபாடு. "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்றார்கள்.

தாயை மனதார நேசித்து வழிபடுகிறவன், கோயிலுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. கண்கண்ட தெய்வமாக தாய் மதிக்கப்படுகிறாள். யாருடைய சாபத்துக்கு உள்ளானாலும் தாயின் சாபத்திற்கு ஆளாகக்கூடாது என்று சொல்லுவார்கள். "தாய் வயிறு எரிய பிள்ளைகள் காரணமானால், அந்தக் குடும்பமே எரிந்து நிர்மூலமாகிப்போகும்" என்பது இந்துக்களின் நம்பிக்கை.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

தாய் கோயிலாகிறாள். வழிபடும் தெய்வமாகிறாள். தந்தைசொல் வேதம் ஆகிறது. தெய்வம் இல்லாமல் வேதம் இல்லை. இவை "அரிவரி" வகுப்பில் டீச்சர் எங்களுக்குச் சொல்லித் தந்த மகுட வாசகங்கள். இன்றைய பாலர் வகுப்புக்கள் அடிப்படையைச் சொல்லித் தருவதில்லை. மாறாக ஏதோ கற்கின்றார்கள். அதனால் பிள்ளைகள் எப்படியோ வளர்கிறார்கள். கல்வித் திட்டம் மாற்றப்படவேண்டும். நல்ல சமூகத்தை நல்ல கல்வியே உருவாக்கும். இதனைக் கல்வியைத் திட்டமிடும் "கல்வியியலாளர்கள்" சிந்திக்க வேண்டும்.

*தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக்கொள்கிறது.*

வாழ்க்கையில் உயர்ந்த பலரை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் தாயிடம் காட்டிய பக்தியே அவர்களது வாழ்வின் உயர்வுக்குக் காரணமாகும். எல்லோருக்கும் தாயிடம் அன்பு இருக்கிறது. சிலருடைய அன்பை மட்டும் விஷேடமாக கருதவேண்டிய அவசியம் என்ன வந்தது என்கிற கேள்வியும் எழலாம். தாயிடம் அன்பு செலுத்தாதவர்களே இருக்க முடியாது உண்மைதான். சிலருக்கு அந்த அன்பு பக்தியாகவே இருக்கிறது.

தாயின் ஆசீர்வாதம் பெறாமல் எந்தக் காரியத்தையும் தொடங்கமாட்டார்கள். தாய் உயிருடன் இல்லாமல் போனாலும் அவருடைய உருவப் படத்தையோ, சிலையினையோ வணங்கிவிட்டு காரியம் ஆற்றுபவர்களை நான் அறிவேன்.

ஒரு தடவை சென்னையிலே (1975ஆம் ஆண்டு) இராமவரம் தோட்டம் எனும் இடத்தில் அன்றைய "சூப்பர் ஸ்டார்" எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்க்கும் ஆவலில் சென்றிருந்தேன். வீட்டு வாசலில் மக்கள் கூட்டம் (வழமையானது) உள்ளே இருந்து கார் ஒன்று வருகிறது. அதிலிருந்து எம்.ஜி.ஆர் அவர்கள் இறங்குகிறார்கள். வளவுக்குள் சிறிய கோயில் ஒன்று அமைந்திருந்தது. அதிகாலையில் வீட்டில் இருந்து புறப்படும்முன் அந்தக் கோயிலிலுள்ள தாயின் சிலையை (சத்தியபாமா) வணங்கிவிட்டுத்தான் மக்கள் கூட்டத்திற்கு "கை" அசைத்தபடி செல்லுவார். இந்தக் காட்சியை முதல் முதலில் பார்த்தேன். அந்தத் தாய்ப்பாசம்தான் ஆரம்பக் கல்வியைக்கூட சரியாகப் படிக்காத அந்த நல்ல மனிதனை நாடாள வைத்தது என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தென்னிந்தியச் சினிமாவில் பலர் தாயிடம் மிகுந்த பாசம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். நடிகர் ரஜினிகாந், சூரியா, கார்த்திக்... என்று பட்டியல் உள்ளது. இசையமைப்பாளர் இளையராஜா தாய்க்கு கோயில் கட்டி வழிபடுபவர். ஒரு தடவை மறைந்த கவிஞர் வாலி ஒரு பாடலை எழுதினார். இளையராஜா இசையமைக்க கே.ஜே. ஜேசுதாஸ் பாடினார். இசையமைப்பாளர் பாடகர் நடிகர் அனைவரும் கண்கலங்கினார்கள் என்று சினிமா வரலாறு சொல்லுகிறது. அந்தப் பாடல்தான் இன்றும் கேட்போரை ஒரு நிமிடம் நிறுத்தி வைக்கும்.

அம்மா என்று அழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயின்றி வேறில்லையே!

நம் நாட்டிலும் தாய்ப்பாசம் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். பெயர் குறிப்பிட வேண்டாம் எனக் கருதுவதனால் விட்டு விடுகிறேன்.

முற்றும் துறந்த ஆதிசங்கரர் தாய்ப்பாசத்தில் இறுதிவரை வாழ்ந்தவர். தாயின் கடமையைச் செய்யும் காலம் வந்ததை உணர்ந்து தனது சீடர்களை விட்டுப் பிரிந்து, தாயிடம் வந்தார். தாயின் அந்திமக்காலம் வரை அவருடன் இருந்து பணிவிடை செய்தார்.

பட்டினத்தார் பொன்னையும் பொருளையும் மனைவியையும் துறந்தார். ஆனால் தாய்ப்பாசத்தை அவரால் துறக்கமுடியவில்லை. தாய்க்கு இறுதிக்கடன் செய்யும்வரை

*நமது மனதில் தூய்மை அதிகமாக இருந்தால் வலிமை அதிகமாக இருக்கும்.*

திருவொற்றியூர் கடற்கரையிலேயே வாழ்ந்தார். இப்படியாக இந்து மதப் பெரியவர்கள் தாய் அன்பின் மகிமையை நமக்கு வாழ்ந்து காட்டினார்கள்.

கருத் தரித்ததிலிருந்து, குழந்தை பிறக்கின்றவரை தாய் அனுபவிக்கின்ற துன்பங்கள், செய்கின்ற தியாகங்கள் அளவிடமுடியாதவை. குழந்தை பிறந்து, அதன் முகத்தைப் பார்த்த மறுகணமே தாய் தன்னுடைய பத்துமாத துன்பங்களுக்கும் கிடைத்தற்கரிய பரிசு கிடைத்துவிட்டதாக எண்ணி அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறாள். நாம் பிறப்பதற்கு முன் குடி இருந்த கோயில் தாயின் மணி வயிறுதான். அதனால்த்தான் தாய்ப்பாசத்திற்கு இணையானது உலகத்தில் வேறு எதுவும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

இந்துக் குடும்பத்தின் அடித்தளமாக தாய்தான் விளங்குகிறாள். சூரியனைச் சுற்றி மற்றக் கிரகங்கள் வலம் வருவதைப்போல, தாயைச் சுற்றித்தான் குடும்பத்திலுள்ள அனைவருமே இயங்கவேண்டும் என்பது இந்துமதம் வகுத்துக்காட்டுகின்ற பாதை.

தாய் வழிபாட்டுக்குரியவள் என்கிற உணர்வு குடும்பத்தில் நிலவ வேண்டும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமானால் தாய்மை மதிக்கப்படவேண்டும்.

பெண்ணை சக்தியின் வடிவமாகக் கண்டவர்கள் இந்துக்கள். தாய் சக்தி சொரூபம். "உண்டாக்கி, பாலூட்டி வளர்த்த தாயை உமையவள் என்று அறியீரோ" எனக் கேட்கிறார் பாரதியார். பெற்ற தாய் வணக்கத்துக்குரிய உமாப்பிராட்டிக்குச் சமமானவள். குடும்பம் என்கிற கோவிலில் பிரதிஷ்டை செய்யப்படவேண்டிய தெய்வம் தாய். இந்து மதம் தாய்க்குக் கொடுத்திருக்கிற மாற்றமுடியாத இடம் அது.

இன்றைய நவீன உலகில் பெண்ணின் செயற்பாடுகள் பலராலும் விமர்சனம் செய்யப்பட்டு வருகிறது. பெண்ணுக்குச் சொல்லப்பட்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால்வகைக் குணமும் சிலரால் கேள்வி யாக்கப்பட்டும் வருகிறது. பெண்ணுக்கு எது அழகு? என்றால் பெண்மைக் குணம் என்பதுதான் பதிலாக இருக்க முடியும். பெண்கள் ஆண்களுக்கு நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையகம் தழைக்கும். அதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. பெண்களை அடிமையாக்க முயல்பவர் பித்தர்களாகவே இருக்கமுடியும்.

உலக வாழ்க்கையில் நுட்பங்கள் தேறவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே.
தேச மோங்க உழைத்திடல் வேண்டும்.

-பாரதியார் பாடல்.

புரட்சிக் கவிஞர் பெண்களைச் சக்தி வடிவமாகப் போற்றினார். தனது புதுமைப் பெண் பாடலில் பெண் எப்படியிருக்க வேண்டும் என்பதை தெளிவாக விளக்கியுள்ளார்.

பெண்கள் விடுதலைக் கும்மியில் வரும் வரிகளைப் பாருங்கள்.

காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!

*சான்றோருக்கு அளிக்கும் கௌரவம், கடவுளுக்குச் செய்யும் மரியாதை.*

இப்பாடலின் இறுதி வரிதான் இன்று பெண்ணை விமர்சிப்பதற்கு காரணமாகும். "மாதர் அறங்கள்" என்பது தெரியாமல் இன்று நீதிமன்றத்தில் விவாகரத்தாகவும், ஆண்களை மதியாத் தன்மையும், குடும்பக் கடமைகளை உதறித்தள்ளுவதும்...... இவ்வாறு பல செயல்கள் அரங்கேறி வருகிறது. பெண்மை - தாய்மை தன் வழியில் இருந்து விலகி வேறு பாதையில் செல்லுமானால் ஏற்படக்கூடிய விளைவுகள் மிகவும் கொடூரமானதாக இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கணவன் குடும்பத் தலைவன் என்றும், மனைவி குடும்பத் தலைவி என்றும் அழைக்கப் படுகிறார்கள். யார் உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர் என்கிற பேச்சுக்கே இந்துக் குடும்ப அமைப்பு முறையில் இடமில்லை.

(தொடரும்...

## நம்பினோர் கெடுவதில்லை

நம்பினோர் கெடுவதில்லை - அது
நான்மறையின் தீர்ப்பென்பர்
உன்னாலே படைக்கப்பட்டோம் இறைவா
ஊமையாய் வாழ்கின்றோம் இங்கே.

ஊரிழந்து உறவிழந்து
வலுவிழந்து வாழ்விழந்து
ஏதிலிகளாய் வாழ்கின்றோம் - இறைவா
வாழிடங்கள் மீண்டும் செல்ல
வழி ஒன்று காட்டுமையா.

வெறுமையாய்ப் போன மனம்
வெம்பித் துடிக்குதையா
வாழ்ந்த வாழ்வு நிழலாய் - மனதை
வாட்டிப் புளியுதையா.
இன்று வரும் நாளை வரும் என்று
காத்திருந்தோம் காலமெல்லாம்
ஏமாற்றம் தான் எமக்கான பரிசு
வேண்டும் வேண்டும் எம்
எண்ணமெல்லாம் ஈடேற வேண்டும்.

போன வாழ்வு மீண்டுவர - இறைவா
எமக்குப் பேருதவி செய்யுமையா
சுற்றம் சூழ்ந்திருக்க
தொலைந்தவர்கள் மீண்டுவர
சுமையெல்லாம் அற்றுவிட
சித்தம் நிறைந்திருக்க - சந்நிதிக் கந்தா
திருவருளைத் தாருமையா
காத்திடுவாய் எம்மைக் காலமெல்லாம்.

-செல்வி அ. கந்தையா-

# ஆராலும் வெல்லமுடியாத அரும்பொருள் காட்சியகம்

– திரு கே.எஸ்.எஸ். ராஜா அவர்கள் –

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் 72 வருடங்கள் உருண்டோடி விட்டன. பாராளுமன்றமும், வடமாகாண சபையும் மின்னல் மின்னி மறைந்தாற்போல வந்ததும் போனதுமாயின. உருப்படியாக எதைச் செய்து முடித்தோம் என்ற கேள்விக்கு யாரைக் கேட்பது என்று தேடவேண்டியுள்ளது. எமது பூர்வீக வரலாற்றின் அடையாளங்களை மையம் கொள்ளுமாறு நிரந்தரமாக்கிப் பேணவும், பயன்பெறுமாறு காட்சிப்படுத்தவும் பாராளுமன்ற உறுப்பினர்களாலோ, படித்த கல்விசார் புலமையாளர்களாலேயோ இற்றைவரை முடியவில்லை. அவர்களால் முடியாததென்று எவராலும் சொல்ல முடியாது. ஏனென்றால் பணம் இருந்தது. அரச நிலம் இருந்தது. ஆளணி இருந்தது. ஆதரவு இருந்தது. சொத்துப் பத்துக்கள் ஏராளம் இருந்தது. மலிவான விலையில், காணிகளும் நாற்சார் வீடுகளும் நிரம்பிக் கிடந்தன. இத்தனை அசையும் அசையாச் சொத்துக்கள் இருந்தபோதும் தூர நோக்கோடு தமிழர்தம் மரபுரிமைகளைப் பாதுகாக்கவேண்டுமென்று எவரும் சிந்திக்கவே இல்லை. சுயநலமாகவே சிந்திக்கின்றார்கள். இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே செய்யமுடியாத உன்னதமான ஒரு அரும்பெருங் காட்சியகத்தை 12 பரப்புக் காணியில் மூன்று மாடிக் கட்டிடங்கள் பயன்படும்படியாக அமைத்திருப்பது இமாலய சாதனையாகும். ஒவ்வொரு அங்குலத்தையும் நூதனங்களாலே



*விதியின் முன் கெஞ்சாமல் எதிர்த்து வேலை செய்வதே மனித சுதந்திரம்.*


ஆதனங்களாக்கப்பட்டுள்ளன. ஆறு திருமுருகனின் அற்புதம் இது! ஆனந்தம் இது. மன்னர்கள் தொடக்கம் மாதவம் புரிந்த ஞானிகளும்;

மண்ணும் மனிதமுமாக வாழ்ந்த
மாண்புடைய புலவர்களும், பண்டிதர்களும்;
விண்ணவரும் நண்ணிடும்படியான
சமய தமிழ் ஒப்புரவாளர்களும்;
கண்களையே களைக்க வைக்
கும் காண்பரிய ஊடக ஏடுடைய
ஒலி ஒளி விம்பங்களும், பிம்பங்களும்;

பண்சுமந்த பாரம்பரிய பண்பாட்டு மரபுவழி சிற்பங்களும், சித்திரங்களும் பத்திரங்களும், பாத்திரங்களும், அழகு ஒழுகும் ஆதியந்தமுடைய பொக்கிஷங்களும் முதுசொம்களும் சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகரும் இயக்குநரும் தலைவருமான திரு ஆறு. திருமுருகனையும், சிவபூமி அறக்கட்டளை குடும்பத்தவர்களையும் வணங்கவும் வாழ்த்தவும் வரம் பெறவும் வைத்துள்ளன. நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து முதிர்ந்து எதைச் சாதித்தோம் என்ற கேள்விக்கு விடைதேட இனியாவது ஓர் உபகாரத்தை இந்த அரும் பொருள் நூதன சாலைக்குக் காணிக்கை ஆக்குவோம். அவை ஏடாகவோ, சுவடியாகவோ, படிமமாகவோ, பத்திரமாகவோ, பாத்திரமாகவோ, நூலாகவோ, நாணயமாகவோ, நகை வகைகளாகவோ, சிற்ப சித்திர வடிவங்களாகவோ, வார்ப்புக்களாகவோ, கோப்புக்களாகவோ எதுவாகவோ இருக்கட்டும். ஆம்! சிவபூமியைத் தவபூமியாக்குவோம். கண் துயின்று அவமே காலத்தை வீணாக்காமல், சீவனைச் சிவமாக்குவோம்.

சந்திரனில் ஒரு ஆம்ஸ்ரோங் சாதனை படைத்ததுபோல, நம் மண்ணில் ஒரு ஆறு திருமுருகன் கால் பதித்து நமக்கு வரமாகின்றார். சிகரம் தொட்ட சாதனையைக் காண்பீர்! தொட்டு வணங்குவீர்! வாழ்த்துவீர்.

## துயர் பகிர்கின்றோம்



சைவமும் - தமிழும் பேச்சும் மூச்சுமென சேவையாற்றி வருபவரும், சந்நிதியான் ஆச்சிரமத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவருமான திரு ஆறு. திருமுருகன் அவர்களின் மைத்துனர் முத்துக்குமாரு விஜயரகுநாதன் அவர்கள் 03.01.2020இல் சிவபதமடைந்தார்.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் திரு ஆறு. திருமுருகன், அவரது குடும்பத்தார் அனைவருக்கும் ஆச்சிரமத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் முத்துக்குமாரு விஜயரகுநாதன் அவர்களது ஆத்மா எல்லாம் வல்ல எம்பெருமான் திருவடிகளில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

# சந்நிதியான் ஆச்சிரமம் சமுதாயப் பணிகள் - 2019

– தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம் –

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகள் பலதிறப்பட்டவை. நித்திய அன்னப்பணி ஆச்சிரமத்தின் பிரதான அம்சமாக இருந்தபோதிலும் ஏனைய கல்விப்பணி, மருத்துவப்பணி, மலையகப்பணி எனப் பல்வேறு பரிமாணம் பெற்று வந்த வரிசையில் கடந்த ஆண்டினில் (2019) வன்னிப் பகுதியிலும் கால்பதித்து பல்வேறு நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பல்கலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட குடும்பங்களுக்கான மாதாந்த உதவிகள் என்பன மாதந் தவறாது வழங்கப்பட்டு வருவதற்கும் மேலாக கடந்த ஆண்டினில் மேற்கொள்ளப்பட்ட சமுதாய உதவிகள் கீழே தரப்பட்டுள்ளன.

*05.01.2019 சனி:*

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு - பனிக்கன்குளம் - கிழவன்குளம் கிராமத்தில் 04 குழந்தைகளுடன் வசித்துவரும் மாற்றுத்திறனாளியான பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் என்பவரின் குடும்பத்திற்கு 5000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும், பிள்ளைகளுக்கு வேண்டிய கற்றல் உபகரணங்களும் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*27.01.2019 ஞாயிறு:*

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் வசித்துவந்த புவனேஸ்வரன் டிலானி எனும் சிறுமியின் மரணம் காரணமாக துயருற்றிருந்த அவரது தாய் தந்தையரின் வறுமை நிலையறிந்து ரூபா 15000. 00 பணமும், ரூபா 5000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*01.02.2019 வெள்ளி:*

நவக்கிரி யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் தரம் 10இல் கல்வி பயிலும் மாணவி செ. மேனிலா என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*17.03.2019 ஞாயிறு:*

கல்முனை ஸ்ரீ சந்தான ஈஸ்வரர் ஆலய இராஜகோபுர கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக ரூபா ஒரு லெட்சம் (100,000. 00) நேரில் சென்று வழங்கப்பட்டது.

*நட்பு என்ற புனிதமான உணர்ச்சி இனிமையானது, நிலையானது, விசுவாசம் நிறைந்தது.*

*25.03.2019 ஞாயிறு:*

மாங்குளம் - கனகராஜன் குளத்தில் வசித்துவரும் சோபனா என்பவரின் வீட்டிற்கு, அவரது வறுமைநிலை கருதி- புதிதாக மின் இணைப்பு பெறுவதற்கான (பொருட் செலவு- கூலி) முழுச் செலவுமாக ரூபா 68,500. 00 வழங்கப்பட்டது.

*29.03.2019 வெள்ளி:*

1) யா/ திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் திக்கத்தைச் சேர்ந்த மாணவன் து. தருண் என்பவருக்கு துவிச்சக்கரவண்டியும்...

2) யா/ வலி. தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களின் பரிசளிப்பு விழாவிற்காக 265 சிறுவர் கதைப் புத்தகங்களும்....

வெள்ளி வாராந்த நிகழ்வு வேளையில் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

*28.03.2019 வியாழன்:*

கிளிநொச்சி தேவிபுரம் குடியேற்றத் திட்டத்தின்கீழ் வசித்துவரும் மக்களின் நன்னீர் தேவைக்காக ஒரு குழாய்க்கிணறு தோண்டப்பட்டு மக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டது. இதன் மொத்த செலவீனம் ரூபா 2,50,000. 00 ஆகும். ரூபா 1,25,000 லண்டனில் வசிக்கும் கமலாகரன் என்பவர் கஜனிமூலம் வழங்கிய நிதியூடாகவும், மிகுதி ரூபா 1,25,000. 00 சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கிய நிதிப் பங்களிப்பின் மூலமும் இந்த மக்கள் பணி நிறைவேற்றப்பட்டது.

*12.04.2019 வெள்ளி:*

முருகேசு சுவாமிகளின் 22ஆவது குருபூஜை விசேட நிகழ்வினில் வைத்து, வல்வெட்டித்துறை யா/ சிவகுரு வித்தியாசாலையில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவி மதியழகன் லக்ஷிகா என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

*17.05.2019 வெள்ளி:*

1) பருத்தித்துறை யா/ சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயிலும் குமரேசன் கலைவேந்தன்,

2) பருத்தித்துறை யா/ வட இந்து மகளிர் கல்லூரியில் தரம் 05இல் கல்வி பயிலும் நாகராஜா நந்துஜன்,

3) வல்வெட்டித்துறை யா/ சிதம்பரக் கல்லூரியில் தரம் 09இல் கல்வி கற்கும் ஜெயகாந்தராசா பிரசன்னா,

ஆகிய மூவருக்கும் 17.05.2019 வெள்ளியன்று நடைபெற்ற வைகாசிப் பெருவிழா நாளில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*அளவில்லாத வேதனைகளைத் தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.*

*22.05.2019 புதன்:*

1) புளியங்குளம் - அனந்தர் புளியங்குளம் கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ நாக கண்ணகை அம்மன் ஆலய கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 50,000. 00 வங்கியில் இடப்பட்டது.

2) மட்டக்களப்பு தமிழ் பத்ததிப் பள்ளியின் வளர்ச்சிக்காக ரூபா 50,000. 00 வங்கியில் இடப்பட்டது.

*01.06.2019 சனி:*

புத்தளம், ஏத்தாலை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் புனர்நிர்மான வேளையில் ஒரு லெட்சத்து அறுபத்தையாயிரம் (1,65,000. 00) பெறுமதியான விக்கிரகங்கள் வழங்கப்பட்டன.

மாத்தளையைச் சேர்ந்த அருள் என்பவருக்கு சத்திர சிகிச்சைக்காக ரூபா 25,000.00 வழங்கப்பட்டது.

*20.06.2019 வியாழன்:*

கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் பராபரிப்பு இல்லத்திற்கு ரூபா 65,000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

*28.06.2019 வெள்ளி:*

1) ய. கௌசிகன் - தரம் 07
(யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
2) சு. சாரங்கன் - தரம் 09
(யா/ புட்டளை மகாவித்தியாலயம், பருத்தித்துறை)
3) சோ. சுகிர்தன் - தரம் 08 வல்வெட்டித்துறை

ஆகிய மூவருக்கும் 28.06.2019 வெள்ளி வாராந்த நிகழ்வினில் வைத்து துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*22.07.2019 திங்கள்:*

பொலநறுவை சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பிரதி ஞாயிறு தோறும் வழங்கப்படும் மதிய உணவிற்காக வாரந்தோறும் ரூபா 5000. 00 வழங்கப்பட்டு வருகிறது.

கொக்குவிலைச் சேர்ந்த திருமதி ஆறுமுகசாமி அவர்களுக்கு கண் சத்திர சிகிச்சைக்காக ரூபா 65,000. 00 வழங்கப்பட்டது.

*26.07.2019 வெள்ளி:*

யாழ்ப்பாணம் யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு கீழ்க்காணும் பரிசுப் பொருட்கள் வாராந்த வெள்ளி நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

100 கொப்பி - 80 பக்கம், 100 கொப்பி - 40 பக்கம், 50 கொம்பாஸ்
10 டசின் பென்சில், 01 பெட்டி பேனா, 20 CR கொப்பி

*29.07.2019 திங்கள்:*

பண்டாரவளை மெதபத்தன எல்ல பகுதியைச் சேர்ந்த P. ஜெகநாதன் என்பவருக்கு மலசலகூட மீள் புனரமைப்புக்காக ரூபா 25,000. 00 வழங்கப்பட்டது.

பண்டாரவளையில் அயிஸ்லெபி ஸ்ரேற்றிலுள்ள அயிஸ்லெபி ஸ்ரீ பாலதண்டாயுத பாணி சுவாமி ஆலயத்தின் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 50,000. 00 வழங்கப்பட்டது.

*06.08.2019 செவ்வாய்:*

அப்புத்தளை கோயா - ஏநீட்வூட், ஹஸ்துமுல்லையைச் சேர்ந்த த. வினோதன் என்பவரின் தந்தையின் சத்திர சிகிச்சைக்காக ரூபா 25,000. 00 வழங்கப்பட்டது.

*07.08.2019 புதன்:*

திருகோணமலை சாம்பல்தீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிரியர் து. விவேகானந்தன் அவர்களது வாழ்வாதார உதவிக்காக ரூபா ஒரு லெட்சம் (ரூபா 1,00,000.00) வழங்கப்பட்டது.

*12.08.2019 திங்கள்:*

செட்டிக்குளத்தில் அமைந்துள்ள வவ்வாலை சிவன் கோவில் (சந்திரசேகர ஈஸ்வரர் ஆலயம்) கட்டிட புனர்நிர்மாணப் பணிகளுக்காக ரூபா ஒரு லெட்சம் (ரூபா 1,00,000. 00) வழங்கப்பட்டது.

*05.08.2019 திங்கள்:*

மலையகம் பல்லக்கெட்டுவ எனும் இடத்தில் வசித்துவரும் து. கோகிலா என்பவருக்கு, அவரது வெளிவாரிப் பட்டப்படிப்பு செலவினங்களுக்காக ரூபா 40,000. 00 வழங்கப்பட்டது.

*30.08.2019 வெள்ளி:*

யா/ நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையில் தரம் 05இல் கல்வி கற்கும் மாணவர்களான, ரா. திலக்ஷனா, கி. தரணிகா,ச. கம்ஷவர்த்தனன் ஆகிய மூன்று மாணவர்களுக்கும் துவிச்சக்கரவண்டிகளும்,

யாழ்ப்பாணம் 41/7 மானிப்பாய் வீதியைச் சேர்ந்த சற்குணராசா பிரியதர்சினி என்பவருக்கு தையல் இயந்திரமும் வெள்ளி வாராந்த நிகழ்வினில் வைத்து வழங்கப்பட்டது.

*23.09.2019 திங்கள்:*

மொட்டிஹோம் டிவிசன், பிறொண்சிவிக், மஸ்கெலியா எனும் விலாசத்தில் வசிக்கும் திருமதி தீபன் மங்களரூபினி என்பவரின் கற்கை நெறிகளுக்கான உதவியாக ரூபா 35000.00 நேரில் சென்று வழங்கப்பட்டது.

*27.09.2019 வெள்ளி:*

பருத்தித்துறை பிரதேச செயலகம் நடாத்தும் முதியோர்தின நிகழ்வுக்காக 15 உடு புடவைகளும், 15 சாரமும் செயலக பிரதிநிதியிடம் வெள்ளி நிகழ்வினில் வைத்து வழங்கப்பட்டது.

*06.10.2019 ஞாயிறு:*

யா/ அல்வாய் வடக்கு றோமன் க.த. பாடசாலையில் நவராத்திரி விழாவினை முன்னிட்டு, கொப்பி - பென்சில் - கொம்பாஸ் - கலர்சோக் பெட்டி உட்பட்ட ரூபா 35,000.00 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஆச்சிரமத்தின் அயல் கிராமங்களில் உள்ள ச.ச. நிலையங்களின் தெரிவுப் பட்டியலின்படி 70 வயதுக்கு மேற்பட்ட 88 மூத்தோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றபோது 10கிலோ அரிசி, போர்வை, சாரம், உடுபுடவை, பழம் பிஸ்கற் அடங்கிய பொதி வழங்கப்பட்டது.

*16.10.2019 புதன்:*

தொண்டைமானாறு சந்நிதி கோவிலடியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் உதயராணி குடும்பத்தினரின் வீட்டுத் திருத்த வேலைகளுக்காக ரூபா ஒரு லெட்சம் ரூபா பெறுமதியான (1,00,000.00) தளபாடங்கள் வழங்கப்பட்டது.

*18.10.2019 வெள்ளி:*

1) கரவெட்டி பிரதேச செயலகத்தின் முதியோர் தினத்திற்காக 15புட்டி அரிசியும்,

2) யாழ்ப்பாணம் - மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினரின் முதியோர் தின விழாவிற்காக 50 உடுபுடவைகளும்,

அந்தந்த அலுவலகப் பிரதிநிதிகளிடம் வெள்ளி வாராந்த நிகழ்வு வேளையில் வைத்து வழங்கப்பட்டது.

*20.10.2019 ஞாயிறு:*

பொலநறுவை, சமனப்பிட்டி ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலையின் ஆசிரியைகளுக்கு தீபாவளியை முன்னிட்டு உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

*25.10.2019 வெள்ளி:*

1) மருதங்கேணி பிரதேச செயலகத்தின் முதியோர் தின விழாவிற்காக 35 உடுபுடவைகள் வழங்கப்பட்டது.

2) சந்நிதியில் வசித்துவரும் மா. சின்னையா என்பவருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டது.

*26.10.2019 சனி:*

கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கு ரூபா 55,000. 00 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

*10.11.2019 ஞாயிறு:*

யுத்தசூழல் காரணமாக பூசை எதுவுமின்றி பொலிவிழந்து இருந்த அநுராதபுரம் நேகம அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் "சந்நிதியான் ஆச்சிரமத்தின் முழு அனுசரணையுடன் 10.11.2019இல் நடந்தேறியது.

***21.11.2019 வியாழன்:***

வவுனியா பழைய மணிபுரம் சிரஞ்சீவி ஜெயமங்கள ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேகத்திற்காக ரூபா 18,000. 00 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

***16.12.2019 திங்கள்:***

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் பௌர்ணமி விழாவிற்காக ரூபா 5000.00 வழங்கப்பட்டது.

***27.12.2019 வெள்ளி:***

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி கஸ்தூரி சந்திரகுமார் என்பவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.

## வைகுண்டம் எவ்வளவு தூரம்

முன்னொரு காலத்தில் ஓர் அரசனுக்குத் திடீரென்று ஓர் ஐயம் ஏற்பட்டது. "நான் நாள்தோறும் வணங்கும் பெருமாள் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் அந்த வைகுண்டம் இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கும்" என்பதே அந்த ஐயம்.

அரசவையில் இருந்த புலவர்களைப் பார்த்து அவர், "இங்கிருந்து வைகுண்டம் எவ்வளவு தொலைவில் உள்ளது?" என்று கேட்டான்.

"எங்களுக்குத் தெரியாது" என்று சொன்ன புலவர்கள் "அடியார் பெரியதாசருக்குத் தெரிந்திருக்கும்" என்றார்கள். உடனே பெரியதாசரை அரண்மனைக்கு அழைத்துவர ஆள் அனுப்பினான் அரசன். பெருமாளையே எப்பொழுதும் வழிபடும் எனக்கு அரண்மனையில் என்ன வேலை" என்று முதலில் மறுத்த அவர் வீரர்களின் வற்புறுத்தலை ஏற்று அரண்மனைக்கு வந்தார்.

பெரியதாசரைச் சிறப்பாக வரவேற்ற அரசன் உயரிய இருக்கையில் அவரை அமர வைத்தான். "வைகுண்டம் இங்கிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது" அதை அறியவே உங்களை அழைத்தேன்" என்றான். இறை தொடர்பான கேள்விதான் நம்மிடம் கேட்கிறார்கள் என்று மகிழ்ந்தார் அவர்.

"அரசே! நம் ஊர்ப் பெருமாள் கோயிலை மட்டுமே நான் அறிவேன். வைகுண்டம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பது எனக்குத் தெரியாது. கண்ணால் கண்டால் மட்டுமே நாம் எதையும் நம்பலாம். கண்ணால் உணர முடியாதவற்றை அனுமானத்தின் வாயிலாக நம்புகிறோம்.

இந்தப் பூவுலகில் கஜேந்திரன் என்ற யானை ஆதிமூலமே என்று குரல் கொடுத்தபோது இறைவன் வைகுண்டத்திலிருந்து வந்து அந்த யானையைக் காப்பாற்றி இருக்கிறார். ஆகவே இங்கிருந்து வைகுண்டம் கூப்பிடு தூரத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட அரசன் மகிழ்ந்தான்.

*உலகில் தன்னம்பிக்கையே நிகரில்லாத செல்வம்.*

# 2019ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. எவன் படுத்தவுடன் நித்திரை போகின்றானோ அவனை | தை | 57 |
| 2. நிர்வாணம் | பங்குனி | 47 |
| 3. காம, குரோத, லோப, மோக மதமாற்சரியங்கள் | ஐப்பசி | 20 |
| 4. சொர்ணபானு | மாசி | 32 |
| 5. பாம்பன் சுவாமிகள் கால் முறிந்திருந்தவேளை மயில்களை தான் கண்ட அந்த நாளை | தை | 51 |
| 6. மனச்சாட்சிக்கும் தெய்வத்திற்கும் அஞ்சி வாழ்பவன் | ஐப்பசி | 29 |
| 7. நம்முள் இருக்கும் அறிவே | புரட்டாதி | 15 |
| 8. திருவண்ணாமலை | ஆவணி | 27 |
| 9. பெரியார் இராசரெத்தினம் | தை | 43 |
| 10. நியாயம் | சித்திரை | 53 |
| 11. தெட்சணாமூர்த்தி | மாசி | 49 |
| 12. இது எங்கள் நாடு, எல்லோருக்கும் உரிய நாடு என்று சொல்லத் தவறுபவன் | பங்குனி | 23 |
| 13. திருவள்ளுவர் | மாசி | 18 |
| 14. எமது உள்ளமாகிய மலரை இறைவன் பாதங்களில் மெய்யன்புடன் சமர்ப்பித்தல் | வைகாசி | 47 |
| 15. சரணாகதி அடைந்த பக்குவம் | புரட்டாதி | 53 |
| 16. பேரின்பம் | ஆவணி | 49 |
| 17. ஊக்கத்தையே தருகின்றது | பங்குனி | 41 |
| 18. ஆலயங்கள் | சித்திரை | 34 |
| 19. துளசிச்செடி | வைகாசி | 15 |
| 20. திரு சிவ. மகாலிங்கம் | மாசி | சு.த.தகவல் |
| 21. கனகரெத்தினம் சுவாமிகள் | ஆடி | 34 |
| 22. சிக்கனமும் சேமிப்பும் | ஆனி | 23 |
| 23. பெரியபுராணம் | ஆடி | 35 |
| 24. பார்த்துச் செய்தல், பின்பற்றுதல், பார்த்துப் பழகல் | ஆனி | 03 |
| 25. சித்திரகுப்தர் | சித்திரை | 12 |




**1ஆம் பரிசு** — **திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
சீரடி இல்லம், வீமன்காமம் தெற்கு,
தெல்லிப்பழை.

**2ஆம் பரிசு** — **K. சாம்பவி**
1152, கே.கே.எஸ். வீதி
காங்கேசந்துறை.

**3ஆம் பரிசு** — **திருமதி ஜெயமலர் குகனாநந்தன்**
159/2 கே.ஆர். ஒழுங்கை, பலாலி வீதி,
கோண்டாவில்

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. செல்வி வா. நிஷாந்தினி**
இல. 54/11 கற்பக விநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**2. ந. லக்ஷிமிநாத்**
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

**3. மு. சரஸ்வதி**
சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.

**4. சபாநேசன் லவ்லி**
ஆழியவளை,
தாளையடி.

**5 திருமதி மதுரை மீனாம்பாள் சிறீஸ்கந்தராசா**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**6. திருமதி நிர்மலாதேவி பாலசுப்பிரமணியம்**
280, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**7. திருமதி வத்சன் சத்தியவாணி**
இல.7, பயணியர்வீதி,
மட்டக்களப்பு.

**8. வ. செந்தில்நாதன்**
64/1 மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.

**9. திருமதி செ. வசந்தாதேவி**
21/2 இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

**10. ஐயாத்துரை குணரட்ணம்**
வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (28.02.2020) வழங்கப்படும்.**

*இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

– **செல்வி சி. நிலா** அவர்கள் –

மதிய உணவினை நாம் நிறைவுசெய்த பின் எமது பேருந்து தாந்தாமலையை நோக்கி பயணப்பட்டது. ஐயாவுக்கும் நாம் போகும் பாதைகள் அனைத்தும் புதியனவாகவும், பழக்கமில்லாததாகவும் இருந்த காரணத்தால் எம்மோடு வழிகாட்டியாக வந்த உதயண்ணாவை முன்நிறுத்தி சாரதியாக பேருந்தைச் செலுத்திச் சென்ற கிருபா அண்ணாவுக்கு வழியைக் காட்டுமாறு கூறிவிட்டு ஐயா அமைதியாக தனது இருக்கையில் அமர்ந்துவிட்டார். போகும் பாதையோ குண்டும் குழியுமாகவும் கிரவல் மண்ணால் போடப்பட்டதாகவும் இருந்த காரணத்தால் வாகனத்தின் ஓட்ட வேகம் மிகவும் குறைவாகவே இருந்தது. அதோடு நாம் போன பாதை மனித சஞ்சாரம் அற்றதாகவும், ஒரு சில பகுதிகள் காட்டுப் பாதையாகவும் இருந்தது. ஆனாலும் உதயண்ணாவின் வழிகாட்டலும், கிருபா அண்ணனின் சாதுர்யமான சாரதித்துவத்தாலும் மாலை நான்கு மணியளவில் மலையின் அடிவாரத்தை நாம் அடைந்தோம்.




நாம் அனைவரும் அரோகரா என்ற கோஷத்துடன் பேருந்தில் இருந்து கீழே இறங்கியதும் சுற்றுப்புறத்தை ஆராய்ந்தேன். நமக்கு எதிரில் ஒரு மலை. அதன் உச்சியில் ஒரு சிறிய ஆலயம். மலையின் அடிவாரத்தில் ஒரு சில ஆலயங்கள் இருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகத்தான் ஆலய உற்சவம் நடைபெற்று முடிந்ததற்கடையாளமாக பல இடங்களில் கல்லெடுத்து அடுப்புமூட்டி உணவு தயாரித்தபின் விட்டுப்போன அடையாளங்களுடன் சிறு சிறு வியாபார நிலையங்களும் உற்சவ காலத்தில் கலந்துகொண்ட ஒரு சில அடியார்களையும் காணக்கூடியதாக இருந்தது.

மலை அவ்வளவு உயரமில்லாவிட்டாலும் சுமாரான உயரமாகவே இருந்தது. ஆனால் மலையில் படிகளோ, பிடிமானங்களோ ஒன்றும் இல்லை. ஒரு சில இடங்களில் வழுக்குப்


பாறைபோல் இருந்தது. ஆனாலும் ஐயா அவர்கள் மலையில் எல்லோரையும் ஏறும்படி பணித்து தான் இறுதியாக வந்து கொண்டிருந்தார். ஏறுவதற்கு கீழே இருந்த தயக்கம் மலையில் ஏறத் தொடங்கியதும் காணாமல் போய்விட்டது. பேருந்தில் வந்த அனைவரும் மேலே ஏறி விட்டோம். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். ஏற இயலாது என்ற எண்ணத்தில் இருந்த எங்களை முருகன் மேலே கூட்டிவந்து விட்டார் எனும் மன எண்ணத்துடன் மலையில் ஆலயம் அமைந்த சுற்றாடலைப் பார்த்தபொழுது அங்கேயே தங்கி இருக்கலாம் என்ற எண்ணத்தை உருவாக்கியது.

நாம் போன சமயம் ஆலயம் பூட்டப்பட்டு இருந்தது. மூலமூர்த்தி வீற்றிருக்கும் மூலஸ்தானத்துடன் ஒரு சிறு மண்டபமும் அமைந்ததாக ஆலயம் இருந்தது. நாம் அனைவரும் முன் மண்டபத்தில் அமர்ந்து பஜனை வழிபாட்டில் ஈடுபட்டோம். அப்போதுதான் ஒன்றைக் கவனித்தேன். ஆலய மேல் விதானமெல்லாம் விநாயகர் சிலையையே அமைத்திருந்தார்கள். முருகன் ஆலயம் என்று நாம் நினைக்க மலையின் உச்சியில் விநாயகர் ஆலயம். அநேகமாக குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் வீற்றிருப்பான் என்ற வாக்கிற்கு அமைவாக இல்லாமல் மேலே விநாயகர் அமைந்திருந்தது எல்லோருக்கும் வியப்பாகவும் அதிசயமாகவும் இருந்தது.



ஐயா உட்பட எம் அனைவருக்கும் தாந்தாமலைப் பயணம் புதிதாக இருந்தமையால் வழிபாட்டிற்கு வந்த அடியவரை அழைத்து முருகனாலயம் எங்கு உள்ளது. இங்கே விநாயகர்

வீற்றிருக்கின்றாரே என்று வினவியபொழுது, முருகனாலயம் மலையின் அடிவாரத்தில் இருப்பதாகவும், கீழே இறங்கித்தான் அவரை வழிபடவேண்டும் என்றும் கூறினார். நாம் அனைவரும் மலையின் அடிப்பாகத்தை அடைந்து ஒரு புறமாக மரக்கூட்டங்களுக்கிடையே இருந்த முருகனை தத்தமக்கு ஏற்ற வகையில் தேங்காய் உடைத்தும், கற்பூரம் கொளுத்தியும் வழிபாட்டில் ஈடுபட்டோம். ஆனாலும் மலையில் முருகன் இருப்பார் என்ற எண்ணத்தில் வந்த எமக்கு "நான் கீழே இருக்கின்றேன். மேலே என் அண்ணன் கணபதி இருக்கின்றார். போய் வழிபடுங்கள். பின்பு என்னிடம் வாருங்கள்" என்ற கருத்தை வலியுறுத்தும் வண்ணம் தாந்தாமலை வழிபாடு அமைந்திருந்தது. மலையின் மேல் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு நாம் அனைவரும் கீழிறங்கும்போது நன்கு களைத்திருந்தோம். எமது களைப்பைக் கவனித்த ஐயா கீழிறங்கி முருகனைத் தரிசித்தபின் அனைவரும் சோடா அல்லது இளநீர் குடிப்போம். அதற்கு முன் வழிபாட்டை முடிப்போம் என்று கூறியதன்



பிரகாரம் எமது வழிபாட்டை முடித்து பேருந்தில் ஏறி அமர்ந்திருந்தோம். உண்மையில் மலை ஏற வேண்டும் எனும் ஆர்வத்தினால் ஏறும்பொழுது நிலச்சூடு தெரியவில்லை. ஆனால் இறங்கும்போதுதான் சூட்டின் தன்மையை உணரக்கூடியதாக இருந்தது. ஆனாலும் ஐயாவின் எண்ணப்படி மலை அடிவாரத்தில் சோடாவோ, இளநீரோ இருப்பதற்கான சாத்தியக்கூற்றினைக் காணமுடியவில்லை. வழிகாட்டியாக வந்த உதயண்ணாவும் இங்கே ஒன்றும் கிடைக்காதுபோல் இருக்கிறது. திருவிழா முடிந்த காரணத்தால் மக்கள் கூட்டத்துக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கடைகள் யாவும் அகற்றப்பட்டு விட்டது. போகும் வழியில்த்தான் பார்க்க வேண்டும் என்று கூறியதும் ஐயாவும் சரி என்ன செய்வது. போகும் பாதையில் பார்ப்போம் என்றதும் சாரதியான கிருபா அண்ணா பேருந்தினைச் செலுத்த முற்பட்டார். அந்த நேரம் முருகன் அருளாடலை நாம் அனைவரும் உணரக்கூடியதாக இருந்ததோடு மட்டுமல்லாமல் ஆச்சரியப்படக்கூடிய சம்பவம் ஒன்று நடைபெற்றது.

(தொடரும்...

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

07.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "பண்ணிசை"

வழங்குபவர் :- திரு சி. தில்லைமணி அவர்கள்

[நல்லை ஆதீன ஓதுவார்]

---

14.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

21.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" **(தொடர்)**

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

28.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணம்]

## 266ஆவது மலர்

பதிவு இல: *QD/78/NEWS/2020*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

